ப. ...லா ஹிற்றஹ்மா ஙிற்றஹீம்.

5 APR 1932

# இரத்தின முகம்மது

## காரண சரித்திர வசன ரூபகம்

முன்னர்பேட்டை ஆமூர்
வா. அப்துல்காதிறு சாகிபவர்க ளியற்றியது.

கண்ணகுமது மகுதூ முகம்மதுப்புலவர்
அவர்களால்
வசனரூபமாகச் செய்யப்பட்டது.

...ரத்தின நாயகர் ஸன்ஸ்,
...விலாச அச்சியந்திரசாலை,
சென்னை.

...1932. [அணா 8.

பிஸ்மில்லா ஹிற்றஹ்மா னிற்றஹீம்.

# இரத்தின முகம்மது

## காரண சரித்திர வசன ரூபகம்

### முகவுரை.

### அறபு வாக்கியம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமின், வல்ஆகிபத்து லில் முத்தகீன், வஸ்ஸலாத்து, வஸ்ஸலாமு, அலா றசூலிஹி, ஸையிதினு முஹம்மதின் வஅலா ஆலிஹி, வஸஹ்பிஹி, அஜ்மயீன்.

### தமிழ் வாக்கியம்.

எல்லாப் புகழையும், வணக்கத்தையு மேற்கின்ற அல்லாஹுத் தஆலாவுடைய திருத்தூதராகிய நபி முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் பூர்விகத்தில் சகல வஸ்து களுமுண்டாகிறதற்கு முதற்காரணமாக முற்றோன்றியா யிருந்ததும்.

அப்படி யவர்கள் வஸ்துகளுண்டாயின பின்னர், பூலோகத்தில் மனுடரூபமாய்ப் பிறந்து வளர்ந்தும், தீனின் இசுலாமென்னும் பயிரை விளைத்ததும், அதிலே காண்பிவித்த சில காரணங்களும், மிகுறாஜிவிற்குப் போனதும், திருமக்கமா நகரத்தில் நின்றுந் திருமதீனமா நகரத்திற்கு கிஜுறத்தானதும் ஆகிய இவைகளெல்லாம் கசசுல்லன்பியா, பாவாயிதுல்புதூரியா, ஹஸ்துபேஹஸ்துஜிஹுஸ்ஹீர்தஹாயிக்குல் அக்பார், நூறுநாமா, மதாரிஜின்னுபுவா முதலாகிய பல பல கிதாபுகளி லெழுதி யிருந்தவைகளிற் சிலவற்றைத் தெரிந்தெடுத்துக் கோர்வை செய்து, இரத்தின முஹம்மது காரண சரித்திர வசனரூபகமென்று பேர் கொடுத்து,

பேட்டை ஆம்பூர் வா. அப்துல் காதிறு சாகிபவர்க ளச்சிட்டுப் பிரசுரஞ்செய்த புத்தகம் எழுத்துச் சொற்பொருட்கள் மிகவுஞ் சிதைந்து கிடந்தமையால், அவைகளைச் சீர்த்திருத்தி ஒழுங்காக அச்சிட்டுத் தரவேண்டுமென்ற நமதுடற் பிறந்தான்மார்களி லனேகர்கள் கேட்டுக்கொண்டமையால் விளங்காது கலவரமாகக் கிடந்தவைகளை யாவருக்கு மெளிதில் விளங்கும் பொருட்டு நன்றாகப் பரிசோதித்து வழக்கத் தமிழினாலே திருத்தி யெழுதி அச்சிட்டுக் கொடுக்கலாயினம். எல்லாவற்றிற்கும் அல்லாஹுத்தஆலா கிருபை றஹ்மத்துச் செய்வானாகவும். ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

இங்ஙனம்,

சென்னை மூகம்மதிய புத்தக பரிபாலனத் தலைவர்
நண்ணகுமது மகுதூ மூஹம்மதுப் புலவர்.

172347

# இரத்தின முஹம்மது

## நூற்பயன்.

நபிமுஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவாய்மலர்ந்தருளிய ஹதீதுகள் இந்தக் கிதாபில் அடங்கியிருக்கின்றமையால், யாதாமொரு மூமினானவன் இதை வாசித்தாலும், இன்பமாகக் காதுகொடுத்துக் கேட்டாலும், வாசிக்கத் தெரியாதவன் வாசிக்கத் தெரிந்தவரை வாசிக்கச் சொல்லிக் கேட்டிருந்தாலும், வாசிக்கவேண்டுமென்று ஆசையோடும் கித்தாபை வாங்கியேனும் எழுதியேனும், வைத்திருந்தாலும், அப்பேர்ப்பட்டவனுக்கு அல்லாஹுத்தஆலா இந்த இம்மையில், வாழ்வும் பறக்கத்தும், வெற்றிமாராயமும், சங்கையும், நற்குணமும், நற்செய்கையும், நல்வழி யொழுக்கமும், நிறைந்த பூரண வணக்கத்தின் தச்வாவும் கொடுத்து,

மறுமையில் நரகவேதனையும், கொடூரமான கேள்வியும் நெருக்கமான வருத்தமும், கண்டிப்பான தண்டனையும், இல்லாமலாக்கிச் சோர்க்கவாழ்வும், அதிலுள்ள கூறுல்ஹீனென்னுந் தேவரம்பையருடைய அனுபோக வாழ்க்கைப் பேரின்பமும், கவுலல்க்கவுதர் ஆற்றின் தண்ணீரும், ஆபே ஹயாத்தின் தண்ணீரும், நன்மை தீமை நிறுக்கும் மீஸான் திராசில் நன்மைத் தட்டுக்கனதியும், ஸிறுத்தல் முஸ்தக்கீம் பாலத்தை மின்னற்போற் கடக்கவும், நன்மைப் பட்டோலை வலது கையிலும், வெயிற்சூட்டுக்கு அறுஷினிழற்குடையும் நிருவானத்திற் குடையும், இன்னும் பலபல நன் மகிழ்ச்சியுந் தருவான்.

இன்னும், யாதாமொரு மூமினானவன் தெரிந்துந் தெரியாமற் செய்த சிறுபாவங்களையும் பொறுக்கப்படும். சக்கருத்தில் கஸ்தியான வேதனையும் நீங்கும். அந்த வேளையிலே கண்ணொளி மங்காமல் மிகுந்த வொளியைக் கொடுக்கும். கபுறின் கேள்வியு மிலேசாகும் சரீர எலும்புகளும் நொறுங்கிப் போகாது.

இன்னும் அல்லாஹுத்தஆலா இதை அறிந்தவனுடைய ஈமானை ஷைத்தான் முடுகாமற் காப்பாற்றுவான். இன்னும் நாற்பது ஹஜ்ஜுசெய்த பலனும், தவுருத்து சபூர் இன்ஜீல் புறுக்கான் இந் நான்கு வேதத்தையும் ஓதின பலனும் பெறுவான். இன்னும் அவனுடைய தாய்தகப்பன் குற்றங்களையும் அவனுடைய எழுபது தலைமுறையார் குற்றங்களையும் பொறுக்கப்படும். இன்னும் தூஷணம் பேசப்பட்டவர்கள் தூஷணம் பேசாமலும், புறம்பேசப்பட்டவர்கள் புறம் பேசாமலும் கோட் சொல்லப்பட்டவர்கள் கோட் சொல்லாமலும், பொய் சொல்லப்பட்டவர்கள் பொய் சொல்லாமலுமிருக்கும்படியாக்கி அவர்களை நன்மையாளர்கள் கூட்டத்திற் சேர்க்கப்
இன்னும் பீஸபீலுடைய நன்மையும் ஷஹீதுகளுடைய
கிடைக்கும். இன்னும் அல்லாஹுத்தஆலா அவ

னுடைய தீவினையிலகப்பட வொட்டாமற் காப்பாற்றிக் கொள்ளு
வான், இன்னும் அவனுக்குச் சொர்க்கத்தில் இருப்பிடம் நேமகப்
படாமல் துனியாவில் மவுத்தாகவு மாட்டான்.

835 297.63

## றிவாயத்து.

அலிகற்றமல்லாஹு வஜுஹறு றிவாயத்துச் செய்திருக்கிறார்
கள் நபிநாயக முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள்
திருவுளமானதாக அஃதென்னெனில் நபிநாயகம் ஒருபோது ஜிபுரீல்
அலைஹிஸ்ஸலாமவர்களோடு இந்தக் காரண சரித்திரத்தை இன்பத்
துடனே படிப்பவர்களுக்கும். இன்பத்துடனே படிக்கக் கேட்பவர்
களுக்கும், இன்பத்துடனே படிக்கக்கித்தாபுகளை வாங்கி வைப்பவர்
களுக்கும், அல்லாஹுத்தஆலா கியாமநாளையில் என்ன பலாபல
னைக் கொடுப்பானென்று கேட்டதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம்
அவ்விதம் செய்பவர்களுக்கு அல்லாஹுத்தஆலா றஹுமத்தை
யும், 70-வருஷ பகலெல்லாம் நோன்பாயிருந்தும் இரவெல்லாம் வணக்
கஞ்செய்த நன்மையும் 70-தரம் பீஸபீல் செய்த நன்மையுங்கொடுப்
பானென்று சொன்னார்.

இன்னும் இந்தச் சரித்திர மெழுதிய கித்தாபை விசுவாசத்
தோடும் வைத்துப் புகழ்ச்சி செய்பவர்களுக்குப் பேய் பில்லி சூனிய
மேறாது. மேலும் அவர்கள் கல்பிலுள்ள பறுதாக்களும் வெளிப்பட்
டுக்கல்பு வெளிச்சமாகும். இன்னும் அஸ்துபேஹஸ் தென்கிற கித்
தாபில் சொல்லப்படுகிறது யாதெனில் நபி முஹம்மது சல்லல்
லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய திக்கிறுது எல்லா திக்கிர்
களிலுந் தலைமையானதா யிருக்குமென்று,

இன்னும் ஆலிம், உலமாக்கள் எல்லோரும் சொல்லி யிருக்கி
றார்கள், அஃதென்னெனில் கல்புடைய கண்ணாடிக்கு இரசத்தைப்
போலவும், இரவைக்கு வெளிகாண்பிக்கப் பட்டதாகவும், நெஞ்சு
டைய வீட்டிற்கு ஆராதவோர் விளக்குப்போலவும், வுயிருடைய
தோப்பிற்கு மழைப்போலவு மிருக்கும். இன்னும்அந்தத்திக்கிரி துக்
கமுந் துயரமும் நீங்கிப்போகும். சந்தோஷமும் வாழ்வு முண்டா
கும், நீங்காத வியாதியும் நீங்காத தரித்திரமும் நீங்கிப் போகும்,
இன்னும் அந்தத் திக்கிறினால் மானுடர் குற்றமெல்லாம் பொறுக்கப்
படும், இன்னு மானுடர் ஹக்கில் நரகமும் அவிந்துபோகும் சுவர்க்
கத்தினற்பதவியுங் கிடைக்கும். இவைகளல்லாமல் எழுதமுடியாத
பலாபலன்களுங் கிடைக்கும்.

ஆகையால் மூமினான வுடற்பிறப்புகளே அந்தத் திக்கிறை இர
வும்பகலு மிருந்த இன்பத்துடனே ஓதவேண்டும். திக்கிர் செய்ய
வேண்டும். அல்லாஹுத்தஆலா குறுஆனிலே நபிநாயகத்தைத
திக்குறுல் ஆலமீனென்றுந் திருவுளமாயிருக்கிறான், இன்னும் முன்
னுள்ள நபிமார்களெல்லாம் ஆண்டவனே எங்களுக்கு நபிப்பட்டம்

வேண்டாம் முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களுடைய உம்மத்துகளில் தாக்கலாக்கி வையென்று துஆக் கேட்டிருக்கிறார்களே அப்பேர்ப்பட்ட வுயர்ந்த தீன்மார்க்க மல்லவா அந்த தீன் மார்க்கத்தினுள்ளாகிய மூமினான பேர்களே நாமெப்படித் திக்கிர் செய்யவேண்டும் பாருங்கள்.

ஈமானுள்ளவர்களே நல்வணக்கமுள்ளவர்களே நன்னடத்தையுள்ளவர்களே நீங்கள் நன்றாக ஆலோசியுங்கள். மேலும் நம் நபிநாயக முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களை அல்லாஹுத்தஆலா ஹதீது குதுஸியில் லவுலாக்கென்னு மிகவும் புகழ்ந்திருக்கின்றானே அப்படி அல்லாஹுத்தஆலா புகழ்ந்திருக்கிற நபிநாயகத்துடைய தீன் மார்க்கத்திலாகி, யவர்களின் கவிமாவையோதப்பட்டவர்களாகிய நாம் எப்படிப் புகழவேண்டும். ஆனபடியினாலே மூமினான பேர்களே இந்தக் கித்தாபை வாங்கி வைத்துக்கொண்டு இரண்டு றக்குஆத்து நபிற்றொழுது பின்னர் தினந்தோறும் வளமையாக ஓதிவந்தால், உங்களுக்கு மேலெழுதிய பிரயோசனமுங் கிடைத்து கியாம நாளில் அல்லாஹுத்தஆலாவுடைய தீதாறும் நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய ஷபாஅத்துங் கிடைக்கும் நாயகத்தனத்திற்கும் நாயகத்தனமாகிய ஆண்டவனே நீயெல்லாருக்கு மிதை வாசிக்கும்படியாகவும், மேலெழுதிய பலாபலன்களைப் பெறும்படியாகவு முதவிசெய்வாயாக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

## றிவாயத்து.

நூறுநாமா வென்னுங் கித்தாபிற் சொல்லி யிருக்கிறது யாதெனில் அல்லாஹுத்தஆலா பூர்வீகத்தில் முதல் முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களொளியைப்படைத்து அவ்வொளியைப் பார்த்துத் திருவுளமானான் என்னுடைய ஒளிவுந் தெளிவுமுள்ள வொளியே யுன்னைக்கொண்டு நான் பதினெண்ணாயிரம் ஆலத்தையும் அதிலுண்டான படைப்புகளையும் ஆதத்தையும் ஹவ்வாவையும் உண்டாக்கிச் சகல காரணங்களையும் விளைவிப்பேனென்று சொல்லிப்பின்னர் அவ்வொளியைப் பார்த்துச் சுஜூது செய்யச்சொன்னான். உடனே அவ்வொளிவு அல்லாஹுத்தஆலாவுக்குச் சுஜூது செய்தது அதுகண்டு அல்லாஹுத்தஆலா வொளியைப் பார்த்து உன்னுட்டமுந் தேட்டமும் நீயே அல்லாமல் வேறொன்றுமில்லை யென்று திருவுளமானான்.

பின்னர், அல்லாஹுத்தஆலா தன்னுடைய கிருபையினாலே ஏழு கடலைப்படைத்தான். அதில் 1-வது அறிவென்னுங் கடல், 2-வது அக்குலென்னுங்கடல், 3-வது சபூறென்னுங்கடல், 4-வது ஜஉபென்னுங்கடல், 5-வது பக்கறுவென்னுங்கடல், 6-வது நிகுமத்தென்னுங்கடல், 7-வது ஒளியென்னுங்கடல் இவ்வித மேழுகட.

லைப்படைத்து ஒவ்வோர் கடலிலும் அந்த வெளியை எழுபதினா யிரம் வருஷம் வைத்துப் பின்னர் அந்த வெளியைத் தன் குதறத்தி னாலே மயில்வடிவ மாக்கினான். பின்னர் அம்மயிலை ஹைபத்தென் னும் பார்வையினாற் பார்த்தான். அப்பார்வையினால் மயில் நடுங்கி னது. அந்த நடுக்கத்தினால் மயிலினுட லாதிக்கமும் வியர்த்து இலட் சத்திருபத்து நான்காயிரந் துளிகள் விழுந்தது. இத்துளிகளில் நின் றும், முந்நூற்றுப் பதின்மூன்று துளிகள் வெவ்வேறாகப் பிரிந்து நின்றது. அந்தத் துளிகளினால் முந்நூற்றுப் பதின்மூன்று முறுச லான நபிமார்களையும், மற்றத் துளிகளினால் மற்ற நபிமார்களையும் படைத்தான்.

பின்னர், மயிலின் வலது கண்ணிலிருந்து இரண்டு துளி விழுந் தது. அதிலொரு துளியினால், ஜிபுரீல் அலையிஸ்ஸலாத்தையும் ஒரு துளியினால் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாத்தையும் படைத்தான். பின் னர் மயிலின் இடது கண்ணிலிருந்து இரண்டு துளி விழுந்தது. அதி லொரு துளியினால் இசுறாயீல் அலைஹிஸ்ஸலாத்தையும் ஒரு துளியி னால் இசிறாபீல் அலைஹிஸ்ஸலாத்தையும் படைத்தான். பின்னர் மயிலின் வலது காதிலிருந்து இரண்டு துளி விழுந்தது. அதிலொரு துளியினால் லவ்குல் மகுபூலையும், ஒரு துளியினால் கலத்தையும் படைத்தான். பின்னர் மயிலின் இடது காதிலிருந்து இரண்டு துளி விழுந்தது. அதிலொரு துளியினால் அறுஷையும் ஒரு துளியினால் குறுசையும் படைத்தான். பின்னர் மயிலின் மூக்கிலிருந்து இரண்டு துளி விழுந்தது. அதிலொரு துளியினால் சுவர்க்கத்தையும் ஒரு துளியினால் நரகத்தையும் படைத்தான். பின்னர், மயிலின் புருவத்தி லிருந்து இரண்டு துளி விழுந்தது. அதிலொரு துளியினால் பொழு தையும், ஒரு துளியினாற் பிறையையும் படைத்தான். பின்னர், மயி லின் வலது கையிலிருந்து ஐந்து துளி விழுந்தது. அதில் 1-வது துளியினால் ஸிதுறத்துல் முந்தஹாவென்னும் மரத்தையும், 2-வது துளியினால் தூபாவென்னும் மரத்தையும், 3-வது துளியினால் கவுத லல் கவுதறென்னு மரத்தையும், 4-வது துளியினால் ஏழு வானம் ஏழு பூமி அவைகளி லுண்டான படைப்புக ளியாவையும், 5-வது துளியினால் எறும்பு முதல் யானை ஈறாகவுள்ள எண்பத்துநான்கு நூறாயிரம் ஜீவஜெந்துக்களையும் படைத்தான்.

பின்னர், மயிலின் இடது கையிலிருந்து ஐந்து துளி விழுந்தது. அதில் 1-வது துளியினால் ஆதம் அலைஹிஸ்ஸா மவர்களுடைய கையிற் பிடிக்கும் அசாக்கோலையும், 2-வது துளியினால் சுலைமானபி யவர்களுடைய முத்திரை மோதிரத்தையும், 3-வது துளியினால் சூறென்னும் குடலையும், 4-வது துளியினால் வானத்தி லிடிக்கிற இடியையும், 5-வது துளியினால் மின்னலையும் படைத்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் வேறோர் கித்தாபில் சொல்லி யிருக்கின்றது யாதெனில், அல்லாஹுத்தஆலா வானம், பூமி, அறுஷு, குறுசு, லவ்கு, கலம், சுவர்க்கம், நரகம், மலக்குகள், ஜின்கள், மனுடர்கள், நபிமார்கள் முதலிய சகல படைப்புகளையு முண்டாக்குகிறதற்கு முன்னே ஆதி முதலில் நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களொளியை யுண்டாக்கி யவ்வொளியை, தன் குதறத்தைக் கொண்டும், தன்னுடைய பெருமையான முஷாகிதாபும், தசுபீகும், ஸிஜிதாவும், தவாபுஞ் செய்துகொண் டிருக்கும்படியாய் ஒளியினால் எத்தனையோ எத்தனையோ திரைகளை யுண்டாக்கி, அத்திரைகட்குள் வைத்தான். அவைகளிலே ஒளிவு ஆயிரம் வருஷம் தவாபும், முஷாகிதாபும், தசுபீகும் செய்துகொண்டிருந்தது.

ஆனால், அந்த வருஷத்தினீட்டு பூலோக வருஷம் ஆயிரம் அவ்வருஷத்திற் கொருநாளாக இருக்கும். இவ்விதம் நீண்ட நாளையும், நீண்ட மாதத்தையுங் கொண்ட வருஷமா யிருந்தது. அதிலே, பன்னீராயிரம் வருஷ மிருந்ததாயும், கோடிவருஷ மிருந்ததாயும், எத்தனை எத்தனையோகால மிருந்ததாயும், றிவாயத்துகள் வந்திருக்கின்றது. இதை ஹதீதைக்கொண்டும், தஹுறாயிக்குல் அக்பாறென்னுங் கித்தாபிற் சொல்லியிருக்கின்றது. அஃபாதெனில்,

## றிவாயத்து.

அல்லாஹுத்தஆலா முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய வொளியை மயில் வடிவாகச் செய்து, வெண் முத்தினாலே திரைகளுண்டாக்கி, அத் திரைகட்குள்ளே மயிலை வைத்துப் பின்னர், ஷஜறத்துல் எக்கீனென்னு மரத்தை யுண்டாக்கி அதற்கு நான்கு கப்புகளையு முண்டாக்கி, யதிலே மயிலை யிருக்கவைத்தான். அம்மரத்திலே மயில் 70,000 வருஷம் அல்லாஹுத்தஆலாவைத் தசுபீஹ் செய்துகொண் டிருந்தது.

பின்னர், அல்லாஹுத்தஆலா வெட்கமென்னும் கண்ணாடியை யுண்டாக்கி அந்த மயிலுக்கெதிரிலே நிறுத்திவைத்தான். அக் கண்ணாடியை மயிலானது பார்த்தது. அதிலே மயில் தன்னுடைய வடிவையும், மிகுந்த அழகையுங் கண்டு வெட்கி அல்லாஹுத்தஆலாவுக்கு ஐந்து சுஜூது செய்தது. அந்த ஐந்து சுஜூது மவர்பேரில் பறுலாச்சுது, அப்படி லெவ்விதமானால் அவ்வைந்து சுஜிதாவையும், அல்லாஹுத்தஆலா அவர் பேரிலும், அவருடைய வும்மத்துகளடங்கல் பேரிலும், ஐந்தொகுத்துத் தொழுகையைக் கட்டளையாக்கி யுத்திரவு செய்தான்.

பின்னர் அல்லாஹுத்தஆலா அந்த மயிலைப் பார்த்து, என்னுடைய வொளியாகிய மயிலே! உன்னுடைய நான்கு பக்கத்திலும் பாரென்று சொன்னான். அப்படியே மயில் பார்க்கும்போது, தனக்குமுன்னு லோரொளியும், பின்னு லோரொளியும், வலது பக்

கத்தி லோரொளியும், இடது பக்கத்தி லோரொளியுமாக இருக்கக் கண்டது அந்த நான்கொளிவு மாகிறது நான்குபேர்களி னொளியாம். பின்னர், அந்த மயில்வடிவாகிய ஒளியானது 70,000 வருஷம் அல்லாஹுத்தஆலாவைத் தசுபீஹ் செய்துக்கொண் டிருந்தது. இவ்விதம் செய்துக்கொண்ட, முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய ஒளியாகிய மயிலிலங்கிக் கொண்டிருந்து எத்தனையோ மூச்சுகள் விட்டது.

அந்த மூச்சுகளைக் கொண்டும், அல்லாஹுத்தஆலா நபிமார்கள், ஷகீதுகள், சித்தீக்குகள், ஸாலிஹீன்கள், மூமீன்கள் இவர்களுடைய அறுவாருகளடங்கலையும்; மலக்குகளடங்கலையும், மற்றுமுண்டான படைப்புகளடங்கலையு முண்டாக்கினான். இன்னமொரு றிவாயத்திற் சொல்லப்படுகிறது யாதெனில், அல்லாஹுத்தஆலா முகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களொளியை முத்தாகச்செய்து, அம்முத்தைத் தன்னுடைய குதரத்தான பார்வையைக்கொண்டும் பார்த்தான் அதனால், முத்தானது தண்ணீராயுருக்கி ஆயிரம் வருஷம் அலைந்துக்கொண்டிருந்தது, பின்னர் அல்லாஹுத்தஆலா அத்தண்ணீரைப் பத்துப் பங்காகப் பிரித்தது. அதில் முதற்பங்கினால் அறுஷையும், இரண்டாம் பங்கினால் குறுசையும், மூன்றும் பங்கினால் லௌகுல்மகுபூலுப் பலகையையும் நான்காம் பங்கினால் கலத்தையும், ஐந்தாம் பங்கினால் பிறையையும். ஆறும் பங்கினாற் பொழுதையும், ஏழாம் பங்கினால் சுவர்க்கத்தையும், எட்டாம் பங்கினால் நரகத்தையும், ஒன்பதாம் பங்கினால் மலக்குகளையும், பத்தாம் பங்கினால் நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய அறுவாகையும் படைத்தா னென்று சொல்லப்படுகிறது.

இன்னும் கசசுல்லன்பியாவிற் சொல்லப்படுகிறது யாதெனில் அல்லாஹுத்தஆலா செய்யிதுல் முறுசலீன், ஹபீபுறப்பில் ஆலமீன், முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களொளியை 4-பங்காகப் பிரித்து அதில் 1-வது பங்கினால் அறுஷையும், 2-வது பங்கினால் கலத்தையும், 3-வது பங்கினால் சுவர்க்கத்தையும், 4-வது பங்கினால் மற்றபடைப்புகளெல்லாவற்றையும் படைத்தான். மறுபடியும், அல்லாஹுத்தஆலா அந்த நான்கு பங்கொளியில் நின்றும் நான்கு பங்கொளியெடுத்து, அதில் நின்றும், ஒருபங்கொளியில் நபிமுஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களையும் ஒரு பங்கொளியினால் அறிவையும், ஒரு பங்கொளியினால் வெட்கத்தையும், ஒரு பங்கொளியினால் இஷக்கையும் படைத்தான்.

## றிவாயத்து.

தஹாயிக்குல் அக்பாறென்கிற கித்தாபிற் சொல்லப்படுகிறது. யாதெனில், அல்லாஹுத்தஆலா அந்த வொளியாகிய மயிலை யுற்

றுப் பார்த்தான், அதனால் மயில் நடுங்கினது. அந்த நடுக்கத்தினால் அதினுடைய சரீரமெல்லாம் வேர்த்தது. அப்படி வேர்த்தபோது, மயிலின் தலை வேர்வையினால் மலக்குகளடங்கலையும், முக வேர்வையினால் அறுஷு, குறுசு, லவ்கு, கலம், பொழுது, பிறை, நட்சத்திர முதலாகிய வானத்திலுள்ளவைகள் அடங்கலையும், மார்பின் வேர்வையினால் நபிமார்கள், முறுசல்கள், ஆலீம்கள், ஸாலீஹின்களடங்கலையும், புருவவேர்வையினால் ஈமான் தாரிக ளடங்கலையும், காதின் வேர்வையினால் எகூதிகள், நசுறானிகள், மஜூஜிகள், மற்றக் காபிரீன்களடங்கலையும், முதுகின் வேர்வையினால் பயித்துல் மகுமூறு, கஃபா, பயித்துல் முக்கத்தீசு முதலாகிய மஜீதுகளுள்ள இடங்களடங்கலையும், கால் வேர்வையினால் எழுவானிலிருந்து படுவான் வரைக்குமுள்ள பூமியையும், பூமியிலுள்ளவை யடங்கலையும் படைத்தான். இவ்விதம், அல்லாஹுத்தஆலா முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் ஒளியினாற் சகல வஸ்துக்களையும் படைத்தபோது, நபிமார்களுடைய அறுவாகுக ளடங்கலையும் பார்த்து லாஇலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுற் றசூலுல்லாஹி என்னுங் கலிமாவை யோதச் செய்தான்.

## றிவாயத்து.

பவாயிதுல் பதுரியாவில் சொல்லப்படுகிறது யாதெனில் அல்லாஹுத் தஆலா, நபிமுகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய வொளிவுக்குத்திரவு செய்தான். மற்ற நபிமார்களொளியடங்கலையும் பார்க்கும்படிக்கு, அப்படிப் பார்த்த போது அந்தப்பார்வையின் ஒளிவுபோய், அந்த நபிமார்களெல்லாருடைய வொளியையு மூடிக்கொண்டது. அதுகண்டு அந்த நபிமார்கள் அல்லாஹுத்தஆலாவுடனே, எங்கள் நாயகனே, இஃதாருடைய வொளி எங்களெல்லா வற்றையும் வந்து மூடிக்கொண்டதென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத்தஆலா அந்த நபிமார்களுடைய றாகுகளுடனே இஃதப்துல்லாவுடைய மகனான முஹம்மதுடைய ஒளிவு ஆதலால் நீங்கள் யாவரும், இவர் பேரில் ஈமான் கொண்டால் நானுங்களுக்கு நபிப்பட்டங் கொடுப்பேனென்று சொன்னான்.

இவ்விதம், அல்லாஹுத் தஆலாவுடனே எங்களாண்டவனே நாங்களெல்லோரும் இந்த முஹம்மது பேரிலும், இவருடைய நபித்தனத்தின் பேரிலும், ஈமான் கொண்டோமென்று சொன்னார்கள். அது கேட்டு, அல்லாஹுத் தஆலா நானுஞ் சாட்சியாகினேனென்று சொன்னான்.

## றிவாயத்து.

அல்லாஹுத் தஆலா நபிமாருடைய அறுவாகுகள், மனுடருடைய அறுவாகுகளடங்கலையும் படைத்தவனே, எல்லா அறுவாகு

களிடத்திலும் இக்ருர்செய்துகொண்டான் அஃதியாதெனில் எல்லா அறுவாகுகளையும், அணியணியாக நிறுத்தி நானுங்களுடைய றப்பல்லவா என்று கேட்டான். அதற்கவ்வறு வாகுகளெல்லாம் அல்லாஹுத்தஆலாவோடும், நீ எங்களுடைய றப்புதான் அதை நாங்கள் கபூல்செய்து கொண்டோமென்று இக்ருறு செய்துக்கொண்டார்கள்.

அவர்களில் முந்தி யிக்ருறு செய்தவர்கள் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள், அதன் பின்னர் அல்லாஹுத்தஆலா நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களொளியில் நின்று மனுடர்களுடைய அறுவாகுகளை யுண்டாக்கினன். அதன் பின்னர் அல்லாஹுத்தஆலா முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் துனியாவி லெப்படி ரூபம் பெற்றிருந்தார்களோ, அப்படியே அவர்களொளியை யுற்பத்தி செய்து தொழுகை நிலையில் நிற்பதுபோலே நிற்கச்செய்து செவந்த மாணிக்கத்தினலொரு கிந்தீலுண்டாக்கி அந்த கிந்தீலினல் நபிநாயகமுஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களை மூடிவைத்துப் பின்னர், மற்ற நபிமார்களுடைய அறுவாகுகளையும், மனுடர்களுடைய அறுவாகுகளையும், அந்த கிந்தில் விளக்கைச் சுற்றித் தவாபு செய்து கொண்டிருக்கும்படி கட்டளை யிட்டான்.

அப்படி யந்த அறுவாகுகளெல்லாம் 7,000 வருஷம் அந்த கிந்திலைச்சுற்றித் தவாபு செய்துகொண் டிருந்தபோது அல்லாஹுத்தஆலா அந்த கிந்திலின் மூடியைத் திறந்துவிட்டு அறுவாகுகளோடும், அதைப் பாருங்களென்று சொன்னன். அவ்விதம் அறுவாகுகளடங்கலும் அந்த கிந்திலைப் பார்க்கும்போது நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைத் தெரிந்து கொண்டதுகள். ஆனல் அவ்வறுவாகுகளுடைய கூட்டம் மிகவும் பெருங்கூட்ட மானபடியால் நபி முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய உறுப்புகளிற் சிலர் காதையும், சிலர் கண்ணையும், சிலர் கன்னத்தையும், சிலர் மூக்கையும், சிலர் வாயையும், சிலர் தாடியையும், சிலர் புரடியையும், சிலர் தோளையும், சிலர் கையையும், சிலர் மார்பு நெஞ்சையும், சிலர் முதுகையும், சிலர் விலாவையும், சிலர் வயிற்றையும், சிலர் முழங்காலையும், சிலர் காற்படத்தையும் பார்த்தார்கள்.

அதிலே நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய தலையைப் பார்த்தவர்கள் கலீபாக்களும், சுல்தான்களுமானர்கள். நெற்றியைப் பார்த்தவர்கள் நீகமுள்ள அமீர்களானர்கள். புருவத்தைப் பார்த்தவர்கள் சித்திர மெழுதப்பட்டவர்களானர்கள். காதைப் பார்த்தவர்கள் பணக்காரர்கள், தவுலத்துக்காரர்களானர்கள். கண்ணைப் பார்த்தவர்கள் வேதத்தை வாய்ப்பாடம் செய்யப்பட்ட ஹாபிலுகளானர்கள். கன்னத்தை முகத்தைப்

பார்த்தவர்கள் கிலாபத்தர்களும் அறிவாளர்களு மானார்கள். கையைப் பார்த்தவர்கள் ஹக்கீம்களும் அத்தர்க்காரர்களு மானார்கள். வாயைப் பார்த்தவர்கள் எந்நாளும் நோன்பிருப்பவர்க ளானார்கள். உதட்டையும் பல்லையும் பார்த்தவர்கள் அழகான முகத்தை யுடையவ ரானார்கள். நாவைப் பார்த்தவர்கள் பாத்திஷாக்களிடம் போய்த் தூதுசொல்பவ ரானார்கள். தொண்டையைப் பார்த்தவர்கள் நல்ல அறிவோடும் வாயினால் இசுமும், பாங்குஞ் சொல்பவரானார்கள். தாடியைப் பார்த்தவர்கள் பீஸபீல் வெட்டுபவரானார்கள். பிடரியைப் பார்த்தவர்கள் வர்த்தகர்களானார்கள். இரண்டு தோள்களையும் பார்த்தவர்கள் கத்திவெட்டும். அம்பு எய்தலுமுடையவர்க ளானார்கள். வலது தோளைப் பார்த்தவர்கள் நாவிதர்களும், இடது தோளைப்பார்த்தவர்கள் பணங்காசுக ளெண்ணுபவர்களும் இடதுள்ளங் கையைப் பார்த்தவர்கள் பாத்துஷாக்களுடைய ஹுக்கும்படிக்கு வெட்டுபவர்களுமானார்கள். வலதுள்ளங் கையைப் பார்த்தவர்கள் அளக்க, நிறுக்கப்பட்டவர்களானார்கள். உள்ளங்கை யிரண்டையும் பார்த்தவர்கள் கிலாபத்துகளும், சகல அலுவல்களும் செய்பவர்களானார்கள். புறங்கை யிரண்டையும் பார்த்தவர்கள் இரக்கமில்லாத பகீலர்களானார்கள். வலதுகை விரலைப் பார்த்தவர்கள் தையற்காரர்களானார்கள். நெஞ்சைப்பார்த்தவர்கள் ஆலிம்களும் இமாம்களாகிய முஸ்தஹீதுகளுமானார்கள். முதுகைப் பார்த்தவர்கள் தாழ்மையுள்ளவர்களும், ஷறகுக்குட் பட்டவர்களு மானார்கள். விலாப் பக்கத்தைப் பார்த்தவர்கள் அல்லாவுக்காகப் பீஸபீற் சண்டை செய்பவர்களானார்கள். வயிற்றைப் பார்த்தவர்கள் அல்லாஹுத்தஆலா கொடுத்த மட்டுமுள்ள புசிப்பைப்போது மென்கிறவர்களும், உலகத்தாசையை நீக்குபவர்களுமானார்கள் முழங்கால்களைப் பார்த்தவர்கள் றுக்கூவும் சுஜூதும் செய்பவர்களானார்கள். காற்படங்களைப் பார்த்தவர்கள் வேட்டையாடுகின்றவர்களானார்கள். உள்ளங்கால்களைப் பார்த்தவர்கள் மிகவும் நடை நடப்பவர்களானார்கள். குதிக்கால்களைப் பார்த்தவர்கள் வீணை, தம்பூரு, பிட்டில், சித்தார்டோல் முதலிய மேளதாள முழக்கஞ் செய்பவர்களானார்கள். முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைத் திரும்பிப் பாராதிருந்தவர்கள் எகூதி, நஸாறு முதலிய காபிரீன்களும், மதமாச்சரிய ஆண்மையுள்ளவர்களு மானார்கள். இவ்விதம், தஹாயிக்குல் அக்பாரிற் சொல்லப்பட் டிருக்கின்றது.

## றிவாயத்து.

நூறுநாமாக் கித்தாபிற் சொல்லியிருக்கின்ற தியாதெனில் ஒருபோது செய்யிதுல் முறுசலீன், நபிமுஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்கள், தங்கள் மகளார் பீவிபாத்திமத்துஸ்ஸுகுறு காத்தூனே ஜென்னு அவர்கள் வீட்டிலிருக்கையில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வகி கொண்டு வந்து பாத்திமா

றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டு வாசலில் நிற்பதைப்பாத் திமா றலியல்லாஹு அன்ஹா கண்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர் களை வாருங்கள், சிறிய தகப்பனுரே அஸ்ஸலாமு அலைக்கும் என்று சலாம் சொல்லி யருமையாக அழைத்தார்கள். அதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் யாதொன்றும் ஜவாபு சொல்லாமல் நின்ருர்கள்.

அப்போது பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து நானுங்களுக்குச் சொன்ன சலாத்திற்குச் சவாபு சொல்வது, உங்கள் பேரில் வாஜிபா யிருக்க, நீங்கள் ஏன் ஜவாபு சொல்லாமற் சும்மா நிற்கிறீர்களென்று கேட்டார்கள். அதற்குப் பின்னர், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் ஜவாபுசொல்லிவிட்டுப் பாத்திமா றலியல்லாஹு அன்ஹா அவர்களைப் பார்த்து, நான் உமது தகப்பனுரவர்களுக்கு வயதால் மூப்பாயிருக்க நீரென்னை வாருங்கள் சிறிய தகப்பனுரே யென்றழைத்தபடியால் நான் சலாத்திற்குச் ஜவாபு சொல்லாமற் சும்மா நின்றேனென்று சொன்னுர்கள். அதுகேட்டுப் பாத்திமாறலி யல்லாஹு அன்கா அவர்கள், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து. நான் போய் இதுகாரியத்தை யென்தகப்பனுரவர்களுக்குத் தெரிவிக்கிறேனென்று சொல்லிக்கொண்டு நிற்கும்போது அவ்விடம், நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் வந்தார்கள். அவர்களோடு, பீபிபாத்திமாநாயகி இங்கே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குந் தங்களுக்கும் நடந்த சங்கதிகளைச் சொன்னுர்கள்.

அதுகேட்டு நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள். ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து, யாஜிபுரீலே நீரெனக்கு வயதாலே முதிர்ந்தவ ரென்பதற்கென்ன அதிசயத்தைத் தெரிந்திருக்கிறீரென்று கேட்டார்கள். அதற்குச் சிபுரீல் அலைஹிஸ் ஸலாமவர்கள், நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைப் பார்த்து, நானொரு அதிசயத்தைத் தெரிந்திருக்கிறே னென்று சொன்னுர்கள். அப்போது நபிநாயகம் அவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப்பார்த்து நீர் தெரிந்திருக்கிற அதிசய மென்ன சொல்லுமென்று கேட்டதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் வடபுறத்தில் ஓர் நக்ஷத்திரம் உதயமாகி 70, 000 வருஷம் மறைபாமலிருந்து பின்னர் 70, 000 வருஷம் மறைந்து போகும், இவ்விதம் 70, 000 தரங்கண்டிருக்கிறேனென்று சொன்னுர்கள்.

அதுகேட்டு, நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து இப் போது அந்த நக்ஷத்திரத்தைக் கண்டால், முன்னர் கண்டதென் றும், அஃதல்லவென்றும் தெரிவீராவென்று கேட்டதற்குச் ஜிபுரீல்

அலைஹிஸ்ஸலா மவர்கள், ஓம் தெரிவேனென்று சொன்னார்கள். உடனே நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள், தங்கள் தலைப்பாகையைக் கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு தலையைக் காண்பிவித்தார்கள் அந்த முபாறக்கான அறுஷாகிய தலையைச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பார்த்தபோது உச்சந்தலையில் அந்த நக்ஷத்திர மிருந்திலங்கிக் கொண்டிருக்கக் கண்டு மிகுந்த ஆனந்த ஆவேசமாகக் கட்டியணைத்து முத்தமிட்டுத், தாஜுல் அன்பியா முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைப்பார்த்து அல்லாவுடைய றசூலே, இதிலே மூன்றடையாளமிருந்ததே, அதையிப்போது காணோமேயென்று சொன்னார்கள்.

அதுகேட்டு, நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து, என்னுயிர்த் தோழராகிய ஜிபுரீலே, அஃதென்னென்ன அடையாளஞ் சொல்லுமென்று கேட்டார்கள். அதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள், நபிநாயக மவர்களைப் பார்த்து, யா றசூலுல்லாவே இந்த நக்ஷத்திரத்துடைய தலையில் தாஜென்னுந் தொப்பியும் இரண்டு காதில் இரண்டு முத்துக்கவச குண்டலமும், கழுத்தில் இரத்தின பதக்கமுமிருந்ததென்று சொன்னார்கள். அதுகேட்டு நபிநாயகமவர்கள், ஜிபுரீலவர்களைப் பார்த்து, யாஜிபுரீலே தலையிலிருந்த தாஜு அலி றலியல்லாஹு அன்ஹும், இரண்டு காதிலிருந்த முத்துக்கவச குண்டலம், இமாம் அசன றலியல்லாஹு அன்ஹும், இமாம்ஹுசைன் றலியல்லாஹு அன்ஹும், கழுத்திலிருந்த இரத்தினப்பதக்கம் பீபி பாத்திமா நாயகியுமென்று சொன்னார்கள். அது கேட்டுச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மிகவுந் தாழ்ச்சி செய்தார்கள். அப்போது நபிநாயகமவர்கள். ஜிபுரீலவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள், யாஜிபுரீலே அல்லாஹுத்தஆலா ஆதிமுதலில் ஒளியினாலே 10 கடலை யுண்டாக்கினான். அதில்,

1-வது அறிவென்னுங் கடல், 2-வது நற்செயலென்னுங் கடல், 3-வது ஆசை யென்னுங்கடல், 4-வது சலாமென்னுங் கடல், 5-வது பயமென்னுங்கடல், 6-வது பொறுமை யென்னுங் கடல், 7-வது இஷுக்கென்னுங் கடல், 8-வது ஹயாவென்னுங்கடல், 9-வது எழுமைத்தன மென்னுங் கடல், 10-வது புதுமை யென்னுங்கடல் இவ்விதமாகப் படைக்கப்பட்ட கடல்கள் ஒவ்வொன்றிலும், அந்த வொளி ஐம்பதையும் பதாயிர வருஷம் சுஜூது செய்துக்கொண்டிருந்து, பின்னர், ஒளிகடல்களை விட்டும் வெளியே வந்தது. அப்படி வெளியில் வந்த வொளியானது, அல்லாஹுத்தஆலாவுடைய குதறத்தினா லுடலையசைத்து. அப்போது, அந்த வுடலிலிருந்து லக்ஷத்திருபத்து நான்காயிரந் துளிகள் விழுந்தது. அந்தத் துளிகள் ஒவ்வொன்றிற் கொவ்வோர் நபிமார்களானார்கள். பின்னர், இரண்டா

வது அந்த வொளி தனதுடலை யசைத்தது. அப்போது, அதனுடலிலிருந்து விழுந்த துளிகளினாலே மலக்குக ளானார்கள். பின்னர், மூன்றாவதும், அவ்வொளி தனது சிரசை யசைத்தது. அச்சிரசில் நின்று முந்நூற்றுப் பதின்மூன்று முறுசலான நபிமார்க ளானார்கள். பின்னர், நான்காவது, அந்த வொளியி னெற்றியிலிருந்து ஓர் துளி விழுந்தது. அத்துளியினால் அறுஷைப் படைக்கப்பட்டது. அவ்வறுஷினுடைய வலுப்ப மெப்பேர்ப்பட்டதானால்.

அல்லாஹுத்தஆலா அறுஷினுடைய வாசற்படி மேலே ஸ்தாபித்திருக்கும் பலகையின்பேரிற் கலிமாவை எழுதும்படி கலத்துக்குத்திரவு செய்தான். அப்படியே கலம் முதலில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹி யென்றெழுதினது. ஆனால், இவ்விதம் கலிமாவை யெழுதக் கலத்துக்கு நான்குநூறு வருஷஞ் சென்றது. ஒரு றிவாயத்திற் சொல்லப்படுகிறது. அந்தக் கலம் லாஇலாஹ இல்லல்லாஹு வரைக்கும் எழுதினபிறகு அல்லாஹுத்தஆலாவைப் பார்த்து யாறப்பல் ஆலமீனே நீயாகிறவன் ஒப்புவமை யில்லாதவனாக இருக்கிறாய். அப்படியிருக்க, உன் பேருடனே முஹம்மதென்னு மருவுதலான பெயரை எழுதச்சொன்னையே அவர் யாரென்று கேட்டது.

அதற்கல்லாஹுத்தஆலா திருவுளமானான். ஆய் கலமே அவரென்னுடைய மக்பூலான ஹபீபாக இருக்கும். ஆதலால், நீ அவருடைய பெயரை யெழுதென்று சத்தத்துடனே யுத்திரவாக்கினான். இவ்வித முத்திரவு பிறந்தவுடனே கலம் அல்லாஹுத்தஆலாவுக்குப் பயந்து அப்பயத்தினால் கலத்தினுடைய நுனி யிரண்டாகப் பிளந்து முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்றெழுதினது. இவ்விதம் லாஹிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்கிற கலிமாவை அறுஷினுடைய வாசற்படி மேல்பாரிசத்தி லெழுதினது. பின்னர், அல்லாஹுத்தஆலா அந்த அறுஷிக்குப் பதினெண்ணாயிரம் புரிசை யுண்டாக்கினான். அப்புரிசை ஒவ்வொன்றுக்குப் பதினெண்ணாயிரம் பதினெண்ணாயிரம் தூண்களை நிறுத்தினான். அத்தூண்கள் ஒவ்வொன்றுக்கும் பதினெண்ணாயிரம் பதினெண்ணாயிரம் கங்கோறு யென்னுஞ் செவந்த மாணிக்கக் கற்களை வைத்தான். அந்தக் கங்கோறுக்கள் ஒன்றுக்கொன்று எழுபதினாயிரம் வருஷத் தொலையாக இருக்கும். இதில் ஒவ்வோர் கங்கோறுக்களுக்குமேலே பதினெண்ணாயிரம் பதினெண்ணாயிரம் கிந்தீல்களை வைத்தான். அந்த கிந்தீல்களினுடைய பெருப்பமாகிறது ஒவ்வோர் கிந்தீலினுள்ளே எழு வானத்தையும் எழு பூமியையும், அவைகளிலுள்ள வஸ்துக ளடங்கலையு மெடுத்துவைத்தால், அவைகள் ஓர் பெரிய மைதானில் மனுடர்கள் கைவிரலி லணியும் ஓர் மோதிரம் விழுந்து கிடந்தால் எப்படியிருக்குமோ அப்படி யிருக்கும்.

இவ்விதம், பெருப்பமான அறுஷை, அல்லாஹுத்தஆலா வுண்டாக்கி அதை எடுக்கும்படியாய் நான்கு மலக்குகளை யுண்டாக்கி, அவர்களி லொருவருக்கு மனுடருடைய முகமும், ஒருவருக்குப் புலியினுடைய முகமும் ஒருவருக்குப் பசுவினுடைய முகமும், ஒருவருக்குக் கழுகையுடைய முகமுமாகச்செய்தான். அந்த மலக்குகள் நான்கு பேருடைய பெருப்ப மெவ்வளவென்றால் தலைகள் அருஷிலும், கால்கள் ஏழு பூமிக்குங் கீழே தகுத்தறாவிலும் உறிஞ்சிக்கொண்டிருக்கும் இன்னும், அம்மலக்குகள் நடக்கவேண்டிக் காலடி யெடுத்து வைத்தால் ஒரு காலுக்கொரு காலிடையில் ஏழாயிரம் வருஷத் தடிப்பாட்டின் தொலைதூரமாக இருக்கும் இப்பேர்க்கொத்த மலக்குகள் நான்கு பேர்களையும் பார்த்து, உங்கள் தோளின்மேல் அறுஷை தூக்கி வைத்துக்கொள்ளுங்களென்று, அல்லாஹுத்தஆலா கட்டளை செய்தான்.

பின்னர், அந்த வொளியின் வலது சுல்பாவிலிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால், அல்லாஹுத்தஆலா தகுத்தை யுண்டாக்கினான். பின்னர், அந்த வொளியின் இடது சுல்பாவிலிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால் அல்லாஹுத்தஆலா குறுசை யுண்டாக்கினான். பின்னர் அந்த வொளியின் வலது கன்னத்தி லிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால் அல்லாஹுத்தஆலா கலத்தைப் படைத்தான். பின்னர், அந்த வொளியின் இடது கன்னத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அத்துளியினால், அல்லாஹுத்தஆலா லௌகுல் மகுபூலை யுண்டாக்கினான். பின்னர் அந்த வொளியின் வலது புருவத்திலிருந்து இரண்டு துளி விழுந்தது. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹுத்தஆலா பைத்துல் முகத்தீசையும், மற்றோர் துளியினால் ககுபத்துல்லாவையு முண்டாக்கினான். பின்னர் அந்த வொளியின் இடது புருவத்திலிருந்து இரண்டு துளிகள் விழுந்தது. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹுத்தஆலா பைத்துல் மகுமூறையும், மற்றோர் துளியினால் நபிமார்களுடைய அறுவாகுகளையும் படைத்தான். பின்னர் அந்த வொளியின் வலது கண்ணிலிருந்து இரண்டு துளிகள் விழுந்தது. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹுத்தஆலா ஜிபுரீல் அலைகிஸ்ஸலாத்தையும், மற்றோர் துளியினால் மீக்காயில் அலைகிஸ்ஸலாத்தையும் படைத்தான். பின்னர், அந்த வொளியின் இடது கண்ணிலிருந்து இரண்டு துளிகள் விழுந்தது. அத்துளிகளில் ஒன்றினால் அல்லாஹுத்தஆலா இசுறாபீல் அலைகிஸ்ஸலாத்தையும் மற்றோர் துளியினால் இசுறாயீல் அலைகிஸ்ஸலாத்தையும் படைத்தான். பின்னர், அந்த ஒளியின் வலது காதிலிருந்து ஒரு துளி விழுந்தது. அந்தத் துளியினால் அல்லாஹுத்தஆலா ஏழு வானத்தையும் படைத்தான். அவ்வானங்களின் சிறப்பைக் கச்சுல் அன்பியாவென்னுங் கித்தாபிற் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இவ்விடத்தில் விரித்துச் சொல்லவில்லை.

பின்னர் அல்லாஹுத்தஆலா குறுசின் கீழே ஒரு முத்தை யுண்டாக்கினான். அதை இன்னோர் றிவாயத்தில் மாணிக்கமென்றும் சொல்லப்படுகிறது. அம்முத்து 500 வருஷத்தடிப் பாட்டின் நீளமும் 50 வருஷத்தடிப்பாட்டின் அகலமுமுள்ளதாயிருந்தது. அதை அல்லாஹுத்தஆலா தன்னுடைய குதறத்தான பார்வையைக் கொண்டும் பார்த்தான் அப்போது முத்தானது அல்லாஹுத்தஆலாவுடைய பெருமையான அச்சத்தினாலும் பயத்தினாலும் உருகித் தண்ணீராய்ப் போனது இஃதல்லாமல் இன்னும், அல்லாஹுத்தஆலா நான்கு காற்றுகளைப் படைத்தான். அவைகளில் ஒன்று மேல்காற்றும், ஒன்று கீழ் காற்றும், ஒன்று வடகாற்றும், ஒன்று தென்காற்றுமாயிற்று. அக்காற்றுகள் நான்கையும் அல்லாஹுத்தஆலா பார்த்து முதலில் அம்முத்தை யுருகத் தண்ணீரினுடைய நான்கு பக்கங்களிலும் வைத்துத் தண்ணீருக்கு மேல் வீசி யடிக்கும்படி யுத்திரவு செய்தான். அவ்விதம் காற்றுகள் நான்கும் தண்ணீரின் மேல் வீசி யடித்தபோது அதிலே அலைகளுண்டாயிற்று. அவ்வலைகளில் நுரைகளுண்டாயிற்று. அந்நுரைகளிற் சூடுண்டாயிற்று. அச்சூட்டிற் புகையுண்டாயிற்று அப்புகையானது தண்ணீருக்கு மேலும் குறுசுக்குக் கீழுமாகி நின்கின்றது.

பின்னர் அல்லாஹுத்தஆலா அப்புகையைப் பிளக்கும்படியாக உத்திரவு செய்தான். உடனே புகை தானாகப் பிளந்தேழு துண்டாயிற்று. அதில் ஒரு துண்டு தண்ணீரும், ஒரு துண்டு இரும்பும், ஒரு துண்டு வெள்ளியும், ஒரு துண்டு பொன்னும், ஒரு துண்டு முத்தும், ஒருதுண்டு மாணிக்கமுமாயின அப்போது அல்லாஹுத்தஆலா அந்தத் தண்ணீரினால் முன் வானத்தையும், செம்பினால் இரண்டாம் வானத்தையும், இரும்பினால் மூன்றாம் வானத்தையும், வெள்ளியினால் நான்காம் வானத்தையும், பொன்னினால் ஐந்தாம் வானத்தையும், முத்தினால் ஆறாம் வானத்தையும், மாணிக்கத்தினால் ஏழாம் வானத்தையும் படைத்தான். இவ்வானங்கள் ஒவ்வொன்றின் அகலம் 500 வருஷத்தடிப்பாடும் கனம் 500 வருஷத் தடிப்பாடும், ஒவ்வொன்றிற்கிடை 500 வருஷத் தடிப்பாடுமாய் இருக்கும். அவைகளிலெல்லா மலக்குகளாகவே இருக்கிறார்கள்.

பின்னர் ஒளியி னிடதுகாலிலிருந்து 7 துளி விழுந்தது. அதைக்கொண்டும் அல்லாஹுத்தஆலா ஏழு பூமியையு முண்டாக்கினான். அஃதெவ்விதமெனில் மேலேயிதிற் சொல்லிய மாணிக்கமானது உருகித் தண்ணீராய் அத்தண்ணீரின்மேல் நான்கு காற்றும் அடித்தபோ துண்டான நுரையிலோர் எவ்வளவு செவந்த மண்ணுண்டாயிற்று. இப்படித் தண்ணீர் நுரையிலே எவ்வளவு செவந்த மண் ணுதித்த வெளியிட மெவ்விடமென்றால் இப்போது மக்கமா நகரத்தில் கருபத்துல்லா இருக்கிறதே அவ்விடமா யிருக்கும்.

அப்போது அல்லாஹுத்தஆலா ஜிபுரீல் மிக்காயில் இசுறாபீல் இசுறாயீல் ஆகிய இந்த நான்கு மலக்குகள் தலைவரையும் அழைத்து அம்மண்ணினுடைய நான்கு மூலைகளையும் பிடித்திழுக்கும்படி யுத்தரவு செய்தான். அதுபோலவர்கள் பிடித்திழுத்தார்கள். அப்போது எள்ளளவாயிருந்த செவந்தமண் விரிந்து பூமி முழுதுமாயிற்று. இவ்விதம் பூமியானது தண்ணீர் நுரையின்பேரி லிருப்பதால் அசையாதிருக்கப் பூமியைச் சுற்றிப் பச்சை மரகதத்தினால் கோபுக்கா மலையை யுண்டாக்கி அது பூமியை அணைத்துக்கொண் டிருக்கும்படி நிறுத்தினான். அந்தக் கோபுக்காமலை யணைத்ததினால் இந்தப் பூமி யசையாமலிருக்கிறது.

இன்னும் அந்தக் கோபுக்கா மலையினுடைய உயரம் 500 வருஷத் தடிப்பாடும், சுற்றிலும் சவுக்கம் 2000 வருஷத்தடிப்பாடும், நிறம் பசுமையாகவு மிருக்கின்றன. இவ்விதம் கோபுக்காமலைக்கிருக்கிற பசுமையின் சுடர் மூன் வானத்திற்குமேற் பாய்கிறபடியால் வானம் பசுமை நிறந் தோற்றுகின்றது. இன்னும் அல்லாஹுத்தஆலா அந்தக் கோபுக்காமலைக் கப்புறமாகக் கஸ்தூரியினா லேழு பூமியையும் அதற்கப்புறம் கற்பூரத்தினா லேழு பூமியையும் அதற்கப்புறம் எழுபதினாயிரம் ஜண்டாக்களு முண்டாக்கி நிறுத்தினான். அந்த ஜண்டாக்கள் ஒவ்வொன்றின் கீழே எழுபதினாயிரம் மலக்தகளிருந்து எந்நேரமும் ஹபீபுறப்பில் ஆலமீன் முஹம்மது சல்லல்லாகுஅலைஹிவசல்ல மவர்களுடைய கலிமாவால் திக்கீர் செய்து கொண்டு அல்லாஹுத்தஆலாவுடைய நாட்டம் நீங்காமலிருக்கின்றார்கள்.

இன்னும் அல்லாஹுத்தஆலா அந்தச் சண்டாக்களுக் கப்புறம் ஒரு பாம்பை யுண்டாக்கி வைத்திருக்கிறான். அப்பாம்பினுடைய நீளம் 2000 வருஷத்தடிப்பாடுள்ளது அது அந்தப் பூமியடங்கலையும் சுற்றிக்கொண்டிருக்கிறது. இன்னும், அந்தப் பூமிக்குங் கீழே அதனோடும் கூடி யேழுபூமி யுண்டாயிருக்கிறது. அந்தக் கீழிருக்கிற ஏழாம் பூமியில் மலக்குகளும், ஆறாம் பூமியில் இபுலீசும், இபுலீசுடைய மக்களும், ஐந்தாம் பூமியில் தேவர்களும், நான்காம் பூமியில் பாம்புகளும், மூன்றாம் பூமியில் ஊர்வனங்களும், இரண்டாம் பூமியில் பரிகளும், ஒன்றாம் பூமியில் மனுடர்களு மிருக்கின்றார்கள்.

இன்னும் இதைச் சிலபேர்கள் அப்படியல்ல பூமிசவுக்கத்திலேயே யிருக்கிறதென்றும். அதுவுந்தவிர இந்தப் பூமி ஏழையும் ஒரு பசுவானது தன்னிரண்டு கொம்புக்கு மிடையிலே சுமந்து கொண்டிருக்கிறது அக்கொம்பிரண்டிலும் நாற்பதினாயிரங்கிளைகள் கிளைத்துக் கொண்டிருக்கிறது அவைக ளொவ்வொன்றிற் கிடையில் 500 வருஷத்தடிப்பாட்டுத் தூரமிருக்கிறது. அந்தப் பசுவோ ஒரு மீன் முதுகின் பேரிலும் அந்த மீன் தண்ணீரின் பேரிலு மிருக்கிறது.

அத்தண்ணீருடைய ஆழம் நாற்பதினாயிரம் வருஷத்தடிப் பாட்டுத் தூரமாயிருக்கிறது. அத்தண்ணீர் ஒரு காற்றின் பேரிலும் அக்காற்று ஓரிருளின்பேரிலும் அவ்விருள் நரகத்தின் பேரிலும் அந்த நரகம் ஒரு கல்லின்பேரிலும் அந்தக் கல் ஓர் மலக்கினுடைய தலையின்பேரிலும் இருக்கிறது. அந்த மலக்கு அல்லாஹுத்தஆலாவுடைய குதரத்தின்பேரி லிருக்கிறாரென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள். அந்த வொளியின் வலது மூக்கிலிருந்து எட்டுத்துளி விழுந்தது. அந்தத் துளிகளினால் அல்லாஹுத்தஆலா எட்டு சுவர்க்கத்தைப் படைத்தான். அதில் 1-வது சுவர்க்கம் தாறுல்ஜினான், 2-வது சுவர்க்கம் தாறுஸ்ஸலாம், 3-வது சுவர்க்கம் மௌவா, 4-வது சுவர்க்கம் குல்து, 5-வது சுவர்க்கம் நகீம், 6-வது சுவர்க்கம் பிருதௌஸ், 7-வது சுவர்க்கம் அதன், 8-வது சுவர்க்கம் கறார் இவ்விதப் பெயர்பெற்ற எட்டுச் சுவர்க்கங்களின் பூமி வெள்ளியினாலும் மணல் பொன்னினாலும், செங்கல்கள் வெள்ளியினாலும், அங்குள்ள மரங்கள் சிலது தங்கத்தினாலும், சிலது கோமேதகங்களினாலும், அவைகளினிலைகள் மரகதத்தினாலும், பழங்கள் முத்துகளினாலு மிருக்கின்றன.

அப்பழங்களைத் தின்ன நாடினால் மரங்கள் தானாக வளைந்து பழங்களை யுகுத்தி வாயிற்கொண்டுவந்து கொடுக்கும். அதின் தித்திப்பும் ருசியும் நாற்பது நாள்மட்டுந் தொண்டையைவிட்டு மாறாமல இனித்துக்கொண் டிருக்கும். அம்மரங்களிற் பறவைகளு முண்டும். அப்பறவைகள் செவந்த மாணிக்கத்தினாலும், அவைகளினிறகுகள் மரகதத்தினாலும், மூக்குகள் முத்தினாலு மிருக்கின்றன. அப் பறவைகளைத் தின்ன நாடினால் தானே அறுப்புண்டு, நெய்யில் பொரிந்து வாயில் வந்து தின்ன ஏதுவாகும்.

இன்னும் அங்குள்ள பெண்களின் முக அழகுக்குப் பதினாலாம்நாளுதயமாகும் பூரணச்சந்திரனும் வெட்கும் அவர்களின் பல்லினழகுக்குச் சூரியனும் வெட்குவான் அவர்களுடைய பார்வை கீழ் நோக்கும் பார்வையா யிருக்கும். இன்னும் அவர்கள் தம் புருஷனைத் தவிர வேறொருவரையும் பார்க்கார்கள். இன்னும் அப்பெண்களோடு ஊடாலாகினாலும் நாற்பதுநாள் அவர்கள் பிறிய மனதில் நீங்காதிருக்கும். இன்னும் அவர்கள்மே லிட்டிருக்கிற ஆபரணங்களோ உவமிப்புக் கடங்காத விதவிதங்களாக இருக்கும்.

இவ்விதம் அழகையுடைய சுவர்க்கங்களில் முதல் சுவர்க்க வாசற்படியில் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹி யென்[illegible] கலிமா வெழுதப்பட்டிருக்கும். அந்தச் சுவர்க்கத்தி[illegible] நபிமார்களும், ஷஹீதுகளும் சஹீதுகளு மிருக்கப்படும். 2-வது சுவர்கத்தினுள்ளே நன்றா யுலுச்செய்து ஆசையுடனே அடவுக ளறிந்து தொழப்பட்டவர்க ளிருக்கப்படும். 3-வது சுவர்க்

கத்தினுள்ளே மிகுந்த இன்பத்துடனே ஸஹாவத்துச் செய்பவர்களிருக்கப்படும். 4-வது சுவர்க்கத்தினுள்ளே அல்லாஹுத்தஆலா விலக்காகிய காரியங்களைத் தாங்களும் விலக்காக்கி அவ்விலக்கைச் செய்பவரைக்கண்டால் அதைச் செய்யவொட்டாமல் விலக்கிக்கொண்டிருந்து அல்லாஹுத்தஆலா செய்யச் சொல்லி யேவினவைகளைத் தாங்களும் செய்து அவ்விதஞ் செய்யாதவர்களைச் செய்யும்படி செய்கிறவர்க ளிருப்பார்கள். 5-வது சுவர்க்கத்தினுள்ளே ஷஃவத்தையும் சுல்மையும் விலக்கினவர்க ளிருப்பார்கள். 6-வது சுவர்க்கத்தினுள்ளே மக்கத்திற்போய் அல்லாவுக்காக ஹஜ்ஜி செய்தவர்க ளிருப்பார்கள். 7-வது சுவர்க்கத்தினுள்ளே அல்லாவுக்காகப் பீஸபீல் செய்யப்பட்டவர்க ளிருப்பார்கள். 8-வது சுவர்க்கத்தினுள்ளே ஹறுமான செயலைக்கொண்டும் அதின் பார்வையைக்கொண்டும் மற்றுங் கெட்ட செயலைக்கொண்டும் தூராகிறவர்களும் தாய் தகப்பன்மார் முதலிய இனத்தோர்களை யாதரிக்கப் பட்டவர்களு மிருப்பார்கள்.

இன்னும் ஒளியி னிடத்துமுக்கிலிருந்து எழு துளி விழுந்தது. அதினால் அல்லாஹுத்தஆலா எழு நரகத்தையும் படைத்தான். அதில் 1-வது நரகம் ஜஹீம், 2-வது நரகம் ஜஹன்னம், 3-வது நரகம் ஸகர், 4-வது நரகம் லமீன், 5-வது நரகம் லசீ, 6-வது நரகம் ஹாவியா, 7-வது நரகம் ஹத்துமா இவ்விதப் பெயருள்ள நரகங்களின் கெடுதி எவ்விதமெனில், அல்லாஹுத்தஆலா அந்த நரகங்களில் நெருப்பைப் படைத்து ஆயிரம் வருஷகாலமாக அதை யூதும்படிக்கு மலக்குகளை யேவினான். அவர்களு மூதினார்கள். அப்படி யூதுவதால் அந்த நெருப்பு வெண்ணிறமானது பின்னர் ஆயிரம் வருஷம் ஊதினார்கள். அப்படி யூதினதினால் அந்த நெருப்புச் செவந்த நிறமானது. பின்னர் ஆயிரம் வருஷ மூதினார்கள். அப்படி யூதினதினால் அந்த நெருப்பு இருண்ட கருநிறமானது. இவ்விதஞ் செய்யப்பட்ட எழு நரகத்தின் கீழே, வயிலெனன்கிற ஒடையொன்றுண்டாயிருக்கின்றது, அந்த ஓடையின் கொடூர மெப்போர்க்கொத்த தானால் மேற்சொன்ன எழு நரகங்களும் அல்லாஹுத்தஆலாவை நோக்கி எங்கள் நாயகனே இந்த வயிலென்னு மோடையின் வாடையானது எங்கள் பேரில் தாவாமல் நிகர்த்துக்கொள்ளென்று நாளொன்றிற்கு எழுதரம் துஆக் கேட்கும்.

## றிவாயத்து.

இஃதிப்படியிருக்க ஒருநாள் தாஜுல் அன்பியா முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் பேசிக்கொண் டிருக்கும்போது பூமியும் வானமும் கிடுகிடென்றதிர்ந்து. அவ்வதிர்ச்சினையில் நபிநாயக மவர்களுடைய மனமும் பயந்து உடலுங் குலுங்கி முகத்தினிறமும் வேறுகினது. அப்போது நபிநாயக மவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப்

பார்த்து யாஜிபூரிலே இஃதென்ன காரணமென்று கேட்டார்கள். அதற்குச் ஜிபூரி லவர்கள் நபிநாயக மவர்களைப் பார்த்து யாமுஹம்மதே அல்லாஹுத்தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாத்தை யுண்டாக்குவதற்கு முன்னர் நரகத்தின் கரையிற் கடந்த ஓர் கல்லின் குண்டுருண்டு நரகத்தினுள்ளே விழுந்தது. அந்தக் குண்டுக்கல் இன்றைய தினந்தான் நரகத்தின் கீழேபோய் விழுந்தது. அதினால் இவ்விதம் பூமியும் வானமும் அதிந்ததென்று சொன்னார்கள். இவ்விதங் கொடூரமாகிய நரகங்கள்.

அப்பேர்ப்பட்ட நரகங்களி னெவ்வொரு வாசற்படியினும் நெருப்பினா லெழுபதினாயிர மலைகளுண்டும் அம்மலைக ளொவ்வொன்றைச் சுற்றி யெழுபதினாயிரங் காடுகளுண்டும் அக்காடுக ளொவ்வொன்றிற்குள் நெருப்பினா லெழுபதினாயிரம் வீதிகளுண்டும் அவ்வீதிக ளொவ்வொன்றில் எழுபதினாயிரம் வீடுகளுண்டும் அவ்வீடுகள் ஒவ்வொன்றிற்குள் எழுபதினாயிரம் வாசற்படிகளுண்டும் அவ் வாசற்படிகளொவ்வொன்றிற்குள் எழுபதினாயிரம் பெட்டிகளுண்டும் அப்பெட்டிக ளொவ்வொன்றிற்குள் நெருப்பினா லெழுபதினாயிர மிரும்புச் சங்கிலிகளுண்டும் அச்சங்கிலிக ளொவ்வொன்றிற்கு மோதிர வளையங்கலெழுபதினாயிர விதமுண்டும் அம்மோதிர வளையங்க ளொவ்வொன்றிலு மெழுபதினாயிர விதமான அதாபுகளுண்டும் இன்னும் அதில் எழுபதினாயிரவிதத் தண்ணீருண்டும் அத்தண்ணீரொவ்வொன்றிலும் எழுபதினாயிரவிதக் கொதிப்புண்டும். அக்கொதிப்பொவ்வொன்றிலெழுபதினாயிர வதாபுகளுண்டும். அவ்வதாபுக ளொவ்வொன்றிலெழுபதினாயிரங் கள்ளி மரங்களுண்டும். அக்கள்ளிமரங்க ளொவ்வொன்றி லெழுபதினாயிர விதப்பாலுண்டும் அப்பாலிலொவ்வோர் விதப்பாலில் எழுபதினாயிரவிதப் பழங்களுண்டும். அப்பழங்களொவ்வொன்றிற்குள் எழுபதினாயிரவிதப் பாம்பும், எழுபதினாயிரவிதத் தேளும், எழுபதினாயிரவிதக் குளவியுமுண்டும். அப்பாம்புக ளொவ்வொன்றில் எழுபதினாயிரவித அதாபும், அக்குளவிக ளொவ்வொன்றில் எழுபதினாயிரவித அதாபுகளு முண்டும் அத்தேள்களி லொவ்வொன்று கொட்டினால் எழுபதினாயிர வருஷமட்டும் விஷ மிறங்காது. அக்குளவிகள் கொட்டினாலும் அப்படியுள்ள விஷந்தான் அப்பாம்பின் விஷத்தில் ஒரு துளி பூமியில் விழுந்தால் பூமி வானமெல்லாம் வெந்து சாம்பலாகிவிடும். இவ்வித அதாபுகளுடைய நரகத்தின் ஆழமும் அகலமும் நீளமு மிவ்வளவென்று சொல்லக்கூடாது.

இப்பேர்ப்பட்ட நரகங்களில் முதல் நரகம் குணாகபிரு வென்னும் பெரும்பாவமாகிய குற்றத்தைத் தெரிந்துந் தெரியாமலுஞ் செய்த இசுலாமானவர்க ளிருக்குமிடமாம். 2-வது நரகம் காபிரீன்க ளிருக்குமிடமாம். 3-வது நரகம் யாஜூசு மாஜூசுக் கூட்டத்தார்க ளிருக்குமிடமாம். 4-வது நரகம் ஷைத்தான்க ளிருக்குமிடமாம்

5-வது நரகம் தொழுகை யில்லாதவரும், ஸக்காத்துக் கொடாதவரும், நோன்பு பிடிக்காதவரும், ஹஜ்ஜு செய்யாதவரும் கைறு கைறுத்துக் கொடாதவரு மிருக்குமிடமாம். 6-வது நரகம் எகூ, நஸாறு, மஜூஜி யிவர்க ளிருக்குமிடமாம். 7-வது நரகம் முனாபிக்கு, முஷ்ரிக்கு இவர்க ளிருக்குமிடமாம். இன்னும் கள்ளு, சாராயம், அபின், கஞ்சா முதலிய குடிப்பாளரும், ஹறாம் ஸ்னாச் செய்பவரும் வட்டி வழக்கத்தாரும், கொலைபாதகத்தாரும் மற்றுங் கெடுதலையாகிய குற்றங்கள் செய்பவரு மிருக்குமிடமாம்.

இன்னும் ஒளியின் நாவிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹுத்தஆலா தசுபீஹைப் படைத்தான். மோவாயிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹுத்தஆலா ஆபேஹயாத்தைப் படைத்தான். கழுத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அதினால் அல்லாஹுத்தஆலா பீவி மறியம் அவர்களைப் படைத்தான். பிடரிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹுத்தஆலா உல்லாசமான நபிமாரைப் படைத்தான். வலது தோளிலிருந்து இரண்டு துளி விழுந்தது. அதில் அல்லாஹுத்தஆலா ஒரு துளியினாற் பொழுதையும், ஒரு துளியினாற் பிறையையும் படைத்தான். இடது தோளிலிருந்து இரண்டு துளி விழுந்தது. அதில் அல்லாஹுத்தஆலா ஒரு துளியினாற் பகலையும் படைத்தான். வலது புயத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால் அல்லாஹுத்தஆலா அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாகு அன்ஹவர்களைப் படைத்தான். இடது புயத்திலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹுத்தஆலா வுமறுகத்தாபு றலியல்லாஹு அன்ஹவர்களைப் படைத்தான். மார்புக்கிடை நெஞ்சுப் பரப்பிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால், அல்லாஹுத்தஆலா வுதுமானதின் னூறைன் றலியல்லாஹு அன்ஹவர்களைப் படைத்தான். மூக்கிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதனால் அல்லாஹுத்தஆலா அலிகற்ற மல்லாஹு வஜுஹஹு றலியல்லாஹு அன்ஹவர்களைப் படைத்தான்.

இன்னும், அந்த ஒளியி நெஞ்சிலிருந்து 10 துளி விழுந்தது. அதில் அல்லாஹுத்தஆலா முதற்றுளியினால் ஆரிபுகளையும், இரண்டாந் துளியினால் ஆபிதுகளையும், மூன்றாந் துளியினால் முத்தக்கீன்களையும், நான்காந் துளியினால் பக்கீர்களையும், ஐந்தாந் துளியினால் ஆலீம்களையும், ஆறாந் துளியினால் ஆஷிக்குகளையும், ஏழாந் துளியினால் பீஸபீற் செய்பவர்களையும், எட்டாந் துளியினால் மூமின்களையும், ஒன்பதாந் துளியினால் ஸாலிஹீன்களையும், பத்தாந் துளியினால் தௌபாச் செய்யப்பட்டவர்களையும் படைத்தான்.

இன்னும் ஒளியின் வலது கையிலிருந்து 10 துளி விழுந்தது. அதில், அல்லாஹுத்தஆலா முதற்றுளியினால் சறுசறென்கிற காற்றையும், இரண்டாந் துளியினால் றப்றப் பென்கிற காற்றையும், மூன்

ரூந்துளினுல் வானத்தடியையும், நான்காந்துளியினுல் மின்னலையும், ஐந்தாந்துளியினுல் சூபிறன்னுங்குழலையும், ஆருந்துளியினுல் சுவர்க்கலோகப் பெண்களாகிய ஹூறுல்ஈன்களையும், எழாந்துளியினுல் சுவர்க்கத்துத் தோளிப்பெண்களையும், எட்டாந் துளியினுல் ஸிதுறத்துல் முந்தஹா வென்னு மரத்தையும், ஒன்பதாந்துளியினுல் தூபா வென்னு மரத்தையும், பத்தாந்துளியினுல் சுவர்க்கத்திலுள்ள சகல மரங்களையும் படைத்தான்.

இன்னும், ஒளியின் இடது கையிலிருந்து 10 துளி விழுந்தது அதில், அல்லாஹு த்தஆலா முதற்றுளியினுல், துப்புரவாகியஷருபத்ஷரூபையும், இரண்டாந்துளியினுற் றேனையும், மூன்ருந் துளியினுற் பாலையும், நான்காந் துளியினுல் அவுலல்க் கதவுரென்னு மாற்றையும், ஐந்தாந் துளியினுல் எழு சமுத்திரத்தின் நீரையும், ஆருந்துளியினுல எழுபதினுயிரவித புட்பங்களையும், எழாந் துளியினுல் எழுபதினுயிரவித ஆறுகளையும், எட்டாந் துளியினுல் எழுபதினுயிரவித வாசனையும், ஒன்பதாந் துளியினுல் எழுபதினுயிரவித முத்துகளினையும் சமுத்திரத்தையும், பத்தாந்துளியினுல் எழுபதினுயிர வித ருசிகரத்தையும் படைத்தான்.

இன்னும், ஒளியின் வலது முழங்கையிலிருந்து 5 துளி விழுந்தது. அதில், அல்லாஹு த்தஆலா முதற்றுளியினுல் வெள்ளியையும், இரண்டாந்துளியினுற், பொன்னையும் மூன்ருந் துளியினுல் மூசாநபியுடைய ஆசாவையும், நான்காந் துளியினுல் சுலைமாநபியுடைய முத்திரை மோதிரத்தையும், ஐந்தாம் துளியினுல் யூசுபு நபியுடைய அழகையும் படைத்தான்.

இன்னும் ஒளியினிடத்து முழங்கையிலிருந்து 5 துளி விழுந்தது. அதில் அல்லாஹு த்தஆலா முதற்றுளியினுல் இபுறூகீம் நபியுடை ஆடுகளையும். 2-ம் துளியினுல் சுவர்க்கத்தின் குதிரைகளையும் 3-ம் துளியினுல் பறவைபபாதிகளையும், 4-ம் துளியினுல் நாற்கால் ஜெந்துக்களையும், 5-ம் துளியினுல் ஆதத்தையும் ஹவ்வாவையும் படைத்தான்.

இன்னும், அவ்வொளியின் வயது முழங்காலி விருந்து 2 துளி விழுந்தது. அதில், ஒரு துளியினுல் அல்லாஹு த்தஆலா சூதுசையும், மறு துளியினுல் றாகையும் படைத்தான், இடது முழங்காலிலிருந்து 2-துளி விழுந்தது. அதில், ஒரு துளியினுல் அல்லாஹு த்தஆலா மீஸானையும், மறு துளியினுற் சூரியனையும், நட்சத்திரங்களையும் படைத்தான், வலது கெண்டைக்காலி விருந்து ஒரு துளி விழுந்தது. அதினுல், அல்லாஹு த்தஆலா கோபுக்காமலையையும், அறபாத்து மலையையும் படைத்தான். இடது கெண்டைக் காலிவிருந்து ஒரு துளி விழுந்தது. அதினுல், அல்லாஹு த்தஆலா ஸிறுத்தல் முஸ்தக்கீம் பாலத்தைப் படைத்தான். வலது குதிங்கா

லிலிருந்து ஒரு துளி விழுந்தது. அதினால், அல்லாஹுத்தஆலா புருக்கைப் படைத்தான். இடது குதிங்காலி லிருந்து ஒரு துளி விழுந்தது. அதினால், அல்லாஹுத்தஆலா துல்துலைப்படைத்தான் இடுப்பிலிருந்து 4-துளி விழுந்தது. அதில், அல்லாஹுத்தஆலா முதற்றுளியினாற் காற்றையும், 2-ம் துளியினால் நெருப்பையும், 3-ம் துளியினால் தண்ணீரையும், 4-ம் துளியினால் மண்ணையும் படைத்தான்.

இவ்விதம், படைத்தான பின்னர், அல்லாஹுத்தஆலா அவ்வொளியைப் பார்த்து, ஆய் வீறும், வலுப்பமுள்ள வொளியே நீ இந்த நான்கு வஸ்துக்களினின்று மொன்றைத் தெரிந்தெடுத்துக் கொள். அதனாலுன்னைத் துனியாவிலுண்டாகி விளக்கஞ் செய்ய வேண்டுமென்று திருவுளமானான், அப்போது, ஷபீகுல் முதுனபீன், முஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்களொளியானது, நெருப்பினிடத்திற் போய் அஸ்ஸலாமு அலைக்கும் நெருப்பே யென்றது. அதற்கு நெருப்பு வஅலைக்கஸ் ஸலாம் நூறுமுஹம்மதே யென்று ஜவாபு சொன்னது அப்போது ஒளியானது நெருப்பைப் பார்த்து, நீயாரென்று கேட்டது. அதற்கு நெருப்பு, அல்லாஹுத்தஆலாவுடைய படைப்புகளில் நின்றும் நானொரு படைப்பென்று சொன்னது. அப்போது ஒளி நெருப்பைப்பார்த்து நீ துனியாவி லென்ன காரியஞ் செய்வாயென்று கேட்டது. அதற்கு நெருப்பு, ஒளியைப்பார்த்து என் மனதில் நினைத்தபடியே யெல்லாஞ் செய்வேனென்று சொன்னது அது கேட்டு, ஒளி நெருப்பைப் பார்த்துப் படைப்புண்ட அடியானாகிய உனக்கு ஒரு மனது முண்டுமோ.

ஆனால் படைப்பாகிய அடியார்களுக்கு ஐபேயொழிய ஐபில்லாதவை யாதொன்று மில்லையே அப்படியிருக்க நீ சொல்லுவதைப் பார்த்தால், உன்னிடத்தில் யாதொரு ஐபுமில்லைப்போலே தெரிய வருகிறதே. அப்படியு முண்டோவென்று கேட்டதற்கு, நெருப்பு ஒளியைப்பார்த்து ஆம் என்னிடத்தில் யாதாமொரு ஐபுமில்லை. அப்படி யென்னிடத்தில் என்ன ஐபிருக்கிறதாகத் தோற்றுகிறது சொல்லும். நூறு முஹம்மதே யென்று கேட்டது. அதற்கு, நூறு முஹம்மது நெருப்பைப் பார்த்து, ஆய் நெருப்பே, யுன்னை யெழுப்புகிறது காற்று, தண்ணீர் இவ்வித ஐபு உன்னுக்குள்ளிருக்க நீ தடாரிக்கமாய் என்னில் யாதாமொரு ஐபுமில்லையென்று சொன்னையேயென்றது. அப்போது நெருப்பானது ஒளியைப் பார்த்து, நூறு முஹம்மதே நீர் சொன்னது சரிதான். என்றாலும் உமக்குள்ளே யாதாமொரு ஐபுமில்லையோவென்று கேட்டது. அதற்கு, ஒளியானது நெருப்பைப் பார்த்துத் அஸ்தகுபிறுல்லா ஆய் நெருப்பே என்னைப்பார்த்து அப்படி யாதொன்றுஞ் சொல்லாதே. அஃதேதெனென்றால், நான் மிகுந்த ஐபுள்ளவன். ஆனால் ஐபில்லாதவன். அரிய

பெரிய நாயகனாகிய அல்லாஹுத்தஆலா ஒருவனைத் தவிர மற்றுமுள்ளவை யெல்லாம் ஐபுள்ளவைகள் தான். ஆதலால், நெருப்பே நீ கலிமாச் சொல்லென்று சொன்னது. அது கேட்டுடனே நெருப்பு அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹத்ஹு லாஷரீக்கலஹு அஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹுவறசூலுஹு என்று இந்தக் கலிமாவைச் சொல்லி றசூலுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து மிகுந்த தாழ்ச்சியுஞ் செய்தது.

பின்னர் ஒளி காற்றினிடத்திற்போய் அஸ்ஸலாமு அலைக்கும் காற்றே யென்றது. அதற்குக் காற்று வஅலைக்கஸ்ஸலாம் நூறுமுஹம்மதேயென்று ஜவாப்பு சொன்னது. அப்போது ஒளியானது காற்றைப் பார்த்து; நீயாரென்று கேட்டது. அதற்குக் காற்று, அல்லாஹுத்தஆலாவுடைய படைப்புகளில் நின்றும் நானொரு படைப்பென்று சொன்னது. அப்போது, ஒளி காற்றைப் பார்த்து நீ துனியாவில் என்ன காரியஞ் செய்வாயென்று கேட்டது. அதற்குக் காற்று, ஒளியைப்பார்த்து என் மனதில் நினைத்தபடி யெல்லாஞ் செய்வேனென்றது. அது கேட்டு ஒளி காற்றைப் பார்த்துப் படைப்புண்ட அடியானாகிய வுனக்கு ஒரு மனது முண்டுமோ.

ஆனால் படைப்பாகிய அடியார்களுக்கு ஐபேயொழிய ஐபில்லாதவை யாதொன்றுமில்லையே. அப்படியிருக்க, நீ சொல்வதைப் பார்த்தால் என்னிடத்தில் யாதாமொரு ஐபுமில்லை போலே தெரிய வருகிறதே அப்படியுமுண்டோ வென்று கேட்டதற்குக் காற்று ஒளியைப்பார்த்து ஆம், என்னிடத்தில் யாதாமொரு ஐபுமில்லை அப்படி யென்னிடத்தில் என்ன ஐபிருக்கிறதாகத் தோற்றுகிறது. சொல்லும் நூறுமுகம்மது யென்று கேட்டது. அதற்கு நூறுமுஹம்மது காற்றைப்பார்த்து ஆய, காற்றே எல்லார் முகத்தையும் நீ காண்பாய் உன் முகத்தையாருங் காணமாட்டார்களே இவ்வித ஐபுன்னுக்குள்ளிருக்க, நீ தடாரிக்கமாய் என்னில் யாதாமொரு ஐபுமில்லையென்று சொன்னையே யென்றப்போது காற்றானது, ஒளியைப்பார்த்து நூறுமுஹம்மதே நீர் சொன்னது சரிதான் என்றாலும் உமக்குள்ளே யாதாமொரு ஐபுமில்லையோவென்று கேட்டது. அதற்கு ஒளியானது காற்றைப்பார்த்து அஸ்தகுபி றுல்ல ஆய் காற்றே என்னைப்பார்த்து அப்படி யாதொன்றுஞ் சொல்லாதே. அஃதேதனென்றால்; நான் மிகுந்த ஐபுள்ளவன், ஆனால், ஐபில்லாதவன் அரிய பெரிய நாயனாகிய அல்லாஹுத்தஆலா வொருவனைத் தவிர மற்றுமுள்ளவை யெல்லாம் ஐபுள்ளவைகள் தான். ஆதலால், காற்றே நீ கலிமாச் சொல்லென்று சொன்னது. அது கேட்டுடனே காற்று வஅஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வகுதஹுக் லாஷரீக்கலஹு வஇஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறசூலுஹு என்று அந்தக் கலிமாவைச் சொல்லி றசூலுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து மிகுந்த தாழ்ச்சியுஞ் செய்தது.

பின்ன ரொளி தண்ணீரிடத்திற் போய் அஸ்ஸலாமு அலைக்கும் தண்ணீரை யென்றது அதற்குத் தண்ணீர் வஅலைக்கஸ்ஸலாம் நூறு முகம்மதே யென்று ஜவாபு சொன்னது. அப்போது ஒளியானது தண்ணீரைப் பார்த்து நீ யாரென்று கேட்டது. அதற்குத் தண்ணீர் அல்லாஹுத்தஆலாவுடைய படைப்புகளில் நின்றும் நானொரு படைப்பென்று சொன்னது. அப்போது ஒளி தண்ணீரைப் பார்த்து நீ துனியாவில் என்னகாரியஞ் செய்வா யென்று கேட்டது அதற்குத் தண்ணீர் ஒளியைப் பார்த்து என் மனதில் நினைத்தபடி யெல்லாஞ் செய்வே னென்று சொன்னது அதுகேட்டு ஒளி தண்ணீரைப் பார்த்துப் படைப்புண்ட அடியானாகிய உனக்கு ஒரு மனது முண்டுமோ.

ஆனால், படைப்பாகிய அடியார்களுக்கு ஐபேயொழிய ஐபில்லாதவை யாதொன்றுமில்லையே அப்படி யிருக்க, நீ சொல்வதைப் பார்த்தால் உன்னிடத்தில் யாதாமொரு ஐபிமில்லைப் போலே தெரியவருகிறதே. அப்படியு முண்டுமோவென்று கேட்டதற்குத் தண்ணீர் ஒளியைப்பார்த்து ஆம் உன்னிடத்தில் யாதாமொரு ஐபுமில்லை. அப்படி யென்னிடத்தில் என்ன ஐபிருக்கிறதாகத் தோற்றுகிறது சொல்லும் நூறுமுஹம்மதே யென்று கேட்டது. அதற்கு நூறுமுஹம்மது தண்ணீரைப் பார்த்து ஆய் தண்ணீரே உன்னிடத்தில் நஜீசைக் கழுவுவார்கள். இன்னும் நீ கட்டுப்பட்டு நிற்பாய். அதனால் உன்னிறமுங் குலைந்து நாற்றமெடுத்துப் புழுக்களு முண்டாகி மிகுந்த கேடுகெட்டுப் போவாயே இவ்வித ஐபுன்னுக்குள்ளிருக்க நீ தடாரிக்கமாய் என்னில் யாதாமொரு ஐபுமில்லையென்று சொன்னையே யென்றபோது தண்ணீரானது ஒளியைப்பார்த்து நூறுமுஹம்மதே நீர் சொன்னது சரிதான். என்றாலும் உமக்குள்ளே யாதாமொரு ஐபுமில்லையாவென்று கேட்டது. அதற்கு ஒளியானது தண்ணீரைப்பார்த்து அஸ்தகுபிறுல்லா ஆய் தண்ணீரே என்னைப் பார்த்து அப்படி யாதொன்றுஞ் சொல்லாதே அஃதெனென்றால் நான் மிகுந்த ஐபுள்ளவன் ஆனால் ஐபில்லாதவன் அரிய பெரிய நாயனாகிய அல்லாஹுத்தஆலா ஒருவனைத் தவிர மற்றுள்ளவை யெல்லாம் ஐபுள்ளவைகள் தான். ஆதலால் தண்ணீரே நீ கலிமாச் சொல்லென்று சொன்னது. அது கேட்டுடனே தண்ணீர் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹு வஹு லாஷரீக்கல வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துகுவறசூலுஹு என்று இந்தக் கலிமாவைச் சொல்லி றசூலுக்கு ஈமான் கொண்டு கபூல் செய்து மிகுந்த தாழ்ச்சியுஞ் செய்தது.

பின்னர் ஒளியானது மண்ணிடத்திற் போய் அஸ்ஸலாமு அலைக்கும் மண்ணே யென்றது. அதற்கு மண் வஅலைக்கஸ்ஸலாம் நூறுமுகம்மதே யென்று ஜவாப்பு சொன்னது. அப்போது ஒளி

யானது மண்ணைப் பார்த்து நீ யாரென்று கேட்டது. அதற்கு மண் அல்லாஹுத்தஆலாவுடைய படைப்புகளில் நின்றும் நானொரு படைப்பென்று சொன்னது. அப்போது ஒளி மண்ணைப் பார்த்து, நீ துனியாவி லென்னகாரியஞ் செய்வாயென்று கேட்டது அதற்கு மண்ணானது, ஒளியைப் பார்த்து நான் மிகவு மிசிக்கினனவன் அதிலும் படைப்பினங்கட் கெல்லாந் தாழ்மையானவன் ஆதலா லென்னிடத்திற் யாதொரு வல்லமையுமில்லை. அதுவுந் தவிர நானொன்றுஞ் செய்யப்பட்டவனுமல்ல என்று மிகுந்த தாழ்ச்சியுடனே அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹுதுலாஷரீகலஹு அஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹுவறசூலுஹு என்று இந்தக் கலிமாவைச் சொல்லி றசூலுக்கு ஈமான்கொண்டு கபூல் செய்து மிகுந்த தாழ்ச்சியும் செய்தது. அது கண்டு நூறுமுஹம்மது மண்ணைக் கட்டியணைத்து இதே சகலமானவைக்கும் ஆகுமானதென்று தெளிந்தெடுத்துக் கொண்டு போய்விட்டது.

பின்னர் வெகுகாலஞ்சென்று அல்லாஹுத்தஆலா மலக்குகளுடனே பூலோகத்தில் நானொரு கலீமாவை யுண்டாக்கிறேனென்று சொன்னான. அது கேட்டு மலக்குகள் அல்லாஹுத்தஆலாவோடும், எங்களாண்டவனே! அந்த மனுடனை யேனுண்டாக்குகிறாய். மனுடர்களினாலே பூலோகத்திலே சண்டை சாடிகள் வெட்டுக் குத்துகள் முதலிய அநேகங் கெடுதலுண்டாகுமே நாங்களடங்கலு மப்படி யல்லாமல் உன்னுடைய வணக்கங்களிலும், திக்கிர் தசுபீஹுகளிலும், ஏவற்செயல்களிலும் நீங்குதலில்லாமற் பரிசுத்தமாக இருக்கிறோமே அது போதாதா வென்றார்கள் அதற்கு, அல்லாஹுத்தஆலா மலக்குகளுக்கு, ஆய் மலக்குகளே மனுடருடைய சேதி யெனக்குத் தெரியுமே யல்லாமல் உங்களுக்குத் தெரியாதென்று சொன்னான். அது கேட்டு, அந்த மலக்குகள் ஒன்றும் பேசாதிருந்தார்கள்.

பின்னர் அல்லாஹுத்தஆலா தனது ஹபீபாகிய முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைப் படைப்பதற்காகச் ஜிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்களோடும் நீர் மதினாமுநவ்வறிற் போய் மண்ணெடுத்து வாருமென் றுத்திரவு செய்தான். உடனே ஜிபுரீல் அலைகிஸ்ஸலாமவர்கள் மதினாமுநவ்வறிற்போய் இப்போது நபிநாயக மவர்கள் அடங்கியிருக்கிற தலத்து மண்ணை யெடுத்துக் கொண்டுபோய் அம்மண்ணையும் நபிநாயகமவர்களுடைய ஒளியையும் ஒன்றாய்க் கலந்து அதிலே சுவர்க்கத்திலுள்ள தஸனீமென்கிற குளத்துத்தண்ணீர் விட்டு நன்றாய் பிசைந்து ஒளியான சரீரவுற்பத்தி செய்து அச்சரீரத்தைச் சுவர்க்கத்திலோடுகிற ஆற்றுத்தண்ணீரிலே சிலதரம் அழுத்தியழுத்தி முழுக்காட்டி யெடுத்தார்.

பின்னர் அல்லாஹுத்தஆலா அச்சரீரத்தை, வானம் பூமி முதலான வெவ்விடங்களிலுங் கொண்டுபோய்ச் சகல படைப்பினங்களுக்

கும் காண்பிக்கும்படியாய் மலக்குகளுக்கு உத்திரவு செய்தான் அப்படியே மலக்குகள் முஹம்மது சல்லல்லாகு அலைகிவஸல்ல மவர்களுடைய ஒளியாகிய சரீரத்தை யெவ்விடங்களிலுங் கொண்டுபோய் அங்குள்ள சகல படைப்பினங்களெல்லாம் ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களுடைய சரீரத்தைக் காண முன்னமே பயஹாப்பர் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய சரீரத்தைக் கண்டு கொண்டதுகள் பின்னர் அல்லாஹுத்தஆலா அந்த வொளியாகிய அமானிதத்தை யொப்படைக்க வேண்டுமென்பதாய் நாடி அந்த நாட்டத்தை மலக்குகளுக்கு உத்திரவு செய்தான். அம் மலக்குகள் முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வொளியை நன்றாகச் சிங்காரித்து இந்த அமானிதத்தை யாரேனு மேற்றுக்கொள்ளுங்க ளென்றுசொல்லி மைதானில் வைத்தார்கள். அப்படி மைதானில் மலக்குகள் வைத்த வொளியை வானம் பூமி யெங்குமுள்ள படைப்பினங்க ளெல்லாம் பார்த்து இவ்வமானிதத்தை யெடுத்துச் சுமக்க எங்களா லாகாதென்று மிகுந்த தாழ்மையுடனே சொல்லி விட்டதுகள். பின்னர் அவ்வமானிதத்தை ஆலம் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய றூஹானது பார்த்து இவ்வமானிதத்தை நானேற்றுக்கொண்டே னென்று மிகுந்த இன்பத்துடனே சொல்லி ஏற்றுக்கொண்டது.

பின்னர் அல்லாஹுத்தஆலா பாவா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களைப் படைக்க வேண்டுமென்று நாடிப் பூமியில் மண்ணெடுத்துக் கொண்டு வாருமென்று முதலில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத்திரவு செய்தான். அவ்வுத்திரவின் பிரகாரம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் பூமியிலிறங்கி இப்போது கருபத்துல்லா இருக்கிறதே அத்தலத்தில் வந்துநின்று குனிந்து மண்ணெடுக்கும்போது பூமியானது ஜிபுரீலைப் பார்த்து, ஆய் ஜிபுரீலே! அல்லாபேரில் ஆணையாக என்னிடத்தில் நின்று மண்ணெடுக்காதேயும். அஃதேனெனில் நீயென்னிடத்தில் நின்றுங் கொண்டுபோகிற மண்ணினால் அல்லாஹுத்தஆலாவுடைய கலீபா உண்டாகுவார். அவருடைய அவுலாதுகள் மிகுந்த குற்றவாளிகளாவார்கள். அதனால் அவர்கள் பேரில் நரகத்துடைய அதாபு வாஜிபாகிப் போகுமே ஆனால் நானோ மெத்தவு மெழுமையாகி கால்தூசியா யிற்றே. அப்பேர்ப்பட்ட எனக்கு அல்லாஹுத்தஆலாவுடைய அதாபைச் சுமக்க எவ்வளவும் வல்லமையில்லையே ஆதலால், நீ ரென்னில் நின்று மண்ணெடுக்க வேண்டாமென்று சொல்லினது. அது கேட்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மொன்றும் பேசாமற் போய்விட்டார்.

பின்னர், அல்லாஹுத்தஆலா மீக்காயீல் அலைஹிஸ்ஸலா மவர்களை மண்ணெடுத்து வரச்சொல்லி யனுப்பினான். அவர்களுக்கும் பூமி முன்னர் ஜிபுரீலவர்களுக்குச் சத்தியஞ்செய்தது போல சத்தியஞ் செய்தது. அது கேட்டு மீக்காயிலவர்களு மொன்றும் பேசா

மற் போய்விட்டார்கள். பின்னர் அல்லாஹுத்தஆலா இசுறாபீல் அலைஹிஸ்ஸலா மவர்களை மண்ணெடுத்துவரச் சொல்லி யனுப்பினான். அவர்களுக்கும் பூமி முன்னர் மூன்று பெருக்கும் ஆணையிட்டதுபோலவே ஆணையிட்டது. அதுகேட்டு இசுறாபீ லவர்களு மொன்றும் பேசாமற் போய்விட்டார்கள். பின்னர் அல்லாஹுத்தஆலா இசுறாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களை மண்ணெடுத்து வரச் சொல்லி யனுப்பினான் அவர்களுக்கும் பூமி முன்னர் மூன்று பேருக்கும் ஆணையிட்டது போலவே ஆணையிட்டது அது கேட்டு இசுறாயீ லவர்களு மொன்றும் பேசாமற் போய்விட்டார்கள். பின்னர், அல்லாஹுத்தஆலா இசுறாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களை மண்ணெடுத்து வரச்சொல்லி யனுப்பினான். அவர்களுக்கும் பூமி முன்னர் மூன்று பேருக்கும் ஆணையிட்டது போலே ஆணையிட்டது அது கேட்டு இசுறாயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் பூமியைப்பார்த்து ஓய் பூமியே நீ எவன் பேரிலாணையிட்டாயோ அவன்தா னென்னை யனுப்பி வைத்தான். ஆதலால் அவனுத்திரவை நான் தட்டமாட்டேன், அவ்வுத்திரவின் பிரகாரம் உன்னில் நின்றும் நான் மண்ணெடுத்துக் கொண்டு போவே னென்று, சகலவிடத்து மண்ணு மொன்றாகச் சேர்ந்து வரும்படியாய் ஒரு பிடி நிரம்ப மண்ணெடுத்துக் கொண்டு போய். அல்லாஹுத்தஆலாவோடும், யாஅல்லாஹு நீ யுத்திரவு செய்தபடிக்கு மண்ணெடுதது வந்தேனென்று சொன்னார்.

அப்போது, அல்லாஹுத்தஆலா இசுறாயீலோடும் நானிந்த மண்ணைக் கொண்டும் ஒரு கலீபா உண்டாக்குவேன். அவருடைய ஹயாத்தை வாங்க உம்மையே யேவுவேன், ஆதலால் இந்த மண்ணை மக்கத்திற்குந், தாயிபுக்கு மிடையிலே கொண்டுபோய் வையு மென்றுத்திரவு செய்தான் அப்படியே, யிசுறாயீல் அலைஹிஸ்ஸலாம் அந்த மண்ணைக் கொண்டுபோய் வைத்தார்கள். பின்னர், அல்லாஹுத்தஆலா உத்தரவுப்படிக்கு அம்மண்ணின் பேரில் றஹுமத்தென்னு மழை பெய்யப்பட்டது.

அம்மழைத்தண்ணீரும், அம்மண்ணுமொன்றாய்க்கலந்து இரண்டு வருஷத்திற்குள் பிசையப்பட்ட மண்ணாயிற்று. பின்னர், இரண்டு வருஷத்திற்குள், குயவன் நன்றாக மிதித்துப்பிசைந்த மண்போலாயிற்று. பின்னர், இரண்டு வருஷத்திற்குள் வளந்துகள் செய்கிற மண்போலே நல்ல பதமாச்சுது, அதற்குப்பின்னர் இரண்டு வருஷத்திற்குள்ளே மனிதவுற்பத்தியாயிற்று இவ்விதமெட்டு வருஷத்திற்குள் உற்பத்தியெல்லாம் பூரணமாய் முடிந்தது ஆனால், இன்னொரு கவுலில், இரண்டு வருஷத்தில் மனுடவுற்பத்தியாகி முடிந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இவ்விதமிருக்கையில், ஒரு நாள் இபுலீசானவன் எழுபதினாயிரம் மலக்குகளோடும். அவ்விடத்தில் வந்து பார்க்கும் போது,

பாவா ஆதத்துடைய உடல்மண்ணின் பேரில் விழுந்துகிடக்கக்கண்டு அவ்வுடலைப் பார்த்துப் பழிப்பாக இகழ்ச்சி செய்துவிட்டுப்போனான், பின்னர், ஒருநாள் இபுலீசு அம்மலக்குகளுடனே அவ்விடத்திற்கு வந்தான். அப்போது, அம்மலக்குகள் இபுலீசையும் பார்த்து இந்த மண்தானா, அல்லாஹுத்தஆலாவுடைய கலீபாவென்று கேட்டார்கள். அதற்கு இபுலீசு அம்மலக்குகளைப் பார்த்து ஆம் இதுதான், என்கினும் அல்லாஹுத்தஆலா இந்த மனுடனை என் வசத்திலாக்கினால் நானிவனை மிகுந்த கெடுதி செய்வேன், அல்லது என்னை இவன் வசத்திலாக்கினால்; நானொருபோது மிவன் வசத்திலிருக்கமாட்டேனென்று சொன்னான். இவ்விதம், நடக்கையில் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய உடலையும், உறுப்புகளையும், பூரணமாகச் செய்யப்பட்டபோது, முன்னர் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய உயிரேற்றுக் கொண்ட, அமானிதமாகிய நபி நாயக முஹம்மது சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்களுடைய வொளியை, பாவா ஆதமவர்களுடைய நெற்றியில் அழுத்திவைக்கும் படிக்கு அல்லாஹுத்தஆலா, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத்திரவு செய்தான். அதுபோலவே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபிநாயகத் தொளியை, பாவா ஆதமவர்களுடைய நெற்றியில் வைத்தழுத்தித் தேய்த்து விட்டார்கள். அதனால் பாவா ஆதமவர்களுக்கு அழகுமிகுத முண்டாயிற்று. இப்படிக்குக் கசசுல் அன்பியாக் கித்தாபிற் சொல்லப்படுகிறது.

இவ்விடத்தில் பாவா ஆதவமர்களுடைய உடல் பூரணமாக உற்பத்தியான நாற்பதாம் நாளைக்குப் பின்னர் அவ்வுடலில் அவர்களுயிரை விடும்படிக்கு, அல்லாஹுத்தஆலா ஜிபுரீலுக்கும் மீக்காயீலுக்கும், இசுறாபீலுக்கும், இசுறாயீலுக்கும், உத்திரவு செய்தான். அவ்வுத்திரவு பிரகாரம், அந்த நான்கு பேர்களும் ஒவ்வொருவர் கூட 70000-70000 மலக்குகளைக் கூட்டிக்கொண்டு பாவா ஆதமவர்களுயிரை யொளியான வோர் தட்டில் வைத்து, அதையொளிவான தஸ்தறினாலே மூடியெடுத்துக் கொண்டு வந்து, அந்த உடலின் தலையின் பேரில் வைத்து மூடியிருந்த தஸ்தரைத் திறந்து விட்டார்கள். அப்போது, ஏழு வானத்திலுமுள்ள மலக்குகள் யாவரும், அந்த உயிரானது பாவா ஆதமவர்களுடலில் எவ்விதம் புகுதுகிறது பார்க்க வேண்டுமென்று வந்தார்கள். அப்போது, அல்லாஹுத்தஆலா பரத்தில் நின்று மோர் சத்தம், ஆய் உயிரே, உவ்வுடலுக்குள் புகுதென்றுவந்தது. அதுகேட்டு, உயிரானது ஏழுதரம் அந்த உடலைச் சுற்றி வந்து யாஅல்லாஹு நானொளிவான வஸ்துவாயிருக்க இருளும். அருக்களிப்பு முள்ளதாயிருக்கிற இந்த உடலுக்குள் எப்படிப் புகுதுவேனென்று சொன்னது. அப்போது அல்லாஹுத்தஆலா பரத்தில் நின்றும் ஓர் சத்தம் ஆய் ஆதத்துடைய உயிரே நீ அந்த உடலுக்குள் அருவருப்பாகவே புகுந்து அருவருப்பாகவே வந்து விடென்று முண்டாயிற்று.

இவ்விதம், அல்லாஹுத்தஆலாவுடைய சத்தத்தைக் கேட்ட அந்தத் துப்புரவாகிய உயிரானது. உடனே பாவா ஆதமவர்களுடைய ளுக்குள் மூக்கின் வழியாகப் புகுந்தது. இன்னுமோர்கவுலில், அந்த உயிரானது பாவா ஆதமவர்களி னுச்சந்தலை வழியாகப் புகுந்த தென்றும் சொல்லப்படுகிறது இவ்விதத்தில், உடலுக்குட் புகுந்த உயிரானது உச்சந்தலையையும், நகத்தையும், முகத்தையும், இரண்டு வருஷகாலமாகச் சுற்றிக் கொண்டிருந்து பின்னர், கண்களிலிறங்கி அக்கண்களின் பார்வை யுண்டாக்கி. அப்பார்வை சரீரத்தின்மே லோடிப் பார்க்கும்போது, சரீரமெல்லாம் மண்ணாக இருந்தது கண்டு பின்னர் காதுகள் வரைக்கு மிறங்கிக் காதுகளினாற் கேள்வி யுண்டாக்கி, அதனால் மலக்குகள் செய்யு தஸ்பீஹைக் கேட்டுக் கொண்டிருந்தது.

பின்னர், மூக்குத்தண்டு வரைக்கு மிறக்கி மூக்கில் தும்பலுண்டாக்கித்தும்மல் வந்தது. அப்போது, உயிர் நன்றாக ஸ்திரப்பட்டது. இப்படிக்குத் தகாயிக்குல் அக்பாரில் சொல்லப்படுகிறது. இன்னும் கசசுல் அன்பியாவில் சொல்லப்படுகிறது யாதெனில் உயிருடம்பு முழுதும் நிரைந்த பின்னர் தும்மல் வந்து தும்மினபோது மூக்கந் தண்டிலிருந்த றூஹானதுமார்பு வரைக்குமிறங்கினது. அப்போது, பாவா ஆதமலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹுத்தஆலாவினுடைய நாட்டத்தைக்கொண்டும், இரண்டுள்ளங் கையையும் பூமியில் ஊன்றிக்கொண் டெழுந்திருக்கப்போனார். எழும்பக்கூடாமற் போயிற்று. அதுகண்டு, மலக்குகள், ஆ, ஆ அஃதென்ன ஆச்சரியம். இன்னம் பாதியுடல் மண்ணாகவே யிருக்க, அதற்குள்ளே அந்த மனுடன் எழுந்திருக்கப் பார்க்கிறானே, ஆனதால், இந்த மனுடன் ஆத்திரக் காரனாக இருப்பானென்று சொன்னார்கள். இன்னம் அல்லாஹுத்தஆலாவும் வேதத்திலே மனுடன் ஆத்திரக்காரனென்னும் சொல்லியிருக்கிறான்.

பின்னர், றூகானது பாவா ஆதமவர்கள் வயிறு வரைக்குமிறங்கி வயிற்றிற்குட் பசியுண்டாய், உண்ணுகின்ற தேட்ட முண்டாயிற்று பின்னர், உயிர் உள்ளங்கால் வரைக்குமின்றி யுடல்முழுமையும் நிறைந்தபோது, சரீரத்துடைய மண்ணெல்லாம் இரத்தமும், சதையும், எலும்பும், சௌவும் தோலுமாயின. அப்போது, பாவா ஆதமவர்களுக்கு உடுப்பாகச், சரீரமுழுமையும் நகமூடிக் கொண்டிருந்தது. அப்படியிருந்த, நகவுடுப்பானது, அவர்கள் செய்த ஓர் குற்றத்தினா லெடுப்பட்டுபோய், அதன் அடையாளத்திற்காகக், கை கால் விரல்களில் நகம் வைக்கப்பட்டது.

இவ்விதத்தில் பாவா ஆதமவர்களுடைய சரீரத்தில் உயிர் பூரணமாக நிறைந்தபோது, அவர்களுடைய நெற்றியிலே, அல்லாகுத்தஆலா முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்க ளொளியை இறக்கினான். அந்த வொளி, அவர்களுடைய நெற்றியிற் பதினான்

காம் நாளுதயமாகும் பூரண சந்திரனைப்போலே அறுஷு வரைக்கும் சுதிரிட்டிலங்கிக் கொண்டிருந்தது. அப்போது அல்லாஹுத்தஆலா மலக்குகளோடும் சொர்க்க லோகத்திலுள்ளவோர், இரத்தின சிங்காசனங் கொண்டு வரும்படியா யுத்திரவு செய்தான். அவ்வுத்திரவின் பிரகாரம் மலக்குகள் சிம்மாசன மெடுத்துக் கொண்டுவந்து வைத்தார்கள். அச்சிங்காதனத்தினுடைய சதுரம் நாற்பது மயிற்றொலே யுள்ளதாயும் பொன்னினாலும் தங்கத்தினாலும், நவரத்தினத்தினாலுஞ் சோடித்ததாயு மிருந்தது. அதின் பேரிலே பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாத்தை மேலான சுவர்க்கத்துடைகள் உடுத்தி, முத்து, மாணிக்கம் பதித்த தாஜென்னுந் தொப்பி தலைக்கிட்டு, அழகாக உட்கார வைத்து, அபூமுஹம்மதே யென்று கூப்பிட்டு, உமது தலையை மேலே யுயர்த்திப் பாருமென்று சொன்னான்.

அதுகேட்டு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்கள், தங்கள் தலையை மேலுயர்த்திப் பார்த்தபோது, அறுஷு தெரிந்தது அந்த அறுஷின் முந்தினதிரையிலேயோர் ஒளி யிலங்கிக் கொண்டிருக்கக் கண்டு, ஆதமவர்கள், அல்லாஹுத்தஆலாவோடும், ஆண்டவனே, இவ்வொளி யாருடையவொளியென்று கேட்டார்கள், அதற்கல்லாஹுத்தஆலா பாவா ஆதமவர்களோடும், இந்த வொளியானது ஓர் நபியுடைய ஒளி அந்த நபியுடைய பெயர் முஹம்மது, அந்த முஹம்மதை, நானுண்டாக்கா திருக்கில், ஆதமே உம்மை வானத்தை. பூமியை, மற்றுமுண்டானவை யாதொன்றையும் படைக்கவேமாட்டேன். மேலும் அந்த முஹம்மது உம்முடைய மகனாகப் பிறப்பார். ஆகலால் ஆதமே, நானும்மை அபூமுஹம்மதென் றருமையாக அழைத்தேனென்று சொன்னான்.

பின்னர், அல்லாஹுத்தஆலா, அஜாஸிலோடும், மற்ற மலக்குகளையுமழைத்து, ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத் தகியத்தென்னும் சிஜிதாச் செய்யும்படி யுத்திரவு செய்தான். அதுபோலே மலக்குகள் யாவரும் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத் தகியத்து சிஜிதாச் செய்தார்கள் அஜாஸீல் மாத்திரம். பெருமைத்தனமாகச் சிஜிதாச் செய்யாமல் மாறுபட்டு முன்கிருகி நின்றான். சிஜிதாச் செய்ய மலக்குகளெல்லாம் தங்கள் தங்கள் தலையைத் தூக்கிப் பார்க்கும்போது, அஜாஸீல் சிஜிதாச் செய்யாமல் நிற்கிறதைக் கண்டு இந்த இபுலீசு சிஜிதாச் செய்ய வில்லையே யென்று அவனை மனதில் வெறுத்து விட்டு மறுபடி இரண்டாந்தரமும் அம்மலக்குகள் சிஜிதாச்செய்தார்கள். அப்போது, அல்லாஹுத்தஆலா இபுலீசைப் பார்த்து ஆய் இபுலீசே, நானிரண்டு கையினாலு முண்டாக்கிய அந்த வஸ்துவுக்குச் சுஜூது செய்ய, உனக்கேன், நீங்குதலாயிற்று, நீ இவ்விதம் அகங்காரஞ் செய்தையே. அப்படிக்குக் கீர்த்தியில் நீ யுயர்ந்தவனோ என்று கேட்டான்.

அதற்கு, இபுலீசு, அல்லாஹுத்தஆலா வோடும், ஆண்டவனே நீ என்னை நெருப்பினாற் படைத்தாய். அவனை மண்ணினாற் படைத்தாய். ஆதலால் நானவனுக்கு உயர்த்தியாகத் தானிருக்கிறேனென்றும், இன்னும் நான் உனக்கு சுஜூது செய்யாதிருக்க வேறொருவனுக்கு சுஜூது செய்வேனோ செய்யமாட்டேனென்று சொன்னான் அது கேட்டு, அல்லாஹுத்தஆலா கோபமாகி, இபுலீசைப் பார்த்து நீ இவ்விடம்விட்டு நீங்கிப்போய்விடு. கியாமநாள் வரைக்கும் உன் பேரில் என்னுடைய முனிவாகிய லகுணத்தை இறக்கினேனென்று சொன்னான். அப்போது, லகுணத்துப்பெற்ற இபுலீசானவன் அல்லாஹுத்தஆலாவோடும் என்னுடைய நாயனே நீ என்னை நீக்கவும் தள்ளவுமாகிய மிடிமையானது, இந்த ஆதத்தைக் கொண்டும் என் பங்கி விருந்ததென்று சொன்னான். அதற்கு, அல்லாஹுத்தஆலா இபிலீசோடும் நீ முன்னாலே எழுதிவைத்திருக்கிறாயே அந்த எழுத்தை எடுத்துப்பாரென்று சொன்னான் அதுபோலே இபுலீசு அவ்வெழுத்தை யெடுத்துப் படித்துப்பார்த்து என்னுடைய நாயனே நான் கியாம நாள் வரைக்கும், மவுத்தில்லாமல் நீண்ட ஹபாத்தாக இருக்கவும் மனுடருடைய சதை இரத்த நரம்புகளிற் புகுந்திருக்கவுஞ் செய்வதுடனே, மனுடர்கள் கண்ணுக்கு மறைவாகவும் வைக்க வேண்டுமென்றுங் கேட்டான். அதற்கு அல்லாஹுத்தஆலா அப்படியே கொடுத்தேனென்று சொன்னான் இப்படிக்கிக் கசசுல் அன்பியாவிலும், தஹகாயிக்குல் அக்பாறிலும் வருகின்றன.

மலக்குகள். ஆதம அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத் தகியத்துச் சுஜூது செய்த பின்னர், அல்லாஹுத்தஆலா, ஆதமுக்காகக் கஸ்தூரினாலே ஒரு குதிரையை யுண்டாக்கினான், அக்குதிரையின் பெயர் மைமூனா அதற்கிருபக்கமு முத்துகளினாற் சிறகுண்டாயிருந்தது. அதின்பேரில் பாவா ஆதமவர்களை யேற்றிக் கொண்டு. பூலோகம் வானலோக முதலிய எவ்விடங்களிலுமுள்ள அதிசயங்களெல்லாவற்றையுங் காண்பிவிக்கும்படியாய் அல்லாஹுத்தஆலா ஜிபூரில் மீக்காயில், இசுறுபீல் ஆகிய இம்மூவருக்கு முத்திரவு செய்தான் அது கேட்டு, அம்மூவரும பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்திற்கு வந்தார்கள், அப்படி வந்த மூன்று பேரையும், பாவா ஆதமவர்கள் பார்த்தவுடனே, அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்குமென்று சலாம் சொன்னார்கள். அவர்களும் வ அலைக்கஸ்ஸலாமென்று பிரத்தி சொன்னார்கள். அப்போது ஆதமவர்களுக்கு, அல்லாஹுத்தஆலா சொன்னான். ஆதமே இந்த சலாமானது கியாம பரியந்த மூமினினவர் கட்குச் சொல்லவுஞ் செய்யவுமிருக்கட்டுமென்று சொன்னான்.

பின்னர், அம்மூவரும் பாவா ஆதம் அலைஹிசலா மவர்களை, அக்குதிரையின்பேரி லேற்றிச் சிபுரீல் கடிவாளத்தையும், மற்ற இருவரும் இருபக்கத்தையும் பிடித்துக் கொண்டு வானம், பூமி முத

லிய மற்றிடங்களி லெல்லாமுள்ள அதிசயங்கள் யாவையுங் காண் பித்துப் பின்னர், ஆதமவர்களை சிபுரீல் சுவர்க்கத்திற் கொண்டு போய்விட்டார்கள். அப்போது அல்லாஹுத்தஆலா, ஆதமவர்களுக்குச் சுவர்க்கத்தி லுண்டாயிருக்கிற கோதுமைக்கனி தவிர மற்றக் கனிவர்க்கங்க ளெல்லாந் தின்றுக் கொண்டிருக்க உத்திரவு செய்தான் அப்படியே பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தின்று கொண்டு சந்தோஷமாக யிருந்தார்கள். ஆனால் இவர்கட்குப் பக்கத்தி லிருக்க ஓர் துணை வேண்டியதற்காக அல்லாஹுத்தஆலா இவர்கள் நித்திரை செய்யும் போது, அவர்களுடைய இடது பக்கத்து விலாவில் நின்றும் பீபி ஹவ்வாவை யுண்டாக்கினான்.

பின்னர், பாவா ஆதமவர்கள் நித்திரை தெளிந்து கண் விழித்தெழுந்து பார்க்கும்போது நமது சிம்மாசனத்தி னருகே இட்ட நகையுடனே பீபிஹவ்வா அவர்க ளுட்கார்ந்திருக்கக் கண்டு, அவர்களை நீர் யாரென்று கேட்டார்கள். அதற்கு ஹவ்வா நானுங்கள் பெண்சாதி யென்று சொன்னார்கள். அதுகேட்டு, பாவா ஆதம் அலைகிஸ்ஸலா மவர்கள், மிகுந்த சந்தோஷமாய் ஹவ்வாவைத் தீண்டக் கையை நீட்டினார்கள். அப்போது அங்கொரு மலக்கு நின்று, ஓய் ஆதமே பத்திரம், கைதீண்டாதேயு மென்று சொன்னார் அதற்கு, பாவா ஆதம் அவர்கள், அம்மலக்கைப்பார்த்து, இப்பெண்ணை அல்லாஹுத்தஆலா எனக்காக உண்டாக்கி யி..க்க நீரேன் கைதீண்டாதே யென்று விலக்குகிறீரென்றதற்கு, அம்மலக்கு பாவா ஆதத்தைப் பார்த்து, இப்பெண்ணிற்கு மகரைக் கொடுத்து விட்டுக் கைதீண்டுமென்று சொன்னார். அதுகேட்டு, பாவா ஆதமவர்கள் நானென்னவித மகர் கொடுப்பேனென்று சலித்திருக்கையில், அல்லாஹுத்தஆலாவினுடைய உத்தாரம் ஆய் ஆதமே நீர் முஹம்மது நபிபேரில் 20-சலவாத்துச் சொல்லி மகாபக்ஷி செய்யுமென்று வந்தது. அதுபோலே, பாவா ஆதம் அவர்கள் சலவாத் தோதினார்கள். அதை ஹவ்வாக் கபூல் செய்துகொண் டிருவரும் சொர்க்கத்திற் கூடியிருந்து வாழ்ந்தார்கள்.

இவ்விதம் சுவர்க்கத்தில் பாவா ஆதமும், ஹவ்வாவும் சந்தோஷமாகக் கூடியிருப்பதை, இபுலீசு கண்டு மனம் பொருக்காமல் அவ்விருவரையும் கெடுக்க நாடிச் சுவர்க்க வாசற்படியில் வருஷ மூந்நூறாகக் காத்திருந்தான். அந்த மூந்நூறு வருஷத்தின் பின்னர் சுவர்க்கத்திலிருந்து ஒரு மயில் வெளியில்வந்தது. அந்த மயிலை இபுலீசு பார்த்து, ஆய் மயில்களுக் கரசியே! நீ என்னைச் சுவர்க்கத்திற் கொண்டுபோய் விட்டால், அதற்காக நானுனக்கொரு மந்திரம் கற்றுத் தருகிறேன், அதனாலே நீ மிகுந்த சுகத்தை யடைவா யென்று சொன்னான். அது கேட்டு மயில் இபுலீசைப் பார்த்து நீர் சொன்ன காரியம் என்னாலாகாது. சுவர்க்கத்திலொரு சர்ப்பமிருக்கிறது, அதனாலே முடியும். ஆதலால், நான் அந்தச் சர்ப்பத்தை யழைத்து

வருகிறேன். அதனோடு முஹம்மது மனபாகத்தைச் சொல்லுமென்று மயிலுள்ளே புகுந்து, சர்ப்பத்திற்கு இது காரியங்களைச் சொல்லித் தன்னுடனே கூட்டி வந்து இபுலீசினிடத்தில் விட்டது.

அப்பாம்பை இபுலீசு பார்த்து ஓய் சுவர்க்கலோகத்து நாகராஜனே யென்று மிகவும் புகழ்ந்து பேசி, நீ யெனக்கோருபகாரஞ் செய்வாயாக, அஃதியாதெனில், என்னைச் சுவர்க்கத்திற் கொண்டு போய் விடுவாயென்றான். அது கேட்டு, நாகம் இபுலீசைப் பார்த்து நானும்மை எப்படி யங்கே கொண்டுபோய் விடுவேன். மலக்குகள் காவலிருக்கிறார்களே யென்று சொன்னது அதற்கிபுலீசு நாகத்தைப்பார்த்துச் சுவர்க்கத்தினுள்ளே நான் வேறு நீ வேறாகப்போனால் மாத்திரம் மலக்குகள் காண்பார்கள். அப்படியல்லாமல் உன் வாயைத்திற நானுள்ளே புகுந்துகொள்கிறே னென்று சொன்னான். அச்சொல்லிற்கு நாகம் இசைந்து வாயைத்திறந்தபோது, இபுலீசு நாகவாயிற்குட் புகுந்தான் அந்நாகம் சுவர்க்கத்துள் நுழைந்து இபுலீசை யங்கோரிடத்திற் கொண்டு போய் விட்டது.

அங்கே இபுலீசு ஓர் மூலையிலுட்கார்ந்து புலம்பிப் புலம்பி யழுதுகொண்டிருந்தான், இவ்விதம் இபுலீசழுகிறதை யாதமவர்களும் ஹவ்வா அவர்களுங்கண்டு, இபுலீசைமுடிகி நீயேனிவ்விதம் புலம்பிப்புலம்பி யழுகிறா யென்று கேட்டார்கள். அதற்கு, இபுலீசு அவ்விருவரையும் பார்த்து நானுங்கட்காகத்தானே அழுகிறே னென்றான். அதற்கிருவரும் இபுலீசைப்பார்த்து நீ யெங்கட்காக அழவேண்டியகாரணமே னென்று கேட்டார்கள். அதற்கிபுலீசு அவ்விருவரையும் பார்த்து, நீங்களிந்தச் சுகமான சுவர்க்கத்தை விட்டும் இறந்துபோவீர்களே யதனாலேதான் நானழுகிறேனென்று சொல்லிவிட்டு மறைந்து போயினான். இவ்விதம், இபுலீசு சொன்னமாறாட்டச்சொல்லைக் கேட்ட ஆதம் அவர்களும், ஹவ்வா அவர்களுமனங் கலங்கியிருந்தார்கள். இப்படி இருவரும் இருக்கும்போது, இபுலீசானவன் பாவா ஆதமவர்கள் முன்னிலே வந்து அந்தக் கோதுமைக் கனியின் பிரயோசனத்தைச் சொல்லி அல்லாவின் பேரிலே பொய் யாணையிட்டு ஆய் ஆதமே நீங்களந்தக் கோதுமைக்கனியைத் தின்றால் மலக்குகளைப்போலே எந்நாளு மவுத்தில்லாதிருப்பீர்களென்று 70-விடுத்தம் வந்து வந்து சொல்லிக் களைத்துக் கோதுமைக்கனியை ஆதமும், ஹவ்வாவுந் தின்னும்படியாகச் செய்து வைத்தான்.

அந்தக் கோதுமைப் பழம் ஆதம் அவர்களுடைய வயிற்றிற் போனவுடனே அவர்கள் சரீரத்தில் அணிந்திருந்த உடைகள் தானே கழன்று கீழே விழுந்தது. அவர்கள் தலையிலணிந்திருந்த தாஜென்னுந் தொப்பியுந்தானே பறந்து போய் விட்டது. அவர்களினிடையிலிருந்த பட்காவையும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் அவிழ்த்து விட்டார்கள். பின்னர் பீபிஹவ்வா அவர்களுடைய உடைகளு மிவ்விதங் கழன்று விட்டன. இவ்விதத்தில் ஆதமும், ஹவ்வாவும் நிர்

வாணியாகி யோடி யோடி மரத்தண்டை யொளிக்கப் போனார்கள். அப்படிப் போயும் சுவர்க்கத்திலுள்ள மரங்களொன்று மிவர்கட்கிடங்கொடாமல் விலகி விலகிப்போயின அத்தருணத்தில் பாவா ஆதம் அவர்களுடைய தலையுரோமத்தை யொரு மரத்தின் கொம்பு வளைந்து சுழற்றிப் பிடித்துக்கொண்டது அப்போது பாவா ஆதமவர்கள், அல்லாஹுத்தஆலாவை நாடி நானிந்த வேளை நிர்வாணியாயிருக்க இந்த மரமுமென்னைப் பிடித்துக் கொண்டதே. இஃதென்ன ஆச்சரிமென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத்தஆலா ஆதமவர்களைப் பார்த்து, ஒய் ஆதமே நானும்மைத் தின்னவேண்டாமென்றேவின வஸ்துவான கோதுமைக்கனியை நீர் தின்றபடியினலே யுமக்கிந்த வருத்தமெல்லாம் வந்து நேரிட்டதென்று சொன்னான். அதுகேட்டு, பாவா ஆதமவர்கள் மிகுந்த வெட்கமாய் மரங்களிடத்திலெல்லாம் போய்க்கெஞ்சிக்கெஞ்சி யுடுத்திக்கொள்ள இலை கேட்டார்கள். அதற்கு எந்த மரங்களும் இலைகொடாமற் சும்மாயிருந்தன.

அப்போது சாம்பிராணி மரமொன்று மாத்திரம் இலைகொடுத்தது. அதற்கு அல்லாஹுத்தஆலா அந்தச் சாம்பிராணி மரத்தைப் பார்த்து ஆய் சாம்பிராணி மரமே நீ ஆதத்திற்கு இலை கொடுத்ததினலே யுன்னுடைய சாம்பிராணியை யாவரு மெச்சிக் கொள்ளும்படியான வாசனை கொடுத்தேன், என்றாலும் நீ என்னுத்திரவில்லாமல் ஆதமுக்கு இலை கொடுத்தபடியால், உன்னை முன்வந்த யாவரும் நெருப்பிற் போடும்படியாகச் செய்வே னென்று சொன்னான்.

பின்னர் அல்லாஹுத்தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களோடும், ஆதமும் ஹவ்வாவும் நான் தின்னவேண்டாமென்று விலகியகோதுமைக் கனியைத் தின்றதினலே, இனி யவர்களிருக்கச் சுவர்க்கத்தி லிடமில்லை ஆதலால் அவர்களைப் பூமியிற் கொண்டு போய்விடுமென் றுத்திரவு செய்தான். பின்னர் சில மலக்குகளோடும் அல்லாஹுத்தஆலா ஆதத்துடைய தலைமயிரை மரம் பிடித்துக் கொண்டிருக்கிறதே யதை விடுத்து விடுங்களென் றுத்திரவு செய்தான்.

இந்தச் செய்தி பாவா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குத் தெரிந்து அல்லாஹுத்தஆலாவோடும் என்னாண்டவனே நீ என்னை யுன் குதறத்தான கையினலே படைத்து மலக்குகளைக் கொண்டும் தகியத் தென்னும் சுஜூது செய்வித்தாயே அப்படியிருக்க இப்போதென்னைச் சுவர்க்கத்தை விட்டும் வெளிப்படுத்துகிறாயே அப்படியென்னை நீ வெளிப் படுத்தாதே யென்று மிகவும் புகழ்ந்து சொன்னார்கள். அது கேட்டு அல்லாஹுத்தஆலா மலக்குகளோடும் சீக்கிரத்தில் ஆதத்தைச் சுவர்க்கத்தை விட்டும் வெளிப்படுத்துங்களென்று கண்டிப்பான உத்திரவு செய்தான். உடனே மலக்குகள் ஆதம்

அலைகிஸ்ஸலா மவர்களுடைய கையைப் பிடித்துச் சுவர்க்கத்தைவிட்டும் வெளியே வாருமென்றிழுத்தார்கள். அதற்கு பாவா ஆதமவர்கள் நான் வரமாட்டேனென்று சொன்னார்கள், அதை மலக்குகள் கேளாமல் ஆதமவர்களுடைய கையைப்பிடித்து ஆதமே வெளியிலே போகலாம் வாருமென் றிழுத்தார்கள்.

அப்போது பாவா ஆதமவர்கள் அங்குள்ள மரங்களைக் கட்டிக் கட்டிப் பிடித்தார்கள். மலக்குகள் அவர்களைக் தாமதிக்க விடாம லிழுத்தார்கள். அப்போது ஆதமலைகிஸ்ஸலா மவர்கள் அல்லாஹுத்த ஆலாவோடும், என்னுண்டவனே! நான்செய்த குற்றத்தைப் பொறுத் துக்கொள்ளென்று துஆக் கேட்டார்கள். அந்தத் துஆக் கபூலாக வில்லை, மறுபடியு மலக்குகள் பாவா ஆதமவர்களை இழுத்தார்கள். அப்போது ஆதமலைகிஸ்ஸலா மவர்கள் அல்லாஹுத்தஆலாவோடும் என் நாயனே! என் வயிற்றிற் பிறக்கப்படும் நபிமார்களுக்காக என் பிழையைப் பொறுத்திந்தச் சுவர்க்கத்தைவிட்டு மென்னை வெளிப் படுத்தாதே யென்று துஆக் கேட்டார்கள்.

அப்போதும் அந்தத் துஆக் கபூலாகவில்லை. பின்னரும் பாவா ஆதமவர்கள் அல்லாஹுத்தஆலாவோடும் என் நாயனே! நீ எனக்கு முற்படத் தெரிவித்தாயே அந்த முஹம்மது நபிக்காக என் பிழையைப் பொறுத்துக்கொள்ளென்று துஆக் கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத்தஆலா மலக்குகளோடும் ஆதம் என் ஹபீபாகிய முஹம்மதை நினைத்தபடியினாலே, அவரை மெதுப்படுத்துங்களென் றுத்திரவு செய்தான். அஃதறிந்து, பாவா ஆதமவர்கள் ஜிபுரீலைப் பார்த்து, யாஜிபுரீலே நீ ரெங்கேபோக என்னை யழைக்கிறீர் சொல்லுமென்று கேட்டதற்குச் ஜிபுரீலவர்கள், பாவா ஆதமர்களைப் பார்த்து, ஓய் ஆதமே உம்மை அல்லாஹுத்தஆலா எங்கே படைத்தானோ அங்கே கொண்டுபோய் விடுகிறதற் கழைக்கிறேனென்று சொன்னார்கள். அதற்கு பாவா ஆதமவர்கள் ஜிபுரீலே நீ ரென்னை அங்கே கொண்டு போய்விட்டால் சுருக்கில் இங்கே யழைத்துக்கொண்டு வருவீரா, அல்லது கொஞ்சநாட் சென்று வருவீராவென்று கேட்டதற்குச் சிபுரீலவர்கள் பாவா ஆதமவர்களோடும் அது காரியமெனக்குத் தெரியாது. அல்லாஹுத்தஆலாவுக்குத் தெரியுமென்று சொன்னார்.

அப்போது பாவா ஆதமவர்கள் ஜீபுரீலவர்களைப் பார்த்துச் சிபுரீலே நீரென்னைக் கொண்டுபோய் விடுமிடத்தில் என்னோடுங்கூட இருப்பவர் யாரென்று கேட்டார்கள். அதற்குச் சிபுரீலவர்கள், பாவா ஆதமவர்களைப் பார்த்து, உம்மோடுங்கூட இருக்கிறவன் உம்மைக் கோதுமைக்கனியைத் தின்னச்சொன்னனே அவன்றானிருப்பானென்று சொன்னார்கள். அது கேட்டு பாவா ஆதமவர்கள் ஆ ஆ நான் பகைவன்கூட இருக்கலாயிற்றேயென்று மிகுந்த துயரப்பட்டார்கள். அப்போது அல்லாஹுத்தஆலா ஜிபுரீலோடும் ஆய் ஜிபு

ரீலே நீரின்னமேன் தாமதமாக நிற்கிறீர். சீக்கிரம் ஆதத்தைச் சுவர்க்கத்தைவிட்டும் வெளியாக்குமென் றுத்திரவு செய்தான். அது கேட்டுச் சிபுரீலவர்கள் பாவா ஆதமவர்களை யெடுத்துக்கொண்டு போய் சறனதீவிலே விட்டார்கள். அதுபோலே ஹவ்வாவை யெடுத்துக்கொண்டுபோய்ச் சுத்தாவில் விட்டார்கள், இனி இபுலீசை அயில் சீமையிலும், அந்தப் பாம்பை அசுபகான் சீமையிலும் அந்த மயிலை ஹபசிச் சீமையிலும் விழும்படியா யெடுத்து வீசியெறிந்துவிட்டார்.

இவ்விதம் ஆதமலைகிஸ்ஸலா மவர்களைச் சிபுரீல் அலைகிஸ்ஸலா மவர்கள் சறந்தீவிற் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போன பின்னர் பாவா ஆதமவர்கள் தாங்கள் முன்னர் சுவர்க்கத்தி லனுபவித்துக் கொண்டிருந்த இன்பத்தையும் இபுலீசுடைய கலப்பிலகப்பட்டுத் தாங்க ளல்லாஹுத்தஆலாவுடைய ஏவலைத் தட்டிக் கோதுமைக்கனியைத் தின்றதினால் வந்த குற்றத்தையும் நினைத்துநினைத் திரண்டு கண்களிலு மிருந்து வெள்ளப் பெருக்கைப் போலக் கண்ணீர் பெருகியோட இரவும் பகலும் அழுதழுது ஆண்டவனை நினைத்து என்னுடைய ஆண்டவனே நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருளென்று கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டும் அல்லாஹுத்தஆலா அக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளவில்லை யாதலால் ஆதமலைகிஸ்ஸலா மவர்களுக்குப் பொங்குசார மிகவுமுண்டாகி நாமிப்படி யெல்லாம் அல்லாஹுத்தஆலாவைக் கெஞ்சிக் கேட்டும் நமது பிழையைப் பொறுக்கவில்லை யல்லவா வென்று நிரம்பவும் பெரிதான அழுகையாக அழுது கொண் டிருந்தார்கள்.

இவ்விதம் பாவா ஆதமவர்கள் முந்நூறு வருஷ காலமாக அழுது கொண் டிருக்கையில், இவர்களுக்கு அல்லாஹுத்தஆலா முன்னர் தெரிவித்தானே அந்த முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய ஒளியின் பெருமையுந் தகுதியும் இவர்கள் மனதில் வந்து அந்த வொளிவுக்கு, அல்லாஹுத்தஆலா மிகுந்த பெருமையைக் கொடுத்திருக்கிறானே அதின் பொருட்டாவது நமது குற்றத்தை அல்லாஹுத்தஆலா பொறுத்தருள் செய்ய மாட்டானோ வென்ற எண்ணத்தோடும் ஆண்டவனை நோக்கி என்னாண்டவனே யுன்னுடைய ஹபீபாகிய முஹம்மது சல்லல்லாஹு அலைகிவசல்ல மவர்களுக்குக் காகவாவது நான் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொண்டென்னைக் காப்பாற்றுவாயாக வென்று துஆக் கேட்டார்கள்.

இவ்விதம் பாவா ஆதமவர்கள் முஹம்மது சல்லல்லாஹு அலைகிவசல்ல மவர்களைக் கொண்டுந் துஆக் கேட்டவுடனே அல்லாஹுத்தஆலா அவர்களுக்குத் தெரிவித்தான். கேளும் ஆதமே நீரென்னுடைய ஹபீபாகிய முஹம்மது நபியைக் கொண்டும் என்னிடத்திற் பிழைபொறுக்கக் கேட்டபடியினால் அந்த முஹம்மதின்

வரிசையாக உமது குற்றத்தை நான் பொறுத்துக் கொண்டே னென்று திருவுளமாகி யுடனே பாவா ஆதம் அலைகிஸ்ஸலா மவர்களையும் ஹவ்வா அலைஹிஸ்ஸலா மவர்களையும் ஜுத்தா வென்னும் நகரத்தி லொன்று சேர்ந்திருக்கும்படியாகச் சேர்த்து விட்டான்.

இவ்விதம் ஜுத்தா நகரத்தில் பாவா ஆதமும் ஹவ்வாவு மொன்று சேர்ந்து சுகமாக வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாளையில் இருபது சூலில் நாற்பது பிள்ளைகளைப் பெற்றூர்கள். அப்பிள்ளைக ளாவன சீதுநபி அவருடைய பிள்ளை யானுசு, அவருடைய பிள்ளை ஹயினன், அவருடைய பிள்ளை மகுலீல், அவருடையபிள்ளை எறுது, அவருடைய பிள்ளை உகுதூகு, அவருடைய பிள்ளை இதுரீசு நபி, அவருடைய பிள்ளை மத்தூசல்கு, அவருடைய பிள்ளை லாமக்கு, அவருடைய பிள்ளை நூகுநபி, அவருடைய பிள்ளை ஷாம், அவருடைய பிள்ளை அறுபகுசு, அவருடைய பிள்ளை சாலகு, அவருடைய பிள்ளை ஐயறு, அவருடைய பிள்ளை பாலகு, அவருடைய பிள்ளை ருகுவா, அவருடைய பிள்ளை சாறூகு, அவருடைய பிள்ளை நாகூறு, அவருடைய பிள்ளை ஆஸறு, அவருடைய பிள்ளை இபுறுகிம் நபி, அவருடைய பிள்ளை இசுமாயீல் நபி, அவருடைய பிள்ளை தாபித்து, அவருடைய பிள்ளை எகஹபு, அவருடைய பிள்ளை அஃறபு, அவருடைய பிள்ளை தயிறகு, அவருடைய பிள்ளை நாகூறு, அவருடைய பிள்ளை மிக்குவம், அவருடைய பிள்ளை உதவி, அவருடைய பிள்ளை நிசார், அவருடைய பிள்ளை திலறுநபி, அவருடைய பிள்ளை இல்யாசு நபி, அவருடைய பிள்ளை முதரிக்கு, அவருடைய பிள்ளை குசைமா, அவருடைய பிள்ளை ஹறுனை, அவருடைய பிள்ளை நாலறு, அவருடைய பிள்ளை லாமக்கு, அவருடைய பிள்ளை பிஃறு, அவருடைய பிள்ளை காலிபு, அவருடைய பிள்ளை லுவை, அவருடைய பிள்ளை கஞுபு, அவருடைய பிள்ளை முற்றத்து, அவருடைய பிள்ளை கிலாபு, அவருடைய பிள்ளை குசை, அவருடைய பிள்ளை அப்துல் முனபு, அவருடைய பிள்ளை ஹாஸிம், அவருடைய பிள்ளை அப்துல்முத்தலிபு, அவருடைய பிள்ளை அப்துல்லா.

இவ்விதம் நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவ சல்லமவர்களுடைய வொளி மேற் சொல்லியவர்களி லொவ்வொருவரிடமாக இறங்கினதினுல் அவர்கட்கெல்லாம் நபிப்பட்டமும் இராஜரீகமும் வாழ்க்கையு முண்டாகும்படியாயிலங்கி யிருந்து பின்னர் முடிவில் அப்துல்லா அவர்களுடைய நெற்றியிலே முத்தொளியாக இலங்கிக் கொண்டிருந்தது. அதனுல் அநேகம் பெண்கள் அப்துல்லா அவர்களுடைய அழகைக்கண்டு இவ்வப்துல்லாவை நான் விவாகஞ் செய்வேன். நீ விவாகஞ் செய்வா யென்று சண்டை செய்து கொண்டிருக்கச்சே அல்லாஹுத்தஆலாவுடைய கட்டளைப்படி றஜபுமாத முதல் திகதி வெள்ளிக்கிழமை இரவு அப்துல்லா அவர்களுடைய

நெற்றியிலிருந்திலங்கிய முத்தொளி அவர்களுடைய திருத்தேவியா ரான அமீனாவர்களுடைய வயிற்றில் தரிபட்டது. அப்படித் தரி பட்டபோது அல்லாஹுத்தஆலா, மலக்குகளோடும், என் ஹபீபா கிய முஹம்மது நபியுடைய ஒளியை, அமீனாவுடைய வயிற்றிலே தரி பாடாக்கினேன் ஆதலால் நீங்கள் எட்டு சுவர்க்கத்தையுந் திறந்தலங் கரித்து வையுங்கள் நரகங்களை மூடி விடுங்களென்று உத்திரவு செய்தான்.

இன்னும் நபிநாயகத்துடைய வொளி ஆமிரனவர்கள் வயிற் றில் தரித்த அன்றிரவு புத்துஹான்க ளெல்லாம் மடிந்து மோதித் தலைகீழாக விழுந்து விட்டன. இபுலீசுடைய சிம்மாசனமும், இரா ஜாக்களுடைய சிம்மாசனங்களும் புரண்டுருண்டு போயின இன்னும் ஷைத்தான் கூட்டங்கள் வழமையாக வானத்திற்குப் போய் வருவ துண்டு. அவ்வழமையுங் கெட்டு அவைகள் வானத்திற்குப் போகக் கூடாமையாகி விட்டன. இச்செய்திகளை எழுவானிலுள்ள பறவை யினங்கள் படுவானிலுள்ள பறவையினங்களுக்குத் தெரிவித்தன. குறைஷிகளின் ஆடு, மாடு, குதிரை, யொட்டகமாகிய இவைக ளெல்லா மிச்சேதிகளை யாவருக்கும் நன்றாகத் தெரியும்படிக்கு வாய் களைத் திறந்து விரித்து உயர்ந்த சத்தத்தோடும் தெரிவித்தன.

இன்னும் நபிநாயகம் ஆமினாவர்களுடைய வயிற்றில் தரிக்குங் காலத்தில் மக்க முதலிய எவ்விடங்களும் பெரிய பஞ்சமாக இருந் தது. அப்பஞ்சமும் அப்போது தெளிந்து தான்ய தவசங்களு மலிந்து பெரிய செழிப்புண்டாயின, கரிகித் தீய்ந்து போயிருந்த மரங்கள், செடிகள், செழிப்புண்டாயின. மேலும் அன்றிரவு, ஆமி னாவர்களுடைய கனவிலே ஒருபெரியவர் வந்து. அம்மா ஆமினாவே யுன்னுடைய வயிற்றிற் இன்றையதினம் பிள்ளை யொன்று தரிபட் டிருக்கின்றது. அப்பிள்ளையாகிறது நபிமுஹம்மது சல்லல்லாஹு அலைகிவசல்லமா யிருக்குமென்று சொன்னார்.

அஃதன்றி, நபிநாயகம் வயிற்றிற் றரித்த அன்று முதல் பிறக் கும் நாள்மட்டும், ஆமினாவர்களுடைய காதுக்கு நன்றாகக் கேட் கும்படியாக ஆமினாவே, யும்முடைய வயிற்றிற் றரித்திருக்கிற பிள் ளையானவர் முஹம்மது நபியாயிருக்கும். அவர் மிகுந்த வரிசையும் பெருமையு முடையவரென்று எந்த நேரமும் வானத்தி விருந்து சத்தம் வரும்படியாகக் கேட்பார்கள். மேலும் ஒன்பது மாதமட்டி லும் பூலோகத்திலே மற்றக் கெர்ப்பணியான பெண்டீர்களுக் குண் டாகும் அடையாளங்கள் யாதாமொன்று மில்லை.

இவ்விதத்தில் ஆமினாவர்கள் கெர்ப்பணியாகிய ஆறுமாதத் தில், அப்துல்லா அவர்கள் மதீனமா நகரத்திற்கு வியாபாரத்திற் காகப் போய் வருகிற வழியில் அபுவாவென்னுந் தலத்தில் மவுத்

தாகி அடங்கப்பட்டார்கள் அஃதறிந்து மலக்குகள் அல்லாஹு தஆலாவோடும் ஆய் அரிய பெரிய நாயகனே ஆமினுருடைய வயிற்றில் அவதரித்தபிள்ளை யெத்தமாகி போயிற்றேயென்றுசொல்லி மிகவும் விசாரப்பட்டார்கள். அதற்கு அல்லாஹுத்தஆலா அம் மலக்குகளோடும் என் மலக்குகளே அந்தப் பிள்ளையினுலே பூலோகத்தில் மிகுந்த அற்புதா அற்புதங்களுண்டாகும். ஆதலால் அதைக் குறித்து நீங்கள் துயரப்படவேண்டாம். அப்பிள்ளையை வளர்க்கவும் வாழ்விக்கவும் நானிருக்கிறேன். இன்னும் அந்தப்பிள்ளை பூமியிற் பிறக்கிறதே மிகுந்த அருமை யென்று நீங்களெண்ணுங்களென்று திருவுளமானுன்.

பின்னர் ஆருவது மாதத்தில் ஆமினுரவர்கள் கனவில் ஒரு பெரியவர் வந்து ஆமினுவே யும்முடைய வயற்றிற் றறித்திருக்கிற பிள்ளை இந்தப் பூலோகத்திற்கெல்லாம் பாத்துஷா வானவராயிருக்கும் ஆதலால் அவர் பிறந்தால் அவருக்கு முஹம்மதென்று பெயரிடுமென்று சொல்லிப் போனுர். இவ்விதம் நடந்து வருகையில் ஒன்பதாமாதத்தில் ஆமினு ரவர்களுக்குக் கெர்ப்பவேதனை யுண்டாயினது அச்சமயத்தில் அவர்கள் காதுக்கு நன்ருய்க் கேட்க்கும்படியோர் அசரீரியான பெரிய சத்தமுண்டாயிற்று. அந்தச் சத்தத்தை ஆமினுரவர்களென்னமோ வென்று இருக்கையில் ஒரு வெள்ளைப் பறவை வந்து ஆமினுரவர்களுடைய நெஞ்சிலே சிறகினுலே தடவிவிட்டது அதனுல் அவர்களுடைய கெர்ப்ப வேதனை நீங்கினது. அச்சமயத்தில் அப்துல் முத்தலிபு ககஃபத்துல்லாவுக்குப் போயிருந்தார் வீட்டில் வேறே யாருமில்லாத தருணமாயிருந்த படியால் ஆமினுரவர்கள் நமக்கு இவ்விதமான கெர்ப்பணியாகிய அவஸ்தை நேரத்திலாரும் உதவி துணையில்லையே யென்று வியாகூலப்பட்டவர்களாகத் தனித்திருந்தார்கள், அவ்வேளையில் தங்களுக்குத் தண்ணீர்த்தாகமும் பெரியதாயிருந்தது அத்தருணத்தில் ஒருவர் வெள்ளைக்கிண்ணத்திலே தண்ணீர் கொண்டுவந்து ஆமினுர்வர்கள் கையிற் கொடுத்தார். அதை அவர் வாங்கிக் குடித்தவுடனே தண்ணீர் தாகம் நீங்கினது.

பின்னர் ஆமினுரவர்கள் உடலில் நின்று மொருவொளிவு வெளியானது, அவ்வொளியிலியே அப்துல் முத்தலிபு கிளையுள்ள பெண்களைப்போலே யுயர்ந்த பெண்களிற் பலர்கள் உண்டாகி பீபி ஆமினுர் அவர்களைச் சூழ்ந்திருந்தார்கள். அதுகண்டு ஆமினுரவர்கள் அதிசயமாகிப் பெண்களிற் சிலரைப்பார்த்து உங்களுக்கு என்னுடைய பிரவேதனை யெப்படித் தெரிந்ததென்று கேட்டார்கள். அதற்கு ஒரு பெண்ணுனவர்கள் நான் இம்ருனுடைய மகன் மறியமாக இருக்குமென்றும், இன்னெரு பெண்ணுனவர்கள் நான் பிரவூனுடைய பெண்சாதி ஆசியாவாக இருக்குமென்றும், மற்றப் பெண்களெல்லாஞ் சுவர்க்கலோகத்து கூறுல்ஹீன்களென்றும் சொன்னுர்கள்.

அதன் பின்னர் ஆமினாவர்களுடைய காதிற்குப் பூமியிலே கற்கள் முதலான வஸ்துகள் விழுந்தாலெவ்விதம் கடகடவென்று சத்தங்கேட்கிறதோ அவ்விதம் சத்தம் ஓய்வில்லாமற் கேட்டுக்கொண்டேயிருந்தது. இன்னுஞ் சில மலக்குகள் வெள்ளைப்பட்டுப் புடவையினாலே ஆகாசத்திற்கும் பூமிக்கும் இடையில் விரிப்புவித்தார்கள் பின்னர் அம்மலக்குகளிலொருவர் பிள்ளை பிறந்தவுடனே அப்பிள்ளையை மனிதர்களொருவர் கண்ணுக்குந் தெரியாமற் கையிலேந்திக் கொள்ளுமென் றின்னொரு மலக்கு சொன்னார். அப்போது சில பறவைக்கூட்டங்கள் மூக்கு மரகதத்தினாலும் சிறகுகள் செவந்த மாணிக்கத்தினாலு முள்ளவைகளாக வந்தன.

அப்பறவைகள் பீபி ஆமினாவர்களுடைய மடியை மறைத்துக் கொண்டன. அப்போது ஆமினாவர்களுடைய கண்ணிற்கு மஷரிக்கிலிருந்து மக்ரிபுவரைக்கும் நான்கு மூலைகளும் அந்நான்கு மூலைகளிலுள்ளவைகளும் நன்றாகத் தெரிந்தது. இன்னும் ஆமினாவர்களுடைய பார்வையில் மூன்று கொடிகள் தெரிந்தது அக்கொடிகளோ பச்சை நிறமுள்ள கொடிகளாக இருந்தது, அதில் ஒரு கொடி எழுவானிலும், ஒருகொடி படுவானிலும், ஒரு கொடி கஃபத்துல்லாவின் பேரிலும் பிடிக்கப்பட்டதாயிருக்கும்படி கண்டார்கள்.

இவ்விதமான சமையத்திலே பூரணசந்திரனைப் போலே முகவஜ்சரத்தையுடைய கூறுல்ஹீன் பெண்களெல்லாம் நின்று வாழ்த்த மூன்று லோகத்திற்கு மாண்டகையாகிய நபிமுஹம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் வெயில் வெப்பத்திற் கிடந்து வேதனை படுபவர்கட்கு ஓர் குளிந்த நிழலும் விரிந்த பரப்பையுமுடைய ஆலாவிருக்ஷம் போலவும். மழையில்லாமல் நின்று வாடும் பயிர்களுக்கு நன்றாகக் குளிரப்பெய்ய மழை போலவும் கடலில் விழுந்தவர் கரையேற உதவியல்லாது கலங்குஞ் சமையத்தில் அவர்கட்குகப்பலொன்று கிடைத்தது போலவும், இருட்டை நீக்கும் சூரியனைப்போலவும், குபிரை நீக்கும் குருவாகவும் பிறந்தார்கள்.

### தறாது.

அல்லாகும்ம சல்லி அலா செய்யிதினா வநபினா முஹம்மதின் வஅலா ஆலி செய்யிதினா முஹம்மதின் வபாரிக்கு வசல்லம்.

இவ்விதம் பூரண சந்திரனுக்கு மதிகமான அழகோடும் பிறந்த பிள்ளையாகிய ஹபீபு றப்பில் ஆலமீன், செய்யிதுல் முறுசலீன் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைத் தாயாகிய பீபி ஆமினாவர்கள் பார்த்தார் அப்போது நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள், இரண்டு கைகளின் கலிமா விரலென்னுஞ் சுட்டுவிரலை வானத்தினேராக உயர்த்தினதாயும், தலையைக் குனிந்து சுஜூதிட்டதாயு மிருக்கக் கண்டார்கள்.

மறுபடியும் ஆமினாவர்கள் பிள்ளையாகிய நபிநாயகத்தை யுற்றுப் பார்க்கும்போது, அவர்கள் கண்ணிற்குப் பிள்ளை தெரியாமலிருக்க ஒரு வெள்ளை மேகத்துண்டு வந்து மறைத்துக் கொண்டது. அப்போது, அந்த மேகத்துண்டினுள்ளிருந்து ஓர் சத்தம் பிறந்தது. அஃதாவதெனில், என்னுடைய அழகிய ஹபீபான முஹம்மதை மனுடர்களில் யாரேனு முதலிற் கைதீண்டக்கூடாது. ஆதலால் அப்பிள்ளையை யெடுத்துக் கொண்டு போய், அறுஷு குறுசு, சொர்க்கம், கடல், மலை, பாதாளம், ஏழுவானம், ஏழுபூமி இவைகள் முதலான மற்றிடங்களடங்களிலும், அவ்விடங்களி லுண்டாயிருக்கும் ஜின்கள், மலக்குகள், பறவையினங்கள், மிருகஜாதியினங்கள், ஊர்வனங்கள் முதலிய சகல படைப்பினங்கட்கும் காண்பிவித்துக் கலிமாவையோதச்சொல்லிப் பின்னர், பூலோகத்திலுள்ள ஷிறுக்குகள் குபிர்களெல்லாம் நீக்கி அல்லாஹுத்தஆலாவுடைய ஒருமைப்பாட்டின் வழியைக் காண்பிவிக்கப் பட்டவரென்று சொல்லிவிட் டெடுத்துக் கொண்டு வாருமென்று அசரீரிச்சத்த முழங்கிற்று.

இவ்விதம் சத்தமுண்டானதின் பின்னர், அந்த வெள்ளை மேகம் விலகிப்போயின. அப்போது, நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய முதுகுக்குங்கீழே பச்சைப்பட்டினாலே மெத்தை யொன்று விரித்து, அதின்பேரில் சுவர்க்கத்திலுள்ள வெள்ளைபஞ்சுத்துச் சுருட்டிவைக்கப் பட்டிருந்தது. இன்னும் பிள்ளையாகிய நபிநாயகத்தின் கையிலே, வெள்ளை முத்தினால் மூன்று திறவுகோலிருந்தது அத்திறவுகோலை யொருவர் பார்த்து, நபி முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய கையிலிருக்குந் திறவுகோல் மூன்றிலொன்று வெற்றி பெறுகின்றது ஒன்று காவலை யுடையது. ஒன்று நுபூபத்தை யுடையது. ஆகிய, இம்மூன்று திறவுகோலையும் பிள்ளையாகிய இந்த முஹம்மது நபி பெற்றுக் கொண்டாரென்று சொன்னார்.

பின்னர் ஒருமேகத் துண்டு வந்தது. அதில்நின்றும், குதிரையுடைய கனைப்புப்போலே ஒரு சத்தமும் பறவைக ளிறகுகளை யுயர்த்தி விலாவிலடிக்கையில் வரும் சத்தம்போலே யொரு சத்தமும், மனுடருடைய பேச்சைப்போலே யொரு சத்தமு முண்டாயிற்று. அதினுடனே அம்மேகம் நபிநாயகத்தை மறைததுக்கொண்டது. அதின் பின்னர் அம்மேகத்திலிருந்து ஒரு சத்தம் இந்தப் பிள்ளையை யெடுத்துக் கொண்டுபோய் மனுடர்கள் மலக்குகள் ஜின்கள், பறவைகள், நாற்கால் மிருகங்கள், ஊர்வனங்கள் முதலிய மற்றும் யாவற்று வஸ்துகளுக்கு முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய பெயரைச் சொல்லிச் சகல வஸ்துகளுக்குந் தெரியப்படுத்துங்க ளென்று உண்டாயிற்று.

பின்னரும், அம்மேகத்திலிருந்து மொருசத்த முண்டாயிற்று. அஃதென்னெனில், இந்தப் பிள்ளையாகிய முஹம்மதுக்கு ஆதநபியுடைய குணமும், சீதுநபியுடைய அறிவும், நூகுநபியுடைய சாமர்த்தியமும், இசுமாயீல் நபியுடைய நாவும் இசுஹாக்கு நபியுடைய இராஜதனமும் சாலிகுநபியுடைய சொற்றிருத்தமும், லூத்து நபியுடைய தந்திரமும், யூசுபுநபியுடைய அழகும், மூசாநபியுடைய வருத்தமும், ஐயூபுநபியுடைய பொறுமையும், யூனூசுநபியுடைய வணக்கமும், யூஷகுநபியுடைய பீஸபீலும், தாவூது நபியுடைய வோசையும், தானியால் நபியுடைய மூகப்பத்தும், இல்யாசு நபியுடைய பெருமையும், ஹியாநபியுடைய துப்புரவும், ஈசாநபியுடைய தக்காவும் ஆகிய இம்முறைகளெல்லாங் கொடுங்கள் இன்னும், நபிமார்களுடைய குணங்களின் சமுத்திரத்தில் முழுகச் செய்திடுங்களென்றும் சொல்லிவிட்டோம் மேகம் விலகிப்போயினது.

அப்போது பீபி அமீனாவவர்கள் பிள்ளையாகிய முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைப் பார்த்தார்கள். அந்தப் பிள்ளையின் கையிலே ஓர் பட்டுடைச்சுருள் வைத்துக் கொண்டிருந்ததுடனே, அதிற் றண்ணீரு மொழுகிக் கொண்டிருந்தது. அது கண்டங்கே ஒருவர் ஆ, ஆ, இந்தப் பிள்ளையானவர் பூலோகத்தின் வஸ்துகளெல்லாவற்றையும், தன் கைவசமாகச் சுருட்டிப் பிடித்துக் கொண்டாரே யென்று சத்தமிட்டார். அப்போது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய சரீரத்தில் கஸ்தூரி வர்சனை கமழவும், முகமானது பதினான்காநாட் சந்திரனைப் போலே யிலங்கவும் பீபி ஆமினாவவர்கள் கண்டார்கள். அந்நேரத்தில் மூன்று பெயர் வந்தார்கள். அவர்களில், ஒருவர் கையில் வெள்ளியினாலே செம்பும், ஒருவர் கையில் மரகதத்தினால் விரிப்பும், ஒருவர் கையில் வெள்ளைப் பட்டுத்துணியுமிருந்தன. அம்மூவரும், பிள்ளையாகிய நபிநாயகத்தையெடுத்து அவர்களின் சரீரத்தை ஏழுதரங்கழுவித் துடைத்து இரண்டு தோளுக்கிடைபுடரியில் நுபூவத்தென்கிற மொகர் முத்திராங்கத்தைப், பதித்துப் பட்டுத்துணியினாற் பிள்ளையாகிய நபிநாயகத்தைப் பொதிந்து சுருட்டியெடுத்து ஒருவர் தன்னுடைய இறகின் பேரிலோர் மணிநேரமட்டிலும் வைத்திருந்து, பின்னர் பீபி ஆமீனாவவர்கள் கையிற் கொடுத்துவிட்டுப் போயினார்.

அங்கே, அப்துல் முத்தலீபவர்க ளிருக்கின்ற கருபத்துல்லாவாணது, மக்காம் இபுறுஹீ மென்னுந் தலத்திற்கு நேராக நான்கு மூலைகளு மொன்றாகச் சேர்த்து சிஜிதாச் செய்தெழுந்து பின்னர், இன்றையோடே அல்லாஹுத்தஆலா என்னை புத்துகளைக்கொண்டு

ஷீறுக்குகளைக் கொண்டும் பரிசுத்தமாக்கினு னென்று சொன்னது. இவ்விதம் கருபத்துல்லா சொன்னதை அப்துல் முத்தரீபு அவர் கேட்டுக்கொண்டு நிற்கும்போது, தருபத்துல்லா வாய்விட்டு இன்றையதினம் பீபி ஆமீனுரவர்களுடைய வயிற்றிலே நபிநாயக முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம் பிறந்தார்கள் அவர்களிந்தக் கருபாவைத் தமக்கிடமாக்கியும், கிபுலாவாக்கியுங் கொள்வதுடன், இவ்விடத்தை மிகவும் பிரியம் வைத்திருப்பாரென்று சொல்லினவுடனே, அவர்கட்கு அல்லாஹுத்தஆலாவுடைய றகுமத்தென்னு மேகமு மிறங்குமென்று பெரிய சத்தமாகக் கூவினது.

அப்போது, அங்கிருந்த சிறிய புத்துகளும், குபலென்னும் பெரிய புத்தும், முகங்குப்புற விழுந்து போயிற்று. இன்னும், அன்றிரவு சுரு ராச்சியத்திலுள்ள மாடமாளிகை, கூடகோபுரங்களெல்லாமதிர்ந்ததுடனே, அவ்விராச்சியத்துக் கோட்டையிலுள்ள பதினுன்கு கொத்தளமு மிடிந்து விழுந்தது. இன்னும் அவ்விடத்திலுள்ள புத்துகளெல்லா முருண்டு புரண்டு கீழே விழுந்தன. இன்னும், எப்போதும் வற்ருத சாவாவென்னு மேரியிலுள்ள தண்ணீரும் குபீரென்று வற்றிப்போயினது. இன்னும், ஆருயிரம் வருஷந் தண்ணீரில்லாமல் வற்றிக்கிடந்த சாமாவென்னும் ஆற்றிலுந் தண்ணீர் நிரம்பி வெள்ளப் பிரவாகமாயினது. ஆயிர வருஷ காலமாகப் பாரிசுக்காரர் வணங்கிய அவியாத நெருப்புக் குண்டமும் புழுதி புரண்டு நெருப்பு மவிந்துபோயினது. இன்னும் இபுலீசுடைய சிங்காதனமு மேல்கீழும் கீழ்மேலுமாகக் கவிழ்ந்து போயினது.

இவ்விதம் காரணங்களையுடைய பிள்ளையாகிய நபி முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைப் பெற்ற தாயாராகிய பீபி ஆமினுரவர்கட்கு. மற்றும் பிள்ளைப்பெறும் பெண்களுக்குள்ள தீட்டுத்துடக்கு யாதாமொன்று மில்லாமலும், பிள்ளைக்குத் தொப்பூலறுத்தும், சுன்னத்துச் செய்தும், கண்ணிற்குச் சுறுமா விட்டும். தலைக்கு நெய்தேய்த்து மிருக்கும்படியாகவும், கருபத்துல்லாவுக்கு வடகிழக்காக அபீத்தாலிபவர்கள் வீட்டில், ஜெம்றத்திலுஸ்தாவென்னுந்தலத்தில், றபீவுலவ்வல் மாதம் பன்னிரண்டாந்தேதி திங்கட்கிழமை யிரவு பஜிர் நேரத்தில் நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் பிறந்தார்கள். இன்னும், இவ்வூரிலிருக்கின்ற சாஸ்திரிகள், நுஜூமிகளாகிய எகூதிகள், நசருனிகள் முதலியவர்கட்கெல்லாம் அன்றிரவு தோற்றிய நட்சத்திரக் கெணிதத்தினுல், நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் பிறந்த சங்கதி தெரியலாகி, அவர்களுடைய கூட்டத்தார்களோடும் இன்

றைய இரவில் முஹம்மது பிறந்திருக்கிறாரென்று முன்னோர்களாலெழுதிய திருஷ்டாந்தரத்துடனே சொன்னார்கள்.

இவ்விதம் காரணங்கள், அத்தாட்சியோடும் பிறந்த நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கட்கு, பீபி ஆமினாரவர்கள் எழுநாள் மட்டும் பால் கொடுத்தார்கள். பின்னர் சுவைரியா வென்பவள் எழுநாள் மட்டும் பால்கொடுத்துக் கொண்டு வருகையில் குனைனென்னும், பட்டணத்தில், அலிமா வென்னும் பெயருடைய பெண்ணானவர் குடி யிருந்தார்கள். ஆனால். அவ்வலிமாவுடைய சரீர மிகவு மெலிந்ததுடனே வலது பக்கத்து மார்பு சூகையாயும் இடது பக்கத்து மார்பு கொஞ்சந் திரணியாயு மிருந்தன. மேலும் அந்த குனைனென்கிற ஊரிலே பெரிய பஞ்சமொன் றுண்டாகி எவ்விடங்களும் வாங்கித் தின்னத் தான்ய தவசங் கிடைக்காமற் சனங்கள் மிகவும் வருத்தமாகிப் பல திக்கும் போக ஆரம்பித்தார்கள்.

அப்போது அலிமாவும், அவர்கள் புருஷனார் ஆரீதும், இவர்களின் மூத்த மகனாகிய அப்துல்லாவும், இளைய மகனாகிய லமுறத்தும், ஆகிய இந்த நான்கு பேர்களும் ஓர் கிழட்டொட்டகையுமாகப் பிரயாணமாகி மக்கமா நகரத்திற்கு வந்து அங்கே அப்துல் முத்தலிபைக் கண்டு பேசிக்கொண்டு ஆமினாரவர்கள் வீட்டுக்கு வந்தபோது அங்கு மலையாயிருக்கு முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களை அலிமா அவர்களெடுத்துத் தங்கள் மார்போடு கட்டியணைத்தவுடனே அவர்கள் மெலிந்த சரீரமும்பருத்து அழகுண்டாய் அந்தச் சூகை மார்புந்திரண்டு பால் துளும்பிற்று. அப்பாலை நபிநாயகமாகிய பிள்ளை குடித்தார்கள். இடதுமார்புப் பாலை அந்த லமுறத்தென்னுஞ் சிறுவர் குடித்தார். ஆனால் லமுறத்துக்கு எப்போதும் பால் வயிற்றுக்குப் போதாமல் வாயைச் சப்புகிற பிள்ளை நபிநாயகத்தின் பறக்கத்தினாலே அப்போது மார்பிலூறுகிற பால் சுரப்பினால், அப்பிள்ளை குடித்துக் குடித்துக் கொப்பளிக்கும்.

இவ்விதம் நபிநாயகத்தினால் நடக்கிற அதிசயங்களை அலிமாவும், அவர்கள் புருஷனார் ஆரீதுங்கண்டு மிகுந்த சந்தோஷமாய் ஒருடலு மீருடலாய்ப் பூரிப்புக் கொண்டு சிலநா ளங்கிருந்து பின்னர், தங்களூராகிய குனைனுக்கு வரவேண்டு மென்கிற விருப்பத்தினால் அப்துல் முத்தலிபுக்கும். ஆமினாரவர்களுக்கும் சொல்லி விடைபெற்றுக் கொண்டு தாங்கள் ஊரிலிருந் தேறி வந்த கிழட்டொட்டகத்தின் பேரிலே பிள்ளையாகிய நபிநாயகத்தை யெடுத்தேற்றினார்கள். அப்போது அவ்வொட்டகந் திடபிடியாய்க் கொழுத்து ரத்த

மேனி மினுமினுத்தால் நடந்து வருகிற வழியிலே புற்பூடு, செடி கொடிகள், மரமட்டைகள், மலைதிடர், கற்காடுகள் முதலிய சமஸ்தமு நபிநாயக மவர்களுக்குச் சலாம் சொல்லவும், அதனாலே இத்திறந்து உலர்ந்து வதங்கிப் பசுமையின்றிக் கிடக்கு மரங்கள் முதலிய செடி தூறுகளும் வழியிலிரு பக்கமும் நபிநாயகத்தின் சரீரவொளிவுதாக்கி, அவைகள், பசிய நிறமுண்டாய்த் துளிர்த்துத், தளிரிட்டுப், பூத்துக், காய்த்துப், பழங்களைச் சொரிந்தன. இவ்வதிசயங்களை, அலிமாவும், அவர்கள் புருஷனார் ஆரிதும், அவர்கள் கூடப் பிரயாணமாகப் போகிற மற்றவர்களும்கண்டு மெத்தவு மனமகிழ்ச்சி யடைந்தவர்களாய்க் குனைனென்னுமூர் வந்து சேர்ந்தார்கள், அவ்வூரார்களும், அலிமா மக்கத்திற்குப்போன பாக்கியத்தினால் இப்பேர்ப்பட்ட காரணத்தையுடைய ஓர் பிள்ளை கிடைக்கப் பெற்று வந்தாளென்று கேள்வி யுற்று வந்து நபிநாயகத்தைப் பார்த்துச் சந்தோஷமாகப் போவார்கள்.

இன்னும், நபிநாயகத்தின் பறக்கத்தினால் அலிமா வீட்டில், ஆடு, மாடு, ஒட்டகமிவைகள் ஒன்று பத்தாகப் பலுகி பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் குறைவில்லாமல் ஊரிலுயர்ந்த குடித்தனத்தராய் வாழ்ந்தார்கள். இஃதறிந்து, மலட்டு மாடாடுள்ளவர்களவைகளை யோட்டிக் கொண்டு வந்து நபிநாயகத்தின் கைகளாற்றடவச்செய்து அவைகளின் மலடு முதலிய நோய் தீரப்பெற்றுப் பலாபலனை யடைவார்கள். இன்னும், கண், குருடு முதலிய நோயாளிகளும் வந்து நபிநாயகத்தின் கையை யெடுத்தவர்கள் கண் முகத்தில் வைத்துத் தடவிக்கொண்டு நோய் தீர்ந்து போவார்கள்.

இவ்விதம், காரணங்களோடும் நபிநாயகத்திற்கு இரண்டுவருஷமாயினது இவ்விரண்டு வருஷமட்டிலும் பிள்ளைக்கு ஓர் துன்பமும் நேரிடவுமில்லை, அலிமா நபிநாயகமாகிய பிள்ளைக்கு மருந்து முதலியவை சங்குகளில்வைத்தூட்டவுமில்லை. இரவு காலங்களிற் பிள்ளையைத்தொட்டிலிற் படுக்க வைத்துவிட்டு அவ்வீட்டு லலிமா முதலிய சகலரும் நித்திரை செய்வார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வந்து தொட்டிலைபாட்டுவார்கள். சந்திரன் வந்து பிள்ளைக்குக் கால்கைகளைத் தடவும். இக்காரணங்களை அலிமா மாத்திரமுழிப்பற் கண்டதாகவும், கனவிற் கண்டதாகவும், சில றிவாயத்திற்சொல்லப்படுகின்றன. இன்னும், பிள்ளையாகிய நபிநாகத்தின் அழகு சவுந்திரியத்தையும், அவர்கள் பக்கலில் நடக்கும் காரணங்களையும் சில பாதகர்கள் கண்டு முற்பட நமது வேதாந்திகள் பிற்காலத்தில் ஒருவர் பிறந்து உலகத்திற் பலமார்க்கங்களையு மழித்து ஒரு மார்க்கமுண்டாக்குவாரென் றெழுதியிருக்கிறார்களே. அப்பேர்ப்

பட்டவராயு மிருக்கப் போதும். ஆதலால் இப்பிள்ளையைக் கொலை செய்து போடவேண்டு மென்று நாடி வந்து, அலிமாவைக் கண்டு அநேக பணங்களையுந், தான்ய தவசங்களையும், பட்டு வஸ்திரங்களையுங் கொடுத்து பதிலுக்குப் பிள்ளையுங் கொடுத்துக் கேட்டதாயும் சில றிவாயத்திற் சொல்லப்படுகின்றன.

இவ்விதமாக, இருக்குங்காலத்தில், அலிமா அவர்கள் பல காரியங்களையும் யோசித்துப் பிள்ளையும் பால் குடி மறந்திருப்பதினால்; இனி நாம் பிள்ளையைப் பெற்றவர்களிடம் கொண்டுபோய்க் காண்பிக்காமலிருப்பது குற்றமென் றெண்ணி, நபிநாயகத்திற்கு இரண்டு வருஷம் நிரம்பி மூன்றும் வருஷ ஆரம்பத்தில், அலிமா பிள்ளையையெடுத்துக் கொண்டு மக்கத்திற்கு வந்து ஆமினாவர்களைக் கண்டு மரியாதித்துப் பிள்ளையாகிய நபிநாயகத்தைச் சிறப்பாக அவர்களிடத்திற் கொடுக்க, அவர்கள் பிள்ளையாகிய நபிநாயகத்தை, ஆவலாக எடுத்து மார்போடுமணைத்து உச்சந்தலை முக முதலிய விடங்களில் முத்தமிட்டு ஒருடலு மீருடலாகப் பூரித்துச் சந்தோஷமாகி அருமையாகப் பால்கொடுத்து வளர்த்துக் கொண்டு வந்த அலிமாவையும் அன்புடனே ஆதரித்து உபசரணை செய்திருந்தார்கள்.

இவ்விதம். அலிமாவும், அவள் புருடனார் ஆரீது மக்கத்தில் நான்கு மாதமிருந்து பின்னர், ஆமினாருக்கும், அப்துல் முத்தலீபுக்கும், மற்ற உறமுரையாருக்கும். தாங்களூருக்குப் போகும் விஷயத்தைத் தெரிவித்துப் பிரயாணஞ் சொல்லிப்பிள்ளையாகிய நபிநாயகத்தையு மெடுத்துக்கொண்டு குனைனூருக்கு வந்து சேர்ந்தார்கள்.

இவ்விதம், அலிமா நபிநாயகத்தை யிரண்டாந்தரம் குனைனென்னு மூருக்குக் கொண்டு வந்து சிறப்பாக வாழ்ந்திருக்கையில் நபிநாயகத்துக்கு வயது நான்காயிற்று, அப்போது ஒருநாள் நபிநாயகம் அலிமாவைப் பார்த்துத் தாயே என் சகோதரர்களான அப்துல்லாவும். லமுறத்தும் பகலெல்லாம் யெங்கே போயிருந்து இரவானபோது வருகிறார்கள். அப்படியவர்கள் போகிற விடத்தை யெனக்குச் சொல்லுங்களென்று கேட்டார்கள். அதற்குக் கலிமா நபிநாயகத்தைப் பார்த்து, எனதருமையாகிய மகனே, அவர்களிருவருக்கும் பகலெல்லாம் நமது ஆடு மாடுகளைக் கொண்டு காட்டிற் போய் மேய்த்துக்கொண்டு இரவான போது வருகிறார்க ளென்று சொன்னாள். அதுகேட்டு, நபிநாயகம் அலிமாவோடும் என் தாயே நானு மவர்கள் போகுமிடத்திற்குக் கூடப்போவே னென்று பிடிப்பாகச் சொன்னார்கள். அச்சொல்லிற்கு அலிமாவு மிசைந்து மற்று

நாட்காலையில் நபிநாயகத்திற்கு நல்ல வெள்ளைப்புடவை யுடுத்தித் தலைக்கு நெய்யுந் தேய்த்துக் கையிற் பிடிக்கவோர் கோலுமெடுத்துக் கொடுத்துத், தன் மக்களோடும் கூடப்போகு மற்றச் சிறுவர்களை யும் பார்த்து, என் மகன் முஹம்மதைக் கூட்டிக் கொண்டுபோய் நிழ லுள்ள இடமாயுந் தண்ணீருள்ள தாவாயு மிருக்கின்ற என் கையில் வைத்து நீங்கள் வழமைபோல ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு நேரத்தோடு பொழுதிருக்க வீடு வந்து சேருங்களென்று நபிநாய கத்தை முத்திமுகந் தனுப்பி வைத்தாள்.

பின்னரப்பிள்ளைகள் நபிநாயகத்தைக்கூடக் கூட்டிக் கொண்டு காட்டிற்குப்போய் ஓாலவிருக்ஷத்தின் கீழே, தங்கள் தங்களிடத் திருந்த கறுப்புக் கம்பளங்களை விரித்து அதின் பேரில் நபிநாயகத் தைப் பாத்துஷவாக நேமித்திருக்க வைத்து மற்றவர்க ளெல்லா மேவலாக இருந்து விளையாடிக்கொண் டிருக்கும்போது, அவ்விடத் தில் நூதனமான இரண்டு பேர்கள், ஒருவர் கையில் ஓர் கிண்ணமும், ஒருவர் கையில் ஓர் கத்தியு முள்ளவராகச் சமீபத்தில்வரக் கண்டு, விளையாடின பிள்ளைகளெல்லாம் பயந்து திகிலடைந்து ஓடினார்கள். அது கண்டு நபிநாயகமுஹம்மோட எழுந்தார்கள். அப்போது, அங்கு வந்த இருவரும் நபிநாயகத்துடைய கையைப் பிடித்து உவா மரத்தடியிற் கொண்டுபோயிருக்கச் செய்து கீழே மல்லாத்திப் போட்டு நெஞ்சைக்கீறி யங்கிருக்குந் தாமரை முகையைக் கிழித்து, அதனுள்ளிருக்கும் கசடு குற்றங்கள் முதலிய மற்ற எவ்விஷயங்க ளான கெடுதல்களையும் வெளியே எடுத்து இபுலீசன் மாயை மாற்றி நன்றாகக் கழுவி அதனுள்ளே அறிவு, பொறுமை முதலிய சகல நன் மைகளையும் நிரப்பிப் பொருந்தச்செய்து கிழித்த நெஞ்சை யுற்றுப் பார்க்கும்போது யாதாமொரு தழும்புமில்லா திருந்தது.

இவ்விதம், அங்கு வந்து நெஞ்சைக் கிழித்துப் பொருந்திய இரண்டுபேர்களான ஜிபுரீலும், மீக்காயிலும் நபிநாயக மவர்கள் சிர சைத் தடவி முத்தமிட்டுப் புதிதாய் ஹபீபுல்லா வென்றோர் பெயரு மிட்டுப் பலவாறு புகழ்ந்து போற்றிக் கொண்டு வானலோகம் போய் விட்டார்கள்.

பின்னர் இச்செய்தி யெல்லாம் முன்னர் அங்கு ஓடிய சிறுவர்கள் போய், அலிமாவுக்கும், ஆரீதுக்கும் சொன்னார்கள். அதுகேட் டவ் விருவரும் பரிதாபமாக வயிற்றிலடித்து அழுதுகொண்டு விரைவாக வோடி வந்து பார்க்கும்போது, நபிநாயகம் வானத்தைப் பார்த்தவர்க ளாக இருக்கக் கண்டு, அலிமா என் மகனே முஹம்மதேயென்று கட்டியணைத்து முத்தமிட்டு நபிநாயகத்தின் திரேகமெல்லாம் பார்த்

தார்கள். அங்கே யாதாமொரு காயமுந் தழும்புமில்லா திருக்கக் கண்டு, நபிநாயகத்தோடு மகனே இங்கேநடந்த காரணமென்னென்று கேட்டாள். அப்போது நபிநாயகம், அலிமாவோடும் அங்கு நடந்ததை யாவும் சொல்லினுர்கள். அது கேட்டு அலிமா உயிரிழந்தவர் கட் குயிரும், கண்ணிழந்தவர்கட்குக் கண்ணுங் கிடைத்ததுபோலே நபிநாயகத்தைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குவந்தாள். இவ்விதம் நபி முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை 20-வயதிலும், 40-வது வயதிலும், மிகுறாஜுக்குப் போகும்போதிலும் நெஞ்சைக் கிழித்ததாக பவாதுல்ப துரியா முதலிய கித்தாபிற் சொல்லப்படுகின்றன.

இவ்விதத்தில், அலிமா நபிநாயகத்தைக் காட்டிலிருந்து வீட்டிற்குக்கூட்டி வந்தபின்னர், ஆரீதும், அலிமாவும் யோசித்தார்கள் இந்தப் பிள்ளையினு லிம்மட்டும் நடந்தகாரணங்களும் சத்துருக்களுடைய அபாயங்களுமிகவு முண்டாயிருக்கின்றன. ஆதலாலினி நாம் பிள்ளையை வைத்துக்கொண்டிருப்பது முறையில்லை யென்று பேசிக்கொண்டு, நபிநாயகத்தைக் கூட்டிக்கொண்டு போய்ப் பெற்றவர்களிடம் விட்டுவிடவேண்டுமென்று ஓர் ஒட்டகையின் பேரில் நபிநாயகத்தை ஏற்றிக்கொண்டு குனேன் நகரத்தைவிட்டும் நீங்கி மக்கத்தை நாடி வருகிறவழியிலோர் ஆலவிருக்ஷத்தி னடியிலிறங்கி அலிமா நபிநாயகத்தை மடியில் வைத்துக்கொண் டிருக்கும்போது ஒரு மின்னல் மின்னி வீசிவந்து விழுவதுபோல ஒரு கை வந்துவிழுந்து நபிநாயகத்தைத் தூக்கிக்கொண்டு போயிற்று அதுகண்டு அலிமா மடியிலிருந்த பிள்ளை மாயமாகப் போய்விட்டதே இனிப் பிள்ளையைப்பெற்ற தாயாரிடத்திற் போய் நானென்ன சொல்வேனென்று பரிதாபத்துடனே யெழுந்து அவ்விடங்களி லெல்லா மோடியோடிப் போய்ப் பார்த்ததில், எவ்விடங்களிலும் பிள்ளையாகிய நபிநாயகத்தைக் காணுமையினுலே, வயிற்றிற் கையையடித்து மோதி முகங்குப்புறக் கீழே விழுந் தலறிப் புழுதியிலே மேனியெல்லாம் புதையும்படி யுருண்டுருண்டு அழுதுகொண் டிருக்கும்போது அவ்விடத்திலே, ஓர் முதிய கிழவன் வந்து, அலிமாவைப் பார்த்து ஓய் கற்பின் மடவாளே! நீரேனிந்தகாட்டி லிவ்விதம் பரிதாபப்பட் டழுது சலிக்கிறீரென்று கேட்டான். அதற்குக் கலிமா, அம்முதிய கிழவனேடும் அங்கு தம் பிள்ளையாகிய நபிநாயகத்தை யிழந்ததைச்சொல்ல, அது கேட்டு அம்முதியவன் அலிமாவைத் தேற்றிக் கலங்காதேயென்று கூட்டிக்கொண்டு, அங்கிருக்கு மோர் தெய்வத்தினிடம்போய் இந்த அம்மாளுடைய இன்னபேருடைய பிள்ளையை இந்தக்காட்டி லிழந்தாளாம், அப்பிள்ளையைக் கூட்டுதவியாக்கி வையுமென்று கும்பிட்ட கையாகக் கேட்டு நின்ருன்.

அந்தத் தெய்வமாகிய சிலையானது நபிநாயகத்தின் பேர் கேட்ட மாத்திரத்தில் முகங்குப்புறத் தரையிலிடித்து மோதிவிழுந்தது. அது கண்டு முதியவன் அலிமாவைப் பார்த்து, அம்மா! உன மகன் முஹம்மதுடைய பெயர் சொன்ன மாத்திரத்தே, இந்தக் காலத்திலுள்ள தெய்வங்களெல்லாம் முகங் குப்புற விழுகிறதா யிருக்கின்றன. ஆகலால் நீயேன் அந்தப் பிள்ளையைக் குறித்துக் கவலையாகிறாய். அவருக்கு ஏகதத்துவ காரணனான ஆண்டவன் கிருபை பூரணமாக இருக்கின்றமையால் அவ்வாண்டவன், அப்பிள்ளையை யுன்னிடத்திற் கூட்டுதவியாக்கி வைப்பார். அஃதிப்போதில்லை ஆதலால் நீ யிந்தக் காட்டில் நின்று சலித்தழவேண்டாம். நாடி வந்த இடத்திற்கும் போவென்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அது கேட்டு, அலிமாவும் ஆரிதும் நேராக மக்கத்துக்கு வந்து இச்செய்தியை அப்துல் முத்தலிபுக்குச் சொன்னார்கள் அவர் கேட்டு நான்கு திசைகளிலும் ஆள்களை அனுப்பித் தேடவிட்டதில் அவர்களெங்கும் போய்த் தேடியும், நபிநாயகம் அகப்படாமையினால், எல்லாரும் துயரமா யிருக்கும்போது ஒரு சத்தம் வந்தது. அஃதென்னெனில் மக்கத்தில் கருபத்துல்லாவுக்குந் தென்புறமாக ஒரு வாழைத் தோட்டமிருக்கிறது. அதில் அந்தப் பிள்ளை யிருக்கிறாரென்று இவ்விதம் வந்த சத்தங் கேட்டவுடனே அப்துல் முத்தலிபும் சில பேருமாகப் போய் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை யெடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். அலிமாவும் ஆரிதும் சிலநாள் பக்கத்திலிருந்து பின்னர் இருவரும் குனையென்னும் பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

பின்பு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை பீபி ஆமினா, தங்கள் வீட்டில் வைத்து வளர்த்துக் கொண்டிருக்கிற நாளையிலே பீபி ஆமினா தங்கள் தாயார் வீட்டை நாடி மதீனத்துக்குப் போய் அங்கே சில நாளி ந்து அவ்விடம் விட்டு வருகிற வழியில் அபுவாவென்னு மூரில் வந்து தங்கினார்கள். அப்போது அல்லாஹுத்த ஆலாவின் கட்டளைப்படி பீபி ஆமினா மவுத்தாயினார்கள் அப்போது நபிநாயகத்துக்கு வயது ஆறு வருஷமும் ஒரு மாதமுமா யிருந்தது. இந்தச் சேதியை அப்துல் முத்தலிபுக்குத் தெரியப் படுத்தினார்கள். அதை அப்துல் முத்தலிபு கேட்டு ஆள்களை யனுப்பி நபிநாயகத்தை வருவித்துத் தமது வீட்டில் வைத்து வளர்த்து வருகிற நாளையில் அவ்வூரில் மழையில்லாம லிருந்தது அப்போது நபிநாயகத்தை அப்துல் முத்தலிபவர்கள் அழைத்துக் கொண்டு போய் தவு செய்கிற இடத்தில் நின்று நபிநாயகத்தின் கையை யேந்தச் சொன்

ஞர். அவர்கள் கையை ஏந்தினவுடனே, அல்லாஹுத்தஆலா பெருமழையை யிறக்கினன். அதுகண்டு எல்லோரும் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் பேரில் மிகுந்த பிரியமாயிருந்தார்கள். அப்படி யிருக்கிற நாளையில் அப்துல் முத்தலிபும் இறந்து போனார். அப்போது நபியுல்லாவுக்கு வயது எட்டு வருடமும் இரண்டு மாதமுமா யிருந்தது. அதன் பின்பு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை, அபித்தாலிபு எடுத்து வளர்த்துக்கொண்டார்கள்.

இவ்விதம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அபீத்தாலிபுடைய வீட்டிலிருந்து வளர்ந்து வரும்போது அவர்கள் வளர்பிறை வளர்வதுபோல் நாளுக்கு நாள் வயது வளர்ந்தேறிக் கொண்டே வந்து 25-வயது நிறைந்தபோது தங்கள் மனதில் வியாபாரஞ் செய்ய வேண்டுமென்று நினைத்துத் தங்கள் பெரிய தகப்பனாராகிய அபீத்தாலிபி னிடத்தில் வந்து தாங்கள் நினைத்த நினைவைச் சொன்னார்கள். அதுகேட்டு அபீத்தாலிபு நம்முடைய பிள்ளைக் கிப்போது வியாபாரஞ் செய்யக் கருத்தா யிருக்கிறதே அதற்கு நம்மிடத்திற் பொருளில்லையே இதற்கென்ன செய்வோமென்று ஆலோசித்து நபி நாயக மவர்களைப் பார்த்து மகனே நான் குவலீதினுடைய மகளாகிய கதீஜா இடத்திற் போய் வர்த்தகத்துக்காகப் பொருள் கேட்கிறேன். அவர் கொடுத்தால் அதை வாங்கிக் கொண்டு வருகிறே னென்று சொல்லிவிட்டு கதீஜாநாயகி வீட்டுக்குப் போனார் போனவுடனே கதீஜாநாயகி அபீத்தாலிபுக்கு மிகுந்த சங்கை செய்து நல்ல விரிப்பி லுட்காரவைத்து மிஸ்கீனாகிய அடியாள் வீட்டுக்குத் தாங்கள் வந்த காரண மென்னவென்று கேட்டார். அதற்கு அபீத்தாலிபு தாம் நினைத்து வந்ததைச் சொன்னார். அதைக் கதீஜாநாயகி கேட்டுத் தங்களுக்கில்லாத பொருள் யாருக்குக் கொடுக்கப் போகிறேன். அப்படியே வாங்கிக் கொண்டு போங்கள் அதற்காக நாளைய தினம் வரும்போது தங்கள் பிள்ளையாகிய முஹம்மதையுங் கூட அழைத்துக்கொண்டு வந்து வாங்கிக்கொண்டு போங்களென்று சொன்னார்.

அதை அபீத்தாலிபு கேட்டு மிகுந்த சந்தோஷத்துடனே வீட்டுக்கு வந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்குத் தெரிவித்து மறுநாள் இருவரும் கதீஜாவாகிய வீட்டுக்குப் போனார்கள் அதை கதீஜாநாயகி கண்டு நல்ல விரிப்புகள் விரித்து அதிலிருவரையு முட்காரச் சொல்லி மிகுந்த அன்பு ஆசாரஞ்செய்து இருவருக்கும் விருந்து கொடுத்துத் தம்மிடத்தில் ஷாமு தேசத்திற்

172347

செலவாகும் சரக்குகள், இருநூறு ஒட்டகங்களிலும் இலட்சத்தொரு நூறாயிரந் தங்கக் காசும் பணிவிடை செய்ய இருபது ஆட்களும், கூடக்கணக்கெழுத மைசறாவையும் போம்படியாயவருக்குச் சொல்ல வேண்டும். புத்திமதிகளும் சொல்லிக் கூட்டி அனுப்பி வைத்தார். இவர் கூட அபூபக்கர் சித்தீக்கும், இன்னும் சில வர்த்தகர்களும், அபூஜகலுமாகக் கூடிப் பெரிய கூட்டமாகச் சேர்ந்து ஷாமு தேசத்துக்குப் போக மக்கத்தை விட்டும் வெளிப்பட்டு ஓரிடத்திற் போய் அன்றைய தினம் தங்கினார்கள்.

மறுநாட் பொழுது விடிந்தவுடனே எழுந்து இன்றைய தினம் முன்னணியாக யார் நடக்கிறதென்று கேட்டதற்கு அபுஜகல் நான் முன்னணியாக நடப்பேனென்று சொன்னான். அதுபோல் அவனே முன்னணியாகப் போகச்சே அவனுடைய ஒட்டகத்தின் காலை ஒரு கட்டை தட்டி ஒட்டகமும் அவனும் கீழே விழுந்ததில் அவனுடைய முகமுடைந்து மிகுந்த வருத்தப்பட்டான். பின்னர் இப்போது யார் முன்னணியாக நடக்கிறதென்று கேட்டபோது உத்துபா நான் நடப்பேனென்று சொல்லித் தீரமாக நடந்துபோகும்போது அவன் ஒட்டகத்தை ஓர் புலி எடுத்துக்கொண்டு போய்விட்டது. பின்னர் யார் முன்னணியாக நடக்கிறதென்று கேட்டபோது ஆசென்பவன், நான் நடப்பேனென்று முன்னாலே நடந்தான். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள், அவன் ஒட்டகைக்கு முன்னே ஓர் பெண்ணொட்டகை வேஷங்கொண்டு நடக்க, அதை ஆசுடைய ஆண்வொட்டகங் கண்டு அதன் பின்னாலே நடக்க, அவனையும், மற்றச் சனங்களையும் பாலைநிலத்தில் கொண்டுபோய் விட்டது.

அப்போது, சனங்களுடைய நாவுகள் உலர்ந்து தண்ணீர்த்தவனமதிகமாகி மிகுந்த வியாகூலஸ்தரா யிருக்கும்போது, அபூபக்கர் சித்தீக்கவர்கள் இச்சேதியை அபூஜகலுக்குச் சொல்லி முஹம்மதுநபியை முன்னணியாக நடப்பிக்கச் செய்தால், இவ்வேதனை யெல்லாம் நீங்கி விடுமென்று சொன்னார்கள். அதுகேட்டு அபூஜகில் முஹம்மதைத் தான் முன்னே நடக்கச் சொல்லுமென்று சொன்னான். உடனே முஹம்மதுநபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய ஒட்டையின் கயிற்றைச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் பிடித்துக்கொண்டு ஒருநொடியில் ஷாமுடைய பாதையிற் கொண்டுவந்து விட்டார்கள். அப்போதெல்லாருக்கும் நாலு திசையுந் தெரிந்து சந்தோஷமானார்கள். பின்னர், அவ்வேணியில் அகப்பட்டதினால் நாவுகளுலர்ந்து தண்ணீர்த் தவனத்

தை நினைத்தார்கள். அக்கருத்து நபிநாயகத்துக்குத் தெரிந்து, தாங்களேறிப்போகும் ஒட்டகக் கயிற்றை அசைத்தார்கள். அவ்வொட்டகத்துக்கு, அக்கருத்துத் தெரிந்து, தனது வலதுகாலைப் பூமியிலூன்றி அழுத்தியெடுத்தவுடனே, அதிலிருந்து குமிழி யெழுந்து தண்ணீர் ஓடினது. அத் தண்ணீரை எல்லாருங்குடித்துச் சந்தோஷமானார்கள்.

அன்றையதினம் பொழுதுபோய் மறுநாட் காலையில் சகல வியாபாரிகளும், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமுமாக எழுந்து நடக்கையில், சூரியனை இருள் வந்து மூடிக்கொண்டது. அதனால் ஒருவருடைய முகம் ஒருவருக்குத் தெரியாமல் மயங்கிய வேளையில், இந்த இருளும் முஹம்மதால் நீங்கிவிடுமென்று நினைத்தார்கள். உடனே அவ்விருளும் நீங்கிப்போயினது. அதைவிட்டு மப்புறம் போகையில், ஒருவன் ஓடிவந்து நபிநாயகத்தைப் பார்த்து இவ்வழியில் ஒரு பாம்பு மலைபோலிருக்கிறது. அது யானை, ஒட்டகம், குதிரை, மனுடர்களையெல்லாம் தின்றுவிடுகிறதென்று சொன்னான். அதுகேட்டு, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் கீழிறங்கி அந்தப் பாம்பு இருக்கும் இடத்தை யெடுக்கப் போனார்கள். அப்போது பாம்பானது, நபியுல்லாவைக்கண்டு தன் விஷத்தைக் கக்கி மேலே யெறிந்து வாயைத் திறந்து, கடிக்க வந்தது. அப்போது, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஒரு முழத்துண்டு கோலால் அதன் தலையில் அடித்தார்கள். அடித்தவுடனே அதனுடைய தலை துண்டாய்த் தெறித்துப் பக்கத்திலிருக்கிற மலையைப் போய்க் கவ்வியது. உடனே மலையும், துண்டு துண்டாய் நொறுங்கிப்போயிற்று.

அன்றையதினம், பொழுதுபோய் மறுநாட் பிரயாணம் போகையில், மலையும், காட்டாறுமுள்ள வேறிடத்திலிறங்கி யிருந்தார்கள். இருக்கையில், அன்றிரவு நபியுல்லாவுடைய கனவில் ஜிபுரீல் வந்து நாளை யுதயகாலத்தில் வெள்ளம் வருகிறது. ஆனபடியினாலே, இவ்விடத்தை நீங்கள் அனைவரும் விட்டு இந்த மலையில் ஏறிக்கொள்ளுங்களென்று சொன்னார். அதுபோலவே, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமும், மற்றப் பேருமாக அந்த மலையில் ஏறிக்கொண்டார்கள். பொழுது விடிந்தவுடனே பெரும் வெள்ளம் வந்தது, அந்த மலையில் மூன்றுநாள் வரைக்கு மிருந்து பார்த்தார்கள். தண்ணீர் வடியவில்லை. அப்போது, நபிநாயகம் கூட விருப்பவர்கள் யாவரையும் பார்த்து, நாளையத்தினம் போகலாமென்று சொன்னார்கள். அன்றிரவு கனவில் ஜிபுரீல் வந்து நபிநாயக மவர்களைப்பார்த்து

முஹம்மதே நாளைபத்தினம் ஒரு மான்வரும், அதன் பின்னாலே எல்லாருந் தொடர்ந்து போங்களென்று சொல்லிவிட்டுப் போயினார்கள். அதுபோலவே, காலையிலெல்லோரும் ஆற்றங்கரையருகில் வந்தபோது ஒரு மானானது வந்து முன்னே ஆற்றிலிறங்கிப் போகக் கண்டு, அதின் பின்னாலே நபிநாயகமும், அவர்கள் பின்னாலே சகல பேருமாக நடந்து ஆற்றைத் தாண்டிக் கரை போனார்கள்.

இப்படி நடந்து போகிறவழியில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களோடும் ஒருபுலியும் ஒருபாம்பும் வந்து அடிபணிந்து பேசிப்போயின. அப்புறம் போகையில், ஈசாநபியுடைய மார்க்கத்திலுள்ள இசுருவென்பவர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைக் காணவேணுமென்று அநேக நாளாய்க் காத்துக் கொண்டிருந்தார். அவருடனுங் கலந்துபேசிக் கொண்டிருக்கையில், அவருமவுத்தாயினார், அவரை எடுத்து அடக்கஞ்செய்துவிட்டு அப்புறம் போகையில், இவர்களிடத்தில், திருட வந்த கள்ளரை ஆறு மறித்துக் கொண்டது. பின்னர் ஷாமுக்குப் போனபோது, அவ்விடத்தில் இவர்கள் கொண்டுபோன சரக்கெல்லாம் ஒட்டிக்கிரட்டியாக லாபம் நிற்க வியாபாரத்தொழிலை முடித்துக் கொண்டு ஷாமைவிட்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமும், மைசருவும், அபூபக்கர் சித்தீக்கும், அபூஜகுலும் மற்றப் பேருமாக மக்கம் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது, பீபி கதீஜா மைசருவைப் பார்த்து வழியில் நடந்த செய்தி என்னவென்று கேட்க, அதற்கு மைசரு ஆதியோடந்தமாக வழியில் ஆகிய அபூஜிகல் முகமுடைந்ததும், உத்துபாவின் ஒட்டகையைப் புலி யெடுத்துக்கொண்டு போனதும், நடக்கையில் வழி தப்பிப் போனதும், இருள் வந்து மூடிக்கொண்டு வெளிச்சமானதும், பாம்பை ஒரு முழத்துண்டாலே கொன்றதும், புலி வசனித்ததும், பாம்பு வசனித்ததும், இசுருவைக்கண்டு பேசினதும், கள்ளரை ஆறுவந்து மறித்துக்கொண்டதும், ஷாமுப்பட்டணம்போய் அவ்விடத்தில் ஆதாயமாகச் சரக்கு விற்றதும், அப்போது அவ்வூரிலுள்ளவர்களில் சிலர் வந்து சரக்கு வேண்டுமென்று மோசவார்த்தைகள் பேசிக் கோட்டைக்குள் அழைத்துக்கொண்டுபோய் மெத்தையின் கீழே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை யுட்காரவைத்து மேலே கல்லை யுபாயமாக வைத்துத் தள்ளினதும், அப்படித் தள்ளப் போனவன் கையைக் கல்லு பிடித்துக்கொண்டதும், அக்கல் பிடித்துக்கொண்ட கையை நபிநாயகம் பார்த்து விடும்படியாகச் செய்ததும், அங்கே ஒரு கம்மாளன் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய வடிவையும், அடையாளங்களையுங் கண்டு இவர் பிற்காலத்து நபியென்று கூக்குரலிட்டதும், அந்தச் சத்தத்தால் ஊராரெல்லாம்

ஒன்ருய்த் திரண்டு வந்ததும், தாங்கள் ஷாமைவிட்டுச் சீக்கிரமாக வெளிப்பட்டு வந்ததும், வரும் வழியில் ஊசாவைக்கண்டதும், அவர் சொன்ன பேச்சுகளையும் ஒன்றையும் விடாமல் ஆதியோடந்தமாய்ச் சொன்ஞர். அதுகேட்டு, பீபி கதீஜா நாயகி மெத்தவுஞ் சந்தோஷ மாஞர்.

அதன் பின்னர் பீபி கதீஜா நாயகி தம் மனதிற் சந்தோஷமும் துக்கமும் இரண்டு முண்டாயிற்று ஏனென்ருல், ஷாமுப்பட்டணம் போகிற வழியில் நடந்தவை யெல்லாம் நினைத்துச் சந்தோஷமும், இப்படிப்பட்ட நபியுல்லா நம்மைக் கலியாணஞ் செய்து கொள்வரோ மாட்டாரோ வென்கிற துக்கமுங்கலந்து கொண்டிருந்தது. அப்படி யிருக்கும் நாளிலே, அபீத்தாலிபு ஒருநாள் அமீர் ஹம்சா முதலாகிய மற்றத் தம்மினத்தார்களடங்கலையும், அழைப்பித்து என் பிள்ளை யாகிய முஹம்மதுக்குக் கலியாணஞ் செய்யும் வயதானபடியினலே எவ்விடம் பெண்ணை நேமகஞ் செய்வோமென்று யோசனை செய்கை யில் அப்போது, அபீத்தாலிபு, குவைலீதினுடைய மகள் பீபி கதீஜாவைக் கேட்போமென்று சொன்ஞர். அதை எல்லோருங்கேட்டுச் சம்மதப்பட்டார்கள்.

அப்போது அபீத்தாலிபு அவர் வீட்டுக்குப்போக யாராலு முடியாது. அமீர் ஹம்சாவை அனுப்பி வைத்தால்முடியுமென்று யோசனைசெய்து, அமீர்ஹம்சாவை அனுப்பிவைத்தார்கள். அதற்கு அவரும் நல்லதென்று சம்மதித்து எழுந்துபோய் குவைலீதினு டைய வீட்டுக்குட்சென்ருர். அப்போது குவைலீது அந்த அமீர் ஹம்சா வருவதைக்கண்டு எதிர்சென்று அழைத்துவந்து நல்லவிரிப் பில் உட்காரவைத்துச் சில நல்லமொழிகளும் வசனித்து நீர் இந்த எளியவள் வீட்டை நாடிவந்த காரணம் என்னவென்று கேட்டார். அதற்கு அமீர் ஹம்சா என் அண்ணன் பிள்ளையாகிய முஹம்மதுக்கு உம்மிடத்திற் பெண் கேட்கலாமென்று நாடிவந்தேனென்று சொல்ல, அதை அவர் கேட்டு மிகுந்த சந்தோஷமாய் அப்படியே ஆகட்டு மென்று சம்மதித்தார். அதன் பின்னர், அமீர் ஹம்சா இந்தச் செய்தியை யெல்லாம் வந்து அபீத்தாலிபு முதலியமற்றுமுண்டான வர்களுக்குச் சொல்லிஞர் அவர்கள் எல்லோரும் இந்தச் செய்தியைக் கேட்டு ஆனந்தமாகிய சமுத்திரத்தில் மூழ்கிஞர்கள்.

பின்னர் நாளும் நேமகஞ் செய்து அம்மார்க்கத்தி லுள்ளபடி நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கும், பீபி கதீஜா நாயகத்துக் கும் நிக்கா முடித்தார்கள். அப்போது நபிசல்லல்லாஹு அலை ஹிவசல்லத்துக்கு வயது 25-ம் பீபி கதீஜா நாயகிக்கு வயது கோத்திர மாலையிற் சொல்லப் பட்டபடிக்கு 28-மாக இருந்தது. இப்படி இருவரும் சுகமாக இருக்கிற நாளையிலே, பீபி கதீஜாநாயகி

முதல் செயினபையும், 2-வது றுக்கையாவையும், 3-வது உமுகுல் தூமையும், அதன் பின்னர், காசிமையும், அதன் பின்னர் அப்துல்லாவையும், அதன் பின்னர் இபுறுகீமையும், அதன் பின்னர் பீபி பாத்திமா நாயகியையும் பெற்றார்.

இரண்டு உலகத்திற்கும் பாதுஷாவாகிய நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுக்கு வயது முப்பத்தெட்டு நிறைந்தது. அப்போது அவர்கள் கண்ணுக்கெதிராகச் சில ஒளிவுகள் தெரிகிறதும் மறைகிறதுமாயிருந்தன. அவ்வொளியை என்னமோவென்று பார்ப்பார்கள் பார்த்தால் அவ்வொளி தெரிகிறதில்லை. இவ்வதிசயத்தை இங்கிவ்விதங் காண்கிறேனென்னு ஒருவருடனுஞ்சொல்லார்கள். இஃதல்லாமலும் அந்தரமாயிருந்து ஒரு சத்த முழங்கும். அந்தச் சத்தத்தைக் கேட்டு இவ்விதஞ் சத்தமிட்டவர்கள் யாரென்றறிவதற்குப் பார்த்தாலும் உருவந்தெரிகிறதில்லை. அச்சத்தம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களுடைய காதுக்கு கேட்கிறதேயொழிய மற்ற மனுடர்களுடைய காதிற்குக் கேட்கிறதில்லை. இப்படிச் சில நாட் கழிந்த பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் வீட்டிலிருக்கிறதுமில்லை. ஒருவனுடனுஞ் சேருகிறதுமில்லை, தங்கள் மனதில் நினைத்ததுபோலே மலைகளினிடத்திற்போய் ஒன்றியாகத் தனித்திருப்பார்கள். இன்னும் கிறுமலையிலும்போய் இரண்டுநாள் மூன்று நாள் வரைக்குந் தனித்திருந்து பீபி கதிஜா நாயகியின் வீட்டுக்கு வருவார்கள்.

பின்னும் சிலநாள் பீபிகதிஜா நாயகத்தைத் தங்களுடன் கூட்டிக்கொண்டு போய் கிறுமலையிலிருந்து பகற்பொழுதைப் போக்கி இரண்டுபேரும் வீட்டுக்கு வருவார்கள் இப்படி வருகிற வழியும் மக்கத்திலுள்ள மரங்களும், கல்களும் பறவைகளும், மற்றுமுண்டானவைகளடங்கலும் அஸ்ஸலாமு அலைக்கும் யாமுஹம்மதே யென்று சலாஞ் சொல்லுங்கள். அதையுங்கேட்டு மிகுந்த புதுமையாகுவார்கள். இப்படி முப்பத்தெட்டு வருஷமும் சென்று முப்பத்தொன்பது வருஷமும் ஆறுமாதமுமான பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் பீபி கதீஜா நாயகத்தின் வீட்டிலே தூங்கும்போது விதவிதமான புதுமைகளாகக் கனவு காண்பார்கள். அக்கனவு எவ்விதங் காண்பார்களோ அவ்விதம் பொழுது விடிந்தவுடனே பலிக்கும். இப்படி நடந்து வருகிற நாளையிலே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் றப்பிவுல் அவ்வல் மாதம், இரண்டாந்தேதி யென்றும் எட்டாந்தேதியென்றும் இரண்டுவிதமாகச் சொல்லப்படுகிறது. அப்போது சனிக்கிழமை யிரவையிலே தனித்துக் கிறுமலையிற்போ யிருந்தார்கள். அவ்வேளையிலே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் தங்களுடைய அழகாகியமுகத்

துடனே சிறகினை யொடுக்கிக்கொண்டு மனுடர்வடிவுபோல அவ்வி டத்தில்வந்து நபிநாயகத்தை யடுத்துநின்று அல்லாஹுத்தஆலா வுடைய தூதரே, நீர் இவ்விடத்தி லிருக்கிறீரோ வென்று கேட்டு விட்டு மறைந்துவிட்டார்.

மறுநாளும் அதுபோலவே நடுவிரவில் வந்து முன்கேட்ட முறையே கேட்டு மறைந்துவிட்டார். இதை நபிசல்லல்லாஹு அலை ஹிவசல்லங் கேட்டு இஃதென்ன காரணமோ தெரியவில்லை, இன்று மிங்கிருந்து நடப்பதை முழுது மறிவோமென் றெண்ணித் தாங்கள் உட்கார்ந்த விடத்தைவிட்டும் அப்புறம் போகாமலிருந்தார்கள். அதன்பின்னர் றபீயுல் அவ்வல் மாதம் பத்தாந்தேதி திங்கட்கிழமை யிரவு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல் லம் அவர்கள் கண்ணெதிரே யுருவு தெரியும்படியாக நின்று அல்லா ஹுத்தஆலாவுடைய தூதராகிய நபியே யுமக்கு அல்லாஹுத்தஆலா சலாஞ் சொன்னானென்று சொன்னார் பின்னர் மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், செம்பவளம், புட்பராகம் இப்படிப்பட்டவைகள் பதித்த ஒரு வெள்ளையுடையுங் கொண்டுவந்து முதல் ஜிபுரீல் அலை ஹிஸ்ஸலாம் கலிமாவையோதி நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத் துடைய வலது கையிற் கொடுத்தார் அதை நபிசல்லல்லாஹு அலை ஹிவசல்லம் வாங்கினார்கள் வாங்கியவுடனே வானத்திற்கும் பூமிக் கும் ஒரே யொளியாக வொளிவு பொங்கிப் பிரகாசித்துக் கொண் டிருந்தது.

அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிசல்லல்லாஹு அலைஹி வசல்ல மவர்களுடைய முகத்தைப் பார்த்து உமக்கு அல்லாஹுத்த ஆலா இன்றைக்கே நபிப்பட்டங் கொடுத்தான். ஆனபடியினாலே உம் முடைய வேதத்தை யோதுமென்று சொன்னார். அது கேட்டு நபி நாயகம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்துடைய முகத்தைப் பார்த்து எனக்கு யாதாமொரு எழுத்துந் தெரியாதே. ஆதலால் நானெப்படி வேதமோதுவே னென்று சொன்னார்கள்.

அதுகேட்டுச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மெள்ளக் கட்டியணைத்து நெருக்கி விட்டு வேத மோதுமென்று சொன்னார், அதற்கும் நபிநாயகம் நான் ஓதினவனல்லவே யாதலால் எனக்கு ஓதத்தெரியாதென்று சொல்லி னார்கள். பின்னர் ஜிபுரீல் முன்போலவே கொஞ்சம் உரமாக நெருக்கி வேதமோது மென்று சொன்னார். அதற்கும் நபிநாயக முன்சொல் லியபடியே சொன்னார்கள். அதன் பின்னர் மூன்றாவதும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயக மவர்களுடைய சரீரமெல்லாம் வேர்க்கும் படியாக உரமாகக் கட்டி யணைத்துவிட்டு வேதமோது மென்று

சொன்னார். அதற்கு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் என்னை என்ன ஓதச்சொல்லுகிறீர் சொல்லுமென்று கேட்டார்கள்.

அதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்தைப் பார்த்து இக்றவ் என்னும் சூறத்தோதுமென்று சொன்னார். அதைக்கேட்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் எழுத்துத் தவறாமலும் சொல் பிறழாமலும், பொருள் வேறாகாமலும் நன்றாய்த் திருத்தமாக மாலம் யகுலம் வரைக்கும் ஓதினார்கள். அதைச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் கேட்டு மிகுந்த சந்தோஷத்துடனே போய்விட்டார் அதன் பின்னர் நபிநாயகம் அம்மலையிலிருக்கப் பயமாய்க் குளிர் சுரத்தோடு தங்கள் வீட்டுக்கு வந்தார்கள் அதை பீபீகதீஜாநாயகிகண்டு மிகுந்த கலவரப்பட்டு இதென்ன புதுமை யென்று கேட்டார். அதற்கு நபிநாயகம் பீவி கதீஜா நாயகிக்கு ஆதியோடந்தமாக அவ்விடம் நடந்தவை யெல்லாஞ் சொன்னார்கள். அது கேட்டு கதீஜா நாயகி மிகுந்த சந்தோஷமாய் முதலில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு ஈமான் கொண்டார்.

பொழுது விடிந்தவுடனே அபூபக்கர் சித்தீக்கு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமிடத்திற்கு வந்தார் அப்போது அபூபக்கர் சித்தீக்கின் முகத்தை நபியுல்லா பார்த்து நீர் கலிமா ஓதுமென்று சொன்னார்கள். அதற்கு அபூபக்கர் சித்தீக்கு சொன்னார் முன்னுள்ள நபிமார்கள் யாதொரு காரணங்களைக் காண்பிக்காமல் தீனிலழைக்கவில்லை. அப்படி நீரேதாவது ஒரு புதுமையைக் காண்பித்தால் நானும் ஈமான் கொள்ளுவேனென்று சொன்னார்.

உடனே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அபூபக்கர் முகத்தைப்பார்த்து நீரின்றிரவு தூங்கும்போது உமது மடியிலே சந்திரனுஞ் சூரியனும் விளையாடும்படியாகக் கண்டீரே யது போதுமானதென்று சொன்னார்கள். அது கேட்டுடனே அபூபக்கர் சித்தீக்கு கலிமா ஓதி ஈமான்கொண்டார். அபூபக்கர் சித்தீக்கானவர் தம்மினத்தார்களுக்குள் நல்ல அறிவாளிகட்கு இச்செய்தியைத் தெரிவித்ததில் அவர்கள் கேட்டுச் சந்தோஷமாகித் தங்களில், ஆரிதினுடைய மகன் சைதென்பவரும், அப்துர் றகுமானும், சுபைறும், தல்காவும், சகுதும் ஆகிய இப்பேர்க்கொத்த தலைமையானவர்களும் உதுமானுருமாகக் கலிமாச்சொல்லி ஈமான் கொண்டார்கள்.

இப்படி யிருக்கிற சமயத்தில நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு வஹிராதிருப்பதினாலே அவர்கள் மனதில் மிகுந்த வியாகூலமாக இருந்தார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் முசம்மிலெனும் குறானின் ஆயத்தைக் கொண்டு வந்து கொடுத்தபோது,

நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடைய மனமிகுந்த சந்தோஷ மாயிருந்தார்கள். அப்போது ஜிபுரீல் அலைகிஸ்ஸலாம் தொழுகையின் முறையும், உலுவின் முறையுங் காண்பித்துக் கொடுத்து விட்டுப் போய்விட்டார் பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் இதை இசுலாமாகிய அசுஹாபிமார்களுக் கெல்லாம் கற்பித்துக் கொடுத்தார்கள். அதை அவர்க ளெல்லோருங் கற்றுக்கொண்டு அப்படியே நடந்துவருகிற வேளையிலே நபிப்பட்டம் வந்த காலம். வருஷம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு நீங்கள் இருட்டிலும் யாருமில்லாதவிடத்திலும் தொழவேண்டியதில்லை. எல்லாரும் பார்க்கும் படியாகத் தொழுது கொள்ள அல்லாஹுத்தஆலா சொன்னானென்று ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வஹிகொண்டு வந்து சொன்னார்கள். அப்படியே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தங்களுடைய அசுஹாபிமார்களுக்கு உத்திரவு செய்தார்கள் அதுபோல் அவர்களும் அன்று முதலாக எங்கே அவர்களுக்குச் சுத்தியான இடம் அகப்படுமோ அங்கேயெல்லாந் தொழுதுகொண்டு வந்தார்கள்.

அப்படித் தொழுதுகொண்டுவருகிற நாளையில் ஒருநாள் சுகுது என்பவர் ஒரு மரத்தடியில் உலுச்செய்துகொண்டு தொழுகைபி விருந்தார். அப்போது, சில காபிர்கள் அவ்விடம் வந்து அவர் நிற்கிறதும் றுக்கூவுசெய்கிறதும், சுஜூதுசெய்கிறதும், இருப்பிருக்கிறதும், சலாங் கொடுக்கிறதும், ஆகிய இவைக ளெல்லாவற்றையும் பார்த்து ஆச்சரியப்பட்டு சகுதைப்பார்த்து, எண்ணகாணும்சகுதே உமக்கிந்தக்கேடு வந்து பிடித்ததென்று கேட்டார்கள். அப்போது, சகுதவர்களுக்கு மிகுந்த கோபமுண்டாய் அவர்களைப் பார்த்து ஓகோ காபிர்களே நீங்கள் அல்லாவையும், அவன் தூதர் முஹம்மது நபியையும், விட்டுவிட்டுக் கல்லுகளை வணங்குகின்ற காபிர்களாக இருக்கின்றீர்கள் ஆதலால், அவைகளை விட்டுவிட்டு இனி நீங்கள் இசுலாத்தில் வாருங்களென்று கூப்பிட்டார். அதைக்கேட்டு, இந்த காபிர்கள், மிகுந்த கோபமாய் ஒருவர்க்கொருவர் வாதிடும்போது சகுதென்பவர் அவ்விடத்திற் கிடந்த ஒட்டகையின் எலும்பினால் ஒருவன் தலையில் அடிக்க, அந்த அடியால், அவன் தலை யுடைந்து இரத்தம் வெளிப்பட்டது. அதை அவர்கள் கண்டு, இருவரையும் விலக்கிவிட்டுப் போய்விட்டார்கள். அதன் பின்னர், இச்செதிபெல்லாம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடனே சகுது வந்து சொன்னார்.

அதன் பின்னர், நபிப்பட்டம் வந்த ஐந்தாவது வருஷத்தில் ஓரிரவு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் வீட்டிலே தனித்திருந்துக்கொண்டு, தங்களிரண்டு கையுமெடுத்தேந்தி, அல்லாஹுத்தஆலா

வைப் பலபலவிதமாகப் புகழ்ந்து, ஆண்டவனே! உமறுகத்தாபை யாவது, அல்லது அபூஜகலையாவது, என் வசமாகும்படி செய்தால், நான் தீனை வளர்த்துக்கொண்டு வருவேனென்று துஆக் கேட்டார்கள். அன்றிரவு போய்ப் பொழுது விடிந்தபோது, அபூஜகில் தன்னினத்தாராகிய ஒலீது உத்துபா உமாறு, உக்குபா, சைபா இப்பேர்ப்பட்ட தலைமையாகியவர்களெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து, இந்த முஹம்மதினால் நமது மார்க்கமெல்லாங் கெட்டுப்போகுதே ஆதலால் அவனை எவ்விதத்திலாவது கொல்லப்பட்டவர்கள் யாரென்று கேட்டான். அதற்கங்கிருக்கும் யாவரும் வாய் திறக்காமற் சும்மா யிருந்துவிட்டார்கள். அப்போது, உமறுகத்தா பெழுந்து, அந்த முஹம்மதை நான் வெட்டி வருகிறேனென்று வெளிப்பட்டுப் போனார். அப்படி யிவர் போகிற வழியில் ஒரு மாடானது மேய்ந்து கொண் டிருந்தது. அம்மாடு, உமர் போகிற வேகத்தைக் கண்டு, ஓகே உமரே! நீர் எங்கே போகிறீரென்று கேட்டது. அதற்கு உமர் நான் முஹம்மதை வெட்டப்போகிறேனென்று சொன்னார். அது கேட்டு, மாடு ஓகே உமரே! நீரென்னை வெட்டினீரேயானால், அந்த முஹம்மதை வெட்டுவீ ரென்பதற்குச் சந்தேகமில்லை யென்றது. அதைக்கேட்டு, உமறு கத்தாபு மிகு கோபமாக அம்மாட்டை வெட்டினார். அது இவர் வெட்டுக்கு அகப்படாமல் முன்னால் வெட்டினாற் பின்னால் வரும். பின்னால் வெட்டினால் முன்னால் வரும். இப்படி அகமுகமும் ஓடி ஓடி இவர் வெட்டு அகப்படாமல் அசறுவேளை வரைக்கும் இவரை வருத்திவிட்டது.

அப்போது, உமர் பொழுதுபோகிற வேளையாயிற்று. நாளைய தினம் முஹம்மதை வெட்டலாமென்று திரும்பி வந்து அபூஜகள் முதலிய மற்றுமுண்டான பேர்களுக்கு இச்சேதியைச் சொன்னார். அதை அபூஜகில் கேட்டு, ஓய் உமரே! நீர் அந்த முஹம்மதுடைய சூனியங்களை இப்படிப்பட்ட அநேக சூனியங்களைக் கண்டாலும் முன்னர் கொண்ட நினைவை மறக்காதேயுமென்று சொல்லிவிட்டு எல்லோரும் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

அதன் பின்னர் உமறுகத்தாபும் தன் வீடுபோய்ச் சேர்ந்தார். அன்றிரவு போய்ப் பொழுது விடிந்தவுடனே உமறெழுந்து முஹம்மதை வெட்டவேணுமென்று நினைத்து கஃபாவுக்கு வந்தார். வந்தவிடத்தில் அங்கே யோர் புதுமையைக் கண்டு நேராகத் திரும்பித் தன் சகோதரியாகிய பாத்திமா வீட்டுக்கு வந்தார். அங்கே அப்பாத்தி மானவர்கள் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு ஈமான் கொண்டு புறுகாண் வேதத்தைக் கப்பாபென்பவரிடத்திற் பாடங் கேட்டுக்கொண் டிருந்தார்கள். அவ்வேளையில் உமறு கத்தாபும்

போனார். பாத்திமா அவர்கள் உமறைக் கண்டு பயந்து கப்பாவை யொளித்து வைத்துவிட்டு வீட்டின் வாசற்படியில் வந்து நின்றார்கள். அப்போது உமருகத்தாபு தமக்கையாகிய பத்திமாவுடைய முகத்தைப் பார்த்து, நீங்களென்ன ஓதிக்கொண் டிருந்தீர்களென்று கேட்டார். அதற்கு பாத்திமா பயந்து நாங்களொன்று மோதவில்லை முன்னுள்ள வேதத்தை ஓதிக்கொண்டு யிருந்தோ மென்றார்கள். அது கேட்டு மிகுந்த கோபத்துடனே யுமறுகத்தாபு தன் கையிலிருந்த ஆயுதத்தினாலே தமக்கையாகிய பாத்திமா அவர்களின் தலையிலடித்தார்.

அவ்வடியினால் அவர்கள் தலையுடைந்து இரத்தம் வெளியானது அவ்விரத்தத்தைக் கண்டவுடனே யுமறுகத்தாபுடைய மனதிலிருந்த கோபமும் அழுக்கு மெடுபட்டுப் போயினது. அப்போது மிகுந்த வணக்கத்துடனே யுமறுகத்தாபு தமக்கையாராகிய பாத்திமாவைப் பார்த்து நீங்கள் ஓதிக்கொண்டிருந்ததை யெனக்குச் சொல்லுங்களென்று பலதரம் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டார். இவ்விதம் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டதை பாத்திமா அவர்கள் யோசித்து இப்போது உமறு நல்ல மனதுடனே கேட்கிறார். இனி யொளிக்கக் கூடாதென்று தம்பியாகிய வுமறைப் பார்த்து, நாங்க ளோதியது புறுக்காண வேதமென்று சொன்னார். அப்போது உமறு கத்தாபு தமக்கையாரைப் பார்த்து அவ்வேதத்தை என் கையில் கொடுங்கள் நான் பார்க்க வேணுமென்று கேட்டார். அதற்குத் தமக்கையார் உமறு கத்தாபினுடைய முகத்தைப் பார்த்து நீர் சுத்தியில்லாம லிருக்கிறீர். ஆதலால், நீர் தண்ணீர் வார்த்துக்கொண்டு சுத்தியான உடையுமுடுத்திக் கொண்டு வந்தால் அந்தச் சுத்தியான வேதத்தை யுமது கையிற் கொடுப்பேனென்று சொன்னார். அதுகேட்டு உமறு கத்தாபு சரேலென்று போய் முழுகிக் குளித்துத் துப்புரவாகிய உடையுமுடுத்திக்கொண்டு வந்தார்.

வந்தவுடனே அவ்வேதத்தைப் பாத்திமா அவர்களெடுத்துக் கொண்டு வந்து உமறு கையிற் கொடுக்க அதை யவர் வாங்கிக் கண்ணில் ஒத்திக்கொண்டு தமக்கையின் முகத்தைப் பார்த்து முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் எங்கே யிருக்கிறார்கள் எனக்குச் சொல்லுங்கள் நான் ஈமான் கொள்ளுகிறேனென்று சொன்னார். அது கேட்டுப் பாத்திமா அவர்கள் நபியுல்லா இருக்குமிடத்தைச் சொன்னார்கள். உடனே யுமறுகத்தாபு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மிருக்கும் யிடத்தை தேடிப்போய் ஈமான்கொண்டு இசுலாத்திலாயினார்

அன்றுமுதல் தீனானது பூமியில் வேரூன்றிப் படர்ந்தது. இந்தச் சங்கதியைக் காபிரீன்கள் கேட்டு மிகவும் திகிலடைந்தார்கள்.

பின்னர் தீனில் இசுலா மார்க்கம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது. அப்போது காபிர்கள் இசுலாத்தில் வர நாடி நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமிடத்தில் என்ன என்ன காரணத்தை மனதில் நினைத்துக் கேட்பார்களோ அந்தக்காரணங்களை யெல்லாங் காண்பித்து எல்லாரையும் இசுலாத்திற் சேர்த்துக் கொண்டு வந்தார்கள், இப்படி நடக்கிற நாளையிலே அபூஜஹில் திமஸ்குப் பட்டணத்தை யாளுகின்ற ஹபீபு இராஜனுக்கு இச்செய்தி யெல்லாம் குறித்துக் காயிதமெழுதி அவரை மக்கத்துக் கழைப்பித்தான், அந்த ஹபீபரசனும் மக்கத்து வந்து நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைக் கொண்டு முன்னுள்ள வேதங்களிற் சொல்லியபடி யிவர் அல்லாஹுத்தஆலாவுடைய தூதரென்பது நிசமாக இருக்கில் நாம் நினைத்தபடி சந்திரனைப் பூமியில் வரவழைப்பாரே யானால் ஈமான் கொள்ளுவோ மென்று உறுதி கொண்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களை அழைப்பித்து நீர் அல்லாவின் தூதரென்பது நிசமேயானாற் சந்திரனை அழைப்பியும் அப்படி நீர் சந்திரனை யழைப்பித்தால் நாங்கள் எல்லோரும் ஈமான் கொள்ளுவோமென்று சொன்னார்.

அப்படியே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அம்மாவாசியிரவிற் சந்திரனை அழைப்பித்தார்கள். அதைக் கண்டு ஹபீபுராஜா மெத்தவும் சந்தோஷமானார். அதன்பின்னர் அவரிடத்திற் வெகு காலமாக ஒரு தசைக்கட்டி யிருந்தது அதையும் பெண்ணுருவாகச் செய்தார். இவை யெல்லாம் ஹபீபு ராஜாவும் அவர் மந்திரிமார்களும் அவர் சேனைகள் அடங்கலுங் கண்டு நிசமாக இவர் அல்லாஹுத்த ஆலாவினுடைய தூதரென்று எல்லோரும் கலிமாச்சொல்லி ஈமான் கொண்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு மிகுந்த தாழ்ச்சியுஞ்செய்து தங்கள் திமிஸ்குப் பட்டணம்போய்ச் சேர்ந்தார்கள். இவ்விதமாக காரணங்கள் எத்தனையோ நபிநாயகமவர்கள் மனுடர்களுக்குக் காண்பித்து அவர்களைத் தீனிற் சேர்த்துக்கொண்டு வருகிற நாளையிலே நடந்த சங்கதி யென்னவென்றால்,

## மிகுறாஜு செய்த புதுமை.

நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஓரிரவு சபாமறுவா மலைக்கிடையில் பீவியும் முஹபீபா வீட்டில் நித்திரை செய்துகொண்டிருந்தார்கள். அவ்விரவு நாய்களும் குரைக்கவில்லை, இருட்டு மின்னலும் இடியுமாயிருந்தது. அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மிகுந்த அழகுடனே சிங்காரித்துக்கொண்டு வந்தார். அவருக்கு இரண்டு

க்கமும் சிறகுகள் மரகதத்தினாலும் முத்துகளினாலும் சிங்காரித்திருந்தது, அச்சிறகு ஆறு நூறுண்டும். அதில் ஒவ்வோர் சிறகுக்கிடை அஞ்சு நூறு வருஷத்துப் பயணமுண்டும். அவருடைய நெற்றிக் கலிமாவும் எழுதியிருந்தது. இந்தச் சிங்காரத்தோடும் அவர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைத் தட்டி யெழுப்பினார். அப்போது நபியுல்லா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து இந்நேர இரவில் என்னிடத்திற்கு நீர் ஏன் வந்தீரென்று கேட்டார்கள். அதற்குச், ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்தைப் பார்த்து உம்மை அல்லாஹுத்தஆலா மிகுறாஜுக் கழைத்துவரச் சொன்னான். அதற்காக வந்தேனென்று சொன்னார்.

அதுகேட்டு, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மிகுறாஜுக்குப் போகச் சந்தோஷமா யிருக்கிற வேளையில், மீக்காயில் அலைஹிஸ்ஸலாமும் அவர்கூட றாக்காயிலுமாகப் புறுக்கென்னும் வாகனத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த புறுக்கினுடைய வடிவு கழுதையிலு முயரம் கோவேறு கழுதையிலு மட்டம். முகம் வெள்ளையாய் மனுடர் முகம்போலும், தலை குதிரையின் தலைபோலும், நெஞ்சு லியினெஞ்சு போலும். கால் யானையின் கால்போலு மிருந்தன அந்த புறுக்கி லிருபக்கமும் சிறகுகளிருந்தன, அதினுடைய இரண்டு கண்ணுக்கிடையில் கலிமா எழுதியிருந்தது. இன்னும், அநேக சிங்காரிப்பெல்லாஞ் சிங்காரித்திருந்தன. அந்த புறுக்கின் பேரில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஏறிக்கொண்டுபோன நாளானது, நபிப்பட்டம் பெற்ற பனிரண்டாம் வருஷம், றஜபுமாதம் இருபத்தேழாந் தேதி திங்கட்கிழமை யிரவென்றும் சினானுஸ் ஸீறென்னும் கித்தாபிற் சொல்லப்படுகிறது மிகுறாஜும், மாலையில் ஹிஜுறத்துக்கு முன் எட்டாமாதம் றமுலான் மாதத்தில், ஒன்பதாந்தேதி, சனிக்கிழமை யிரவென்றுஞ் சொல்லப்படுகின்றது.

பின்னர், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைச் ஜிபுரீல் புராக்கில் ஏற்றிக்கொண்டு போகிற வழியில் ஒரு மலையானது மிகுந்த பிரகாசமாகத் தெரிந்தது, அந்த மலையைக் கண்டவுடனே, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகத்தைப் பார்த்து, அல்லாவுடைய றசூலே நீர் இந்த இடத்திலிறங்கி இரண்டு றக்குஆத்துத் தொழுது கொள்ளுமென்று சொன்னார். அப்படி, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தொழுது முடித்து புறுக்கின்மேலேறிக் கொண்டு போகும்போது, தாங்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து யாஜிபுரீலே, இம்மலையின் புதுமை யென்னவென்று கேட்டார்கள். அதற்குச் ஜிபுரீல், இம்மலை மூசாநபி அல்லாஹுத்தஆலாவுடனே பேசிய மலை யென்று சொன்னார். அதுகேட்டு, நபிநாய

கம் அப்புறம் நடந்து போகையில், இருண்ட காடாகவும் முள்ளு நெருங்கிய இடமாகவும் ஒரு வாசற்படி தெரியக் கண்டார்கள் அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்தைப் பார்த்து முஹம்மதே நீர் இவ்விடத்திலும் இரண்டு றக்கு ஆத்துத் தொழுதுகொள்ளுமென்று சொன்னார். அப்படியே, நபிநாயகம் தொழுது கொண்டு போகிறபோது. நபிநாயகம். ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்துயாஜிபுரீலே யிதின் புதுமையைச் சொல்லுமென்று கேட்டார்கள் அதற்குச் ஜிபிரீல், யாறசூலே இது ஈசாநபி பிறந்த இடமென்று சொன்னார்.

அதைக் கேட்டுக்கொண்டு, நபிநாயகம் அப்புறம் நடக்கையிலே யாறசூலே நான் சொல்லுகிற சொல்லானது, நலமானதா யிருக்கும் ஆதலால் அச்சொல்லை நீர் நின்றுகேளுமென்றார். சத்தம்வந்தது அப்போது, ஜிபுரீல் அலைகிவஸல்லாம் நபிநாயகத்தைப் பார்த்து, முஹம்மதே நீரந்தச் சொல்லுக்குப் பதிற் சொல்லாதேயு மென்று சொன்னார். பின்னர். நபிநாயகம் அவ்விடத்தைத்தாண்டி அப்புறம் போகையிலே, இடதுபுறத்திலிருந்து மோர் சத்தம் வந்தது. அதற்குப் பதில் ஜவாபு சொல்லாதேயு முஹம்மதே யென்று ஜிபுரீல் சொன்னார். பின்னர் நபிநாயகம் அவ்விடத்தையும் விட்டு அப்புறம் போகையில், அனேகவிதமான புதுமைகளெல்லாங்கண்டு பயித்துல் முகத்தீசுக்குள்ளே போய், அங்கே நபிமாறை யெல்லாந் தொழவைத்து அவ்விடத்தில், அனேக வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு அவ்விடம்விட்டு, முதல்வானத்தி னுள்ளாகப் போனார்கள். அங்கேயோர் பெரியவரிருக்கக்கண்டு. நபிநாயகம், ஜிபுரீலோடு மிவர்கள் யாரென்று கேட்டதற்குச் ஜிபுரீல் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைப் பார்த்து, இவர் தான் உம்முடைய தகப்பனார் ஆதமலைஹிஸ்ஸலாம் ஆதலால் முஹம்மதே நீர் இவருக்கு சலாஞ் சொல்லுமென்று சொன்னார்.

உடனே, நபிநாயகஞ் சலாஞ் சொன்னார்கள். அதற்கு பாவா ஆதம் அவர்கள், பிரத்தி சொல்லித் துஆவுஞ் செய்தார்கள் பின்னர் நபிநாயகம் அவ்வானத்தை விட்டும் இரண்டாம் வானத்திலுள்ளானார்கள். அவ்விடத்தில், எஹியாநபியும், ஈசாநபியும் கண்டு அவர்களுக்குச் சலாம் சொல்லிச் சிலபேச்சும் பேசிக்கொண்டு, அவ்விடம் விட்டு நாலாம் வானத்தி னுள்ளானார்கள். அவ்விடத்தில் இதுரீசு நபியைக் கண்டு சலாம் சொல்லிக் கலந்து பேசிக் கொண்டு, அவ்விடம் விட்டு அஞ்சாம் வானத்தி னுள்ளானார்கள். அவ்விடத்தில் ஹாறூநபியைக் கண்டு சலாம சொல்லிக் கலந்து பேசிக்கொண்டு,

அவ்விடம்விட்டு, ஆறும் வானத்தினுள்ளானார்கள். அவ்விடத்தில் மூசாநபியைக் கண்டு சலாம் சொல்லிக் கலந்து பேசிக் கொண்டு அவ்விடம் விட்டு ஏழாம் வானத்தி னுள்ளானார்கள்.

அவ்விடத்தில், பயித்துல் மஃமூரெனனும் பள்ளிவாசலின் சுவரில் இபுறுகீல் நபி அவர்கள் சாய்ந்துகொண் டிருந்தார்கள். அவர்களைக்கண்டு சலாம் சொல்லிச் சில பேச்சுகள் பேசிக் கொண்டு பின்னர் சிதுறத்துல் முன்தஹா வென்னும் இலந்தை மரத்தடியிற் போனார்கள். அந்த மரத்தடியிலிருந்து நாலு ஆறுகள் புறப்பட்டு வருகின்றன. அதில் இரண்டாறு பூமிக்கு வருகிறது. அந்தஆற்றின் பேர் நீலாறும், புருத்தாறுமாம். மற்ற இரண்டாறு சுவர்க்கத்தினுள்ளே போகிறது. அந்த மரத்தின கிட்ட போனவுடனே, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம், நபிநாயகத்தைப்பார்த்து யாறசூலுல்லா, இந்த மரத்துக்கு மேற்பட்டு வர எனக்கு, அல்லாஹுத்தஆலாவுடைய உத்தரவில்லை யென்று சொன்னார் அதுகேட்டு, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஜிபுரீலைப் பார்த்து நீர் என்னை இவ்விடத்தில் தனியவிட்டுவிட்டுப் போகிறீரோவென்று சொன்னார்கள். அதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் இதற்கு மேற்பட, இவ்விடத்திலுள்ள மலக்குகளும்மை அழைத்துக் கொண்டு போவார்கள் என்று சொல்லிப் பின்னும், யாறசூலுல்லா நீங்கள், அல்லாஹுத்தஆலாவிடத்திற் போகிறபடியினாலே,என் மனதிலோர் கியாபகமிருக்கிறது. அஃதென்னவென்றால், நாளை கிராமத்தில், அல்லாஹுத்தஆலா சிறுத்தல் முஸ்தகீம் பாலத்தை நரகத்தின் முதுகின்மேல் வைத்து உங்களும்மத்தானவர்களை நடக்கும்படியா யுத்தரவு செய்வான் அப்போது, அவர்கள் அதின் பேரில் நடப்பார்கள். அவர்களுக்கு அந்த நரகத்தின் சூடும், வருத்தமும் சேரிடும். அவ்வேளை சிறுத்தல் முஸ்தகீம் பாலத்தின் பேரில் என்னுடைய சிறகை உரிக்க அதன் பேரில் எல்லோரும் நடக்கும்படியாக உத்தரவு வாங்கிக் கொண்டு வாருங்களென்று சொன்னார்.

பின்னர், இசுறுபீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத்தஆலாவினுத்தரவின்படி, ஒளிவினால் றப்புறப் பென்னும் தகுத்தைக் கொண்டு வந்தார். அதற்கு முன்னால், முத்தினாலே எழுபதினாயிரம் திரைகளிருந்தன. அத்திரை யொவ்வொன்றிற் கிடை (500) (500) வருஷத்து வழி யுண்டும். அந்தத் திரைகளெல்லாந்தாண்டி அந்த றப்புறப்பென்னும் சிம்மாசனத்தருகு சேர்ந்தார்கள். அவ்விடத்தில் அறுஷானது நபிசல்லல்லா அலைஹிவசல்லத்தையும், அந்தச் சிம்மாதனத்தையுந் தூக்கிக் கொண்டது. அப்போ தங்கே அல்லாஹுத்தஆலாவின் சத்த முண்டாயிற்று. என் ஹபீபே இன்னம் கிட்ட

நெருங்கி வாருமென்ன, அது கேட்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தங்கள் காலிலிருக்கும் பாதரட்சையைக் கழற்றிவிட்டு ஏற வேண்டுமென்று மனத்தி லெண்ணினார்கள். அந்த வேளையில், அறுஷானது கிடுகிடென்று அசைந்தது. அப்போது ஒரு சத்தம் வந்தது. என்னுடைய ஹபீபே யும்முடைய பாதரட்சையைக் கழற்றாமல் அறுசிலேறும். அதனுடைய அசைவு நிற்குமென்றான் என்றவுடனே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் சொன்னார்கள். முன்னால் மூசா அலைஹிஸ்ஸலத்துக்கு 40-நாள் நோன்பு வைத்துப் பின்னர் பாதரட்சையைக் கழற்றிக் கீழேவிட்டுத் தூரிசினாமலையிலேறி வாருமென் றுத்திரவாயிற்றே. இந்த யிடம், அந்த யிடத்திற்கும் ஆயிரம்பங்கு பெருமை யுயர்த்தியானதே. இதன்மேல், நான் என்னுடைய பாதரக்ஷையைக் கழற்றாமல் எப்படி ஏறி வருவேனென்று சொன்னார்கள்.

உடனே அல்லாஹுத்தஆலா திருவுளமானான். என்னுடைய ஹபீபே! நான் மூசா அலைஹிஸ்ஸலாத்தைப் பாதரட்சையைக் கழற்றி விட்டுத் தூரிசினா மலையில் ஏறச் சொன்னது எதினாலே யானால், அந்த மண்ணு அவர் காலிற்பட்டு அதனால் அவருக்கு மிகுந்த பெருமையைக் கொடுத்தேன். உம்முடைய பாதரட்சையின்மண் ணிந்த அறுசிற் பட்டால், அறுஷுக்கு மிகுந்த பெருமையைக்கொடுக்க நாடியிருக்கிறேனென்று சொன்னான். உடனே நபிசல்லல்லாஹு அலைகிவசல்லம் அப்படியே, அறுஷின்மேலேறிப்போனார்கள். அவ்விடத்தில் அகமுகமும் பார்க்கும்போது, வலதுபுறமாக 312-நிம்பறும், இடதுபுறமாக முத்தினாலும், மாணிக்கத்தினாலும், கோமேதகத்தினாலும், செவந்த பவளத்தினாலும், புஷ்பராகத்தினாலும் வெகு உன்னதமான பளபளப்பு மினுமினுப்புமாகச் சோடித்து மிகுந்த உயரமாகவும் ஒரு நிம்பர் கட்டியிருந்தது.

அதை நபிநாயகம் பார்த்து இதனுடைய அதிசயமென்னென்று ஜிபுரீலைப் பார்த்துக் கேட்டார்கள். அதற்குடனே, அல்லா பாக்கத்தாலே சத்தம் வந்தது. அந்த வலதுபுற மிருக்கப்பட்டதுகள் மற்றுமுள்ள நபிமார்களுக்கும், இடதுபுறமாயிருப்பது முஹம்மதே யுமக்குமென்று அஃதெதினாலெனில், வலதுபுறம் சொர்க்கமும், இடதுபுறம் நரகமுமிருப்பதால், முஹம்மதே நீர் அந்த இடதுபுறமாக உட்காருவீரேயானால், உம்முடைய உம்மத்தானவர்களில் குற்றவாளிகள் சிலர் நரகத்திற் கிடந்து மிகுந்த வேதனைப் படுவார்கள். அதைக் கண்டு நீர் என்னைநாடி துஆக் கேட்பீரானால், நான் அவர்கள் குற்றத்தைப் பொருத்துக்கொள்வேன். அவர்களுக்கு நீரும் ஷபா த்

துச் செய்வீர். அதனால் உம்முடைய உம்மத்துகள் நெடுங்காலமாக நரகத்தின் வேதனையில் அகப்படார்களென்று சொன்னான்.

பின்னர், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை றப்புறப்பென்னும் சிம்மாசனமானது, கிபுரியா வென்னும் திரைக்குட்கொண்டு போய் விட்டுவிட்டு மறைந்துவிட்டது. அப்போது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு அவ்விடத்தில் மனதினுள் மிகுந்த பயங்கரந் தோன்றினது, அந்தவேளையில் இருந்தாப்போ லிருந்து, நபிநாயகமே யுங்களுடைய நாயன் வணக்கத்தி லிருக்கிறானென்று, ஹலறத்து அபூபக்கர் சித்தீக்குடைய சத்தத்தைப்போலொரு சத்தம் வந்தது. அதை நபிநாயகம் கேட்டு இவ்விடத்திலிருந்து அபூபக்கர் சித்தீக்குடைய சத்தத்தைப்போலே ஒரு சத்தமுண்டாயிற்றே, இதின் சபபென்னவென்று, தங்கள் மனதிலிருந்த பயம் வெளிப்பட்டுத் திடச்சித்தமாயிற்று.

அப்போது, ஹலறத்து முஹம்மது நபி சல்லல்லாஹு அலைஹி வசல்லம், அல்லாவை நோக்கிக் கேட்டார்கள். என் நாயனே! நீ வணக்கத்தைக் கொண்டும் துப்புரவா யிருக்கிறாய், இன்னும் இவ்விடத்தில் அபூபக்கர் சித்தீக்குடைய சத்தத்தைப்போல் வந்த சத்தமும் எனக்குத் தெரியவில்லையே யென்று சொன்னார்கள், அதற்கு அல்லாஹுத்தஆலா திருவுளமானான். என்னுடைய ஹபீபே, என்னுடைய வணக்கமானது உமது பேரிலும் உமது உம்மத்துகள் பேரிலும் நான் செய்கிற றகுமத்தாயிருக்கும் இன்னும் நீர் இவ்விடம்வந்தவுடனே மனதில் மிகுந்த பயங்கொண்டபடியால், உம்முடைய பயம் நீங்கும்படியாக உம்முடைய தோழராகிய அபூபக்கர் சித்தீக்கைப் போல ஒரு மலக்கை யுண்டாக்கி இவ்விடத்திற் பேசவைத்தேன். அந்தச் சத்தம் உமது காதில் விழுந்தவுடனே யுமது மனத்தின்பயம் நீங்கிப்போனது என்று சொன்னான் பின்னர் நபிநாயகம், ஒளிவினால் எழுபதினாயிரம் திரைகளைக் கடந்த, காபக் கபுசைன் என்னுந் தலத்தைச் சேர்ந்து, அவ்விடம் அஹதியத்தினுடைய வொளியைக் கண்டு, தங்கள் தலையைச் சிஜிதாவில் வைத்தார்கள்.

அப்போது, அல்லாஹுத்தஆலாவுடைய சத்தம் வந்தது. என்னுடைய ஹபீபாகிய நபியே! எனக்காக என்ன காணிக்கை கொண்டு வந்தீரென்று அதற்கு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் நான் காணிக்கையாக அத்தகியாயத்தைக் கொண்டு வந்தேனென்று சொன்னார்கள். அதற்கு, அல்லாஹுத்தஆலா திருவுளமானான், எனது ஹபீபே! இதை யும்முடைய உம்மத்தானவர்களுக்குத்

தொழுகையிலே கடைசியிலோதச் சொல்லுமென்று சொல்லிப்பின்னுந் திருவுளமானான், எனது ஹபீபே நான் வானம், பூமி, மலை, கடல், கெவி, பாதாளம், அறுசு, குறுசு, லவ்கு, கலம், சந்திரன், சூரியன், நக்ஷத்திரம், சுவர்க்கம், நரகம், மலக்குகள், மனுடர்கள், ஜின்கள், வனம், நடப்பவைகள் முதலிய மற்று முண்டான படைப்புகள் யாவற்றையு முண்டாக்கினது, உம்முடைய முகப்பத்தைக் கொண்டு, இல்லாவிட்டால் யாதொன்று முண்டாக்கேனென்று சொன்னான்.

பின்னும் திருவுளமானான், இவ்வேளை உமக்கு வேண்டுமானவைகளெல்லாம், என்னிடத்திற் கேட்டுக்கொள்ளும் நான் தருகிறேனென்று சொன்னான். அப்போது, நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தலையைச் சிஜிதாவில் வைத்து என் நாயகனே என்னுடைய உம்மத்துகள் மிகுந்த குற்றவாளிகள். அவர்களுடைய குற்றத்தைப் பொருத்துக்கொள் இன்னும், அவர்களை நரகத்தி நெருப்பைக் கொண்டும் தப்பவையென்று சொன்னார்கள். உடனே அல்லாஹுத்தஆலா நான் உம்முடைய உம்மத்துகளின் குற்றத்தை மூன்றில் ஒரு பங்கைப் பொறுத்துக்கொண்டே னென்று சொன்னான். பின்னும் நபிநாயகம் சிஜிதாச்செய்து கேட்டார்கள். அப்போதும், உமது உம்மத்துகள் எவ்வளவு பாவஞ் செய்தாலும் பொறுத்துக் கொள்வேன். ஷிறுக்குக் குபிராகிய உம்மத்துகள், குற்றத்தை பொறுக்க மாட்டேனென்று சொன்னான். இவ்விதம், அல்லாஹுத்தஆலாவிடத்தில், நபிநாயகம், அநேகவிதமாகியவைகளைப் பேசிக் கொண்டு திரும்பி மக்கத்துக்கு வந்துவிட்டார்கள்.

## ஹிஜுறத்து போன சிறப்பு.

நபிநாயக முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம், அல்லாஹுத்தஆலாவின் உத்திரவின்படிக்கு, தீனைப் பூலோகமெங்கும் பெருகும்படியாகச் செய்து கொண்டு வருகிற நாளையில் அபூஜஹில், அபாசுபியான், ஒலீது, உத்துபா இப்பேர்ப்பட்ட தலைவரான காபிர்களெல்லா மொன்றுய்ச் சேர்ந்து, நம்முடைய பழைய மார்க்கத்தைப் பாழ்படுத்தித் தன்னுடைய புதிய மார்க்கத்தையுண்டாக்கித் தினம் தன் மார்க்கத்தில் வரும்படியாகச் சூனியம் வஞ்சனையால் கேட்கப்பட்டவர்களுக்குக் காரணமென்று காண்பித்து இனத்திலுள்ளவர்களை யொருவருக் கொருவரை ஆகவொட்டாமற் குடியைக் கெடுக்கின்ற முஹம்மதென்பவனை, எவ்விதத்திலாவது கொல்ல வேண்டும் என்று யோசனை செய்து கொண்டு இருக்கிற

வேளையிற் பெரிய மனுடர் போல வடிவும், நரைத்த தாடியுமாக, அந்தச் சபையாரிடத்துக்கு இபுலீசானவன் வந்து மிகுந்த வணக்க மாய் நல்ல யோசனை சொல்பவர் போல இவர்களைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினதாவது, இபுலீசு சபையோரைப் பார்த்துக் கேளுஞ் சபையாரே, நான் மிகுந்த பெரியமனுடன், மிகுந்த யுக்தி யான யோசனை சொல்லப்பட்டவன். இன்னும், என்னிடத்தில் மிகுந்த திரவியமும், மிகுந்த மனுடர் கூட்டமுள்ளவன் நான் உங் களுக்கு உதவியாக வந்தேனென்று சொன்னான். அப்போது அந்தப் பெரிய மனுடனைப் பார்த்து, அபுஜஹில் சொன்னான், நம்முடைய தெய்வத்தையும், நம்முடைய பழைய மார்க்கத்தையும் பொய்யென் று, தன்னுடைய சூனியத்தால் வரப்பட்டவர்களுக்கு இது காரண மென்று காண்பித்துச் சகல சனத்தையும் விரோதம் செய்கின்ற முஹம்மதை எவ்விதமாகச் சொல்லுகிறதென்று கேட்டான்.

அதற்கு இபுலீசு சொன்னான், அந்த முஹம்மது நித்திரை செய்யுஞ் சமையத்திலே தலையை யறுத்துக் கொண்டு, ஒருவருக்குந் தெரியாமல் வந்து விட்டால் நமது காரியமெல்லாம் பலிக்கும். இல் லாவிட்டால் பலிக்காதென்று சொல்ல, அதை எல்லோருங் கேட்டு இதுவே நல்ல யோசனை யென்று ஒத்துக் கொண்டு, அப்பொழுதே மிகுந்த வீரியமும் சாமர்த்தியமுமுள்ள குறைஷி வங்கிஷத்தார்க ளில் இருபதுபேரைத் தயார்செய்து, நீங்கள் இன்றைய இரவு முஹம்மதென்பவனுடைய தலையை அறுத்து வாருங்களென்று கட் டளை யிட்டான்.

இவ்விதம், இவர்கள் கெட்ட யோசனை செய்துக் கொண்டிருக் கையில், சிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, நபிசல்லல்லாஹு அலைஹி வசல்லத்திற்குச் சொன்னார். இன்றைய தினம் பகல், அபூஜகில் முத லாகிய காபிர்கள் உங்களுடைய தலையை இன்றைய இரவு அறுக்க யோசனை செய்து ஆள்களும் தயார் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனதால் நீங்கள் அலியாரை உங்களுடைய விரிப்பிலே, படுக்க வைத்துவிட்டு நீரும் அபூபக்கர் சித்திக்குமாக மதீனத்திற்கு கிஜு றத்தாகில், உம்முடைய தீனில் இசுலாமானது மிகுதியாய்ப் பெருகு மென்று அல்லாஹுத்தஆலா உங்களுக்குத் தெரியப் படுத்தச் சொன்னானென்று சொல்லிவிட்டுப் போயினார்.

பின்னர் இந்த விசனத்தை நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அபூபக்கர் சித்தீக்குத் தெரிவித்தவுடனே, அன்றிரவு தங்களுடைய விரிப்பில் ஹலறத்து அலியைப்படுக்க வைத்து விட்டுத் தாங்களும் அபூபக்கர் சித்தீக்குமாக மதீனத்திற்கு கிஜுறத்தானார்கள்.

அந்த நாளானது, றபீவுல் அவ்வல்மாத முதற்றேதி திங்கட்கிழமை யிரவு, நபிப்பட்டம் பெற்ற பதின்மூன்ரும் வருஷம் மிதுருசக்குப்போய் வந்த எட்டாமாதம் ஐம்பத்துமூன்ரும் வயதாயிருந்தது அதன் பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத் துடைய தலையை அறுக்கவந்த அவ்விருபது காபிரான பேர்களும் வீட்டைச் சுற்றி வளைந்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹுத்த ஆலா பெரிய தூக்கத்தை விட்டான். அதனுல் அவர்களுக்கு நபி நாயகமும் அபூபக்கர் சித்தீக்குமாக வெளியே புறப்பட்டுப் போனது தெரியவில்லை.

அதன் பிறகு இபுலீசானவன் வந்து தூங்குகிற காபிர்களை எழுப்பி முஹம்மதும் அபூபக்கர் சித்தீக்குமாக ஓடிப்போய் விட்டார்களே நீங்கள் என் காத்துக்கொண்டிருக்கிறீர்களென்று சொன்னுன். அதைக் கேட்டு இவர்கள் கத்திகளை யுருவிக்கொண்டு வீட்டினுள்ளே நுழைந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் படுக்கும் விரிப்பைப்பார்த்துக் கிட்ட நெருங்கினுர்கள். அதில் ஹலறத்தலி படுத்து நித்திரை செய்துக் கொண்டிருந்தார்கள். அவரைப் பார்த்து முஹம்மது எங்கேயென்று கேட்டார்கள். அதற்கு அலியார் அவர்களெங்கேயோ நானறியே னென்று சொல்லிவிட்டார்கள்.

அதுகேட்டு இவர்கள் ஊரடங்கலும் தேடிப் பார்த்தார்கள். எவ்விடத்திலும் நபிநாயக மகப்படவில்லை, அந்தச் செய்தியை அபூஜகிலுக்கு வந்து தெரிவித்தார்கள். அதை அபூஜகில் கேட்டுச்சொன்னுன். எனக்கு நன்ருய்த் தெரிய வந்தது. முஹம்மதும் அபூபக்கருமாக மதீனத்திற்கு ஓடிப்போய் விட்டார்கள். ஆதலால் இப்போதே நீங்கள் பின்ருெடர்ந்து போனுல் தவுர்மலையில் அதஹில் என்னுங் கெவியில் ஒளித்துக் கொண்டிருப்பார்கள். அவ்விடத்தில் தேடினுல் அகப்படுவார்களென்று சொன்னுன். அதைக் கேட்டு குறைஷிக் காபிர்களெல்லாம் அபூபக்கர் சித்தீக்கின் வீட்டிலும் தேடிப்பார்த்து அங்கேயும் இவர்களில்லாமையால் மதீனத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்.

இந்தச் செய்தியை யுடனே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்திற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து தெரிவித்துச் சொல்லினுர். நீங்களிரண்டுபேரு மிந்த அலைஹிலென்னும் கெவினுட் புகுந்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்களைக் குறைஷிக் காபிர்கள் மிகுந்த வருத்தஞ் செய்வார்களென்று இவ்விதம் ஜிபுரீ லலைஹிஸ்ஸலாமவர்கள் சொன்னதை நபிநாயகமவர்கள் கேட்டுடனே அந்த

அலைஹிவென்னும் கெவியினுட்புகுந்துக் கொண்டார்கள். அப்போது அல்லாஹு த்தஆலாவி னுத்திரவின்படிக்கு நூலிழைக்கும் பூச்சி அந்த வாசற்படியில் நூலிழைத்து விட்டது. இன்னும் அதில் இரண்டு புறுவு முட்டையிட்டுக் கூண்டுங் கட்டிக் கொண்டது. அதின் மேற் பழையதாய்த் தெரியும் படியாக ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் மண்ணையும் சேற்றையும் எடுத்தெறிந்து போய் விட்டார்.

அப்போதந்தக் குறைஷிக்காபிர்களெல்லாரு மலையைச் சுற்றிலும் கானையாறுகள் புதறுகள் செடிகள் கெவிகள் பள்ளங்கள் இவை முதலான இடங்களெல்லாந்தேடினார்கள். எங்குங் காணவில்லை ஆனால் இபுலீசுக்கு நபியுல்லா ஒளித்துக்கொண்டிருப்பது தெரியும் அதனால் அவன் நாம் மனுடர் வேஷந் தரித்துக் கொண்டு போய் முஹம்மதிருக்குமிடத்தைக் காண்பித்துவிட வேண்டுமென்று எண்ணினான் அப்போது அல்லாஹு த்தஆலாவின் உத்திரவின்படி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் தமது சிறகினாற் இபுலீசை அடித்து அவனை முஹுதென்னுஞ் சமுத்திரத்திலெறிந்து விட்டார்.

அதன்பிறகு குறைஷிக் காபிர்களெல்லாம் அகமுகமுந் தேடிப் பார்த்து வருகையில் ஒருகெவியைக் கண்டு இதில் முஹம்மது ஒளித்துக்கொண்டிருப்பாரென்று சிலர் சொல்லிச் சிலர் இதிலெப்படி நுழைவார் இதிலில்லையென்று சொல்லிச் சிலர் அவரெங்கேயு மில்லாமலெவ்விடம் போய் விட்டாரோ வென்று பேசிக்கொண்டு நிற்கையில் அந்தக் கெவியிலிருந்து இரண்டு புறுக்கள் வெளியே பறந்து வந்தது. அதைக் கண்டு அங்கே போய்ப் பார்த்தார்கள். அந்தக் கெவியின் வாசற்படியில் நூற்பூச்சி நூலிழைத்திருக்கின்றது. அதிற் புறுவு முட்டையிட்டிருக்கிறது. குப்பையும் செத்தையு மண்ணிந் தூசியுமா யிருக்கின்றது. இதில் முஹம்மது இல்லையென்று பேசிக் கொண்டு போய்விட்டார்கள்.

அதன்பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அந்தக் கெவியினுள்ளே மூன்று நாள் வரைக்கும் சிஜிதாவிலேயே யிருந்தார்கள். மேலும் அந்தக் கெவியினுள்ளே பாம்புந்தேளு மிகுதியாயிருந்தன. அதை அபூபக்கர் சித்தீக்கு கண்டு தங்கள் மேலிருந்த புடவை தலையிலிருந்தபாகை முதலிய துணிகளெல்லா வற்றையுங் கிழிந்தந்த வளைகளெல்லாவற்றையு மூடினார்கள். அதன் பின்னர் ஒரு வளையை மூடத்துணி யாதொன்று மில்லாமையாலே தங்களுடைய குதிங்காலை வைத்து அந்த வளையை மூடிக்கொண்டார்கள், அப்போது முன்னாலே அல்லாஹு த்தஆலா ஹைவான் கூட்டங்

களுக்கெல்லாம் இன்ன காலத்தில் என்னுடைய ஹபீபான முஹம்மதுநபி மதீனத்திற்கு கிஜுறத்தாய் இவ்வழியாக வந்து இக்கெவியி லிருப்பாரென்று தெரிவித்திருந்தான்.

அதினல் அவர்களைக் காணவேணுமென்று ஒரு பாம்பு வந்து அந்தக்கெவியி லிருந்தது, அதின்மூக்குக்கு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடைய மேனியில் வீசுகின்ற கஸ்தூரி வாசனை தோற்றி அது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தைக் காணவேணுமென்று வெளியிலே புறப்பட வந்தது. அப்போது அபூபக்கர் சித்தீக்கு தங்களுடைய குதிகாலால் அப்பாம்பு வரவொட்டாமல் வளையை அடைத்துக் கொண்டார்கள். அதனாலே பாம்பானது அடிக்கடிக் காலைக் கடித்தது. அப்படிக் கடித்ததும் அபூபக்கர் சித்தீக்கு தாங்கள் காலை யெடுக்காததினல் அதின் விஷம் தலைக்கேறினது.

அந்தச் சமயத்தில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் சிஜிதாவி லிருந்து தலையையெடுத்து மேனேக்கிப் பார்க்கும்போது அபூபக்கரவர்களுக்கு விஷமேறி யிருந்தது கண்டு அபூபக்கரைப் பார்த்து நீர் ஏன் இந்த ஹலாக்கா யிருக்கிறீரென்று கேட்டதற்கு அவர்கள் யாரசூலே யிந்தக் கெவியிலோர் பாம்பு இந்த வளைமுகத்திலிருந்து வெளியே வர வந்தது. அதை நான் வரவொட்டாமல் என் குதிகாலால் மூடிக்கொண்டேன். அதனல் அப்பாம்பு என்னைக் கடித்ததின்பேரில் விஷமேறி யிருக்கிறதென்று சொன்னார்கள். அதுகேட்டு நபிநாயகம் அபூபக்கர் சித்தீக்கைப் பார்த்து உமது காலை யெடுமென்று சொன்னார்கள். உடனே அவர்கள் காலை யெடுத்தார்கள், பின்னர் வளையி லிருந்து அப்பாம்பும் வெளியேவந்தது வந்ததை நபிநாயகம் பார்த்து ஓய் பாம்பே நீயேன் அபூபக்கர் சித்தீக்கைக் கடித்தாயென்று கேட்டார்கள். அதற்கப்பாம்பு நபிநாயகத்தைப் பார்த்து இருலோகத்திற்கும் நாயகமான வள்ளலான முஹம்மதே நானுங்களைக் காணவேண்டுமென் றனேக காலமாக இம்மலையிற் காத்திருந்து இன்றையத்தினம் தாங்கள் சமீபத்தில் வந்திருப்பதைத் தெரிந்து நானுங்களைக்காண வந்த வழியை யவர்கள் அடைத்தபடியாற் கடித்தேனென்று சொல்லி மிகுந்த அன்புடனே தாட்சிசெய்து கலிமாவுமோதி யீமான்கொண்டு அடிபணிந்து போய்விட்டது பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தங்கள் வாயினீறை மூன்றுதரம் தொட்டு அபூபக்கர் சித்தீக்கு அவர்கள் காலிர் பாம்புகடித்த விடத்திலே தடவினவுடனே அவ்விஷ மிறங்கிவிட்டது.

பின்னர் நாலாநாள் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களும் அபூபக்கர் சித்தீக்குமாக அந்தக் கெவியைவிட்டும் புறப்பட்டுப்

போகையில் அபூஜகிலுடைய தூதர்களிலொருவன் சுறுக்கத்தென்பவன் உருவிய கத்தியுடன் மிகுந்த ஆரபாரத்தனுகக் குதிரையின்மேலேறி மிகு ஓட்டமாக ஓடி வந்தான். அவனைக்கண்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அந்தக் குதிரையின் காலைப்பிடித்துக்கொள்ளென்று பூமிக்கு உத்திரவு கொடுத்தார்கள். உடனே பூமியானது அவன் குதிரையின் காலைப் பிடித்துக் கொண்டது. அப்போதவன் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை மிகவுங் கெஞ்சி நாயகமே! என் குதிரையின் காலைப் பூமி விடும்படி செய்யுங்களென்று சொன்னுன். அது கேட்டு நபிநாயகம் அவன் குதிரையின் காலை பூமிவிடச் செய்தார்கள். மறுபடியும் அவன் துர்க்குணத்தைவிடாமற் நபிநாயகத்தின் பேரிலே திரும்பினுன் இப்படி மூன்றுதரம் பூமி அவனையும் அவன் குதிரையின் காலையும் பிடித்துக்கொள்ளச் செய்தார்கள்.

அதன் பின்னர் அவன் பயந்து வந்த வழியே திரும்பிப்போய் விட்டான். அப்படியவன் போகிற வழியில் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை தேடி வருபவர்கட்கெல்லாம் நான் வெகு தொலைதூரம் வரைக்கும் போயிருந்தேன்; அந்த முஹம்மதை யெவ்விடத்திலுங் காணேனென்று சொல்லி அவர்களை வரவொட்டாமல் வந்த வழியே யழைத்துக்கொண்டு போய்விட்டான். பின்னர் நபியுல்லா வருகிற செய்தியை அவ்வழியிலிருக்கின்ற கிறுவுல் அமீனென்கிற பட்டணத்தை ஆளும் புரிதா அஸ்வமீனென்னும் பாத்துஷா கேள்விப்பட்டுத் தன்னினத்தார்களில் 700 பேருடன் முன்னணியாக வந்து நபிநாயகத்தைக் கண்டு அடிபணிந்து தீனில் இசுலா மார்க்கத்திலாக ஈமான் கொண்டார்கள். பின்னர் அவ்விடத்தைவிட்டு றபீவுல் அவ்வல் மாதம் 16-ம் தேதி திங்கட்கிழமை தினம் நபிநாயகம் குபாவென்னும் தலத்திற் சேர்ந்தார்கள். அவ்வூரிலனேக ஜனங்களும் ஈமான் கொண்டார்கள். பின்னர் நபிநாயகம் அவ்வூரில் நாலுநாள் வரைக்கு மிருந்தார்கள். இந்தச் செய்தி மதீனத்தாருக்குத் தெரிந்து அங்குள்ள பெரிய தலைவர்களும் ஹலறத்து உமறும் அமீர்ஹம்ஸாவு மற்றுமுள்ள அசுஹாபிமார்களுமாக அவ்விடத்திற்குவந்து நபிநாயகத்தைக் கண்டு முலாக்கதாக்கினுர்கள். பின்னர் றபீவுல் அவ்வல் மாதம் 20-தேதி வெள்ளிக்கிழமைய தினம் மதீனம்வந்து சேர்ந்து அபு அய்யூபு வீட்டிலிருந்தார்கள், இப்படிக்குச் சீறுக்கித்தாபு முதலிய கித்தாபுகளிற் சொல்லப்படுகின்றன.

நபிசல்லல்லாஹு அலைகிவசல்ல மவர்கள் மக்கத்தைவிட்டு மதீனத்திற்கு கிஜுறத்தான பத்தாம் வருஷம் மறுபடி மக்கத்திற்கு

அசுகாபிமார்களுடனே ஹஜ்ஜல் விதா ஆ என்னும் ஹஜ்ஜுக்கு வந்து துல்ஹஜ்ஜு மாதம் எட்டாம் திகதி அறபாத்மாலைக்கு அசுஹாபிமார்களுடன் போய் இரண்டு றக்குஆத்துத் தொழுது கொண்டு இருக்கும்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் கடைசியாக இந்த ஆயத்தைக் கொண்டு வந்தார்கள்.

அந்த ஆயத்தின் பொருளாவ தென்னவெனில் முஹம்மதே இன்றோடே யும்முடைய தீனில் லிசுலாம் நிறைவாயிற்று. இன்னும் என்னுடைய நிகுமத்து முடிவாயிற்று. இன்னும் உங்களுடைய தீனில் இசுலாத்தைக் கொண்டும் நானும் றாலியானேன் என்ற பொருளாம். இதை யறிந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் நமக்கு அப்பூலோகத்தைவிட்டுப் பிரிய முடிவு நாளாயிற்றென்று தெரிந்து கொண்டார்கள். பின்னர் ஹஜ்ஜு செய்து முடித்துக் கொண்டு அவ்வூரிலே தங்கள் த்ாய் தகப்பனிருந்த வீடுகளையும் பார்வையிட்டுக்கொண்டு மக்கத்தை விட்டு மதீனத்திற்கு வரப் பயணமாய்த் தங்களுடைய அசுஹாபிமார்களுடனே நான் இன்னும் வரும் வருஷத்திற்கு மக்கத்திற்கு வர முடியாதென்று திருவுளமானார்கள்.

இந்தச் சங்கதியை அசுஹாபிமார்களெல்லாங் கேட்டு நிரம்பவும் துயரப்பட்டழுதார்கள், அதன் பின்னர் அன்றைய தினமே நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்துக்கு விலாவின் பக்கம் வலியுண்டாகி அதனாலே தாங்கள் 13 வேளைத் தொழுகையை அபூபக்கர் சித்தீக்கு அவர்கள் இமாமாக நிற்க அவர்களுக்குப் பின்னின்று தாங்களுந் தொழுது கொண்டே மதீனம் வந்து சேர்ந்தார்கள்.

பின்னர், சபர்மாதம் கடைசிப் புதன்கிழமைய தினம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தலைநோவுஞ் சுரமுமாய் பீபிமைமூனு வீட்டிலிருக்க மற்ற பீபிமார்களெல்லாம் நபிநாயகத்தைப் பார்க்க வேண்டி அவ்வீட்டுக்கு வந்தார்கள், அப்போது நபியுல்லா இந்த பீபிமார்களில் ஒருவருடைய தோளிலே கையை வைத்துக்கொண்டு அவ்வீட்டைவிட்டு பீபி அயிஷா வீட்டிற்கு வந்து அவர்களுடைய மடியிலே தங்கள் நபிதலையை வைத்துப் படுத்துக் கொண்டார்கள். அப்போது பீபி ஆயிஷா சல்லல்லாஹு அலைஹிவசல்லத்துடைய முகத்தைப்பார்த்து என் தங்களுடைய சரீரம் கனத்திருக்கிறதென்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் பீபி ஆயிஷாவைப் பார்த்து எனக்குப் பிரிவு நாள் கிட்ட அடுத்து வந்ததென்று சொன்னார்கள்.

அதுகேட்டு பீபி ஆயிஷா வெகு நேரம் தன்னை மறந்து நடு நடுங்கி, மிகுந்த பெருமூச்சுடனே ஆயாசப்பட்டார்கள். அதை

நபிசல்லல்லாஹுௗ அலைஹிவசல்லம் கண்டு பீபி ஆயிஷாவுடைய முகத்தைப் பார்த்துக் கேளும். ஆயிஷாவே எல்லாருமவுத்துடைய ருசிகரம் பெரவேணுமென்று மிகுந்த திடச்சித்தமாகுமான வார்த்தைக ளெல்லாஞ் சொல்லி மனதைத் தேற்றினார்கள். பின்னர் வெள்ளிக்கிழமை நாள் வந்தது. அன்றைய தினம் ஹலறத்து பிலால்வாங்கும் சலாத்துஞ் சொன்னவுடனே நபிசல்லல்லாஹுௗ அலைஹிவசல்லம் நான்குபேர்களையுமழைத்து, அவர்களுடைய தோளிலே கையை வைத்துக் கொண்டு மிகுந்த வருத்தத்துடனே மஜீதுக்கு வந்து சேர்ந்து அங்கு சூழ்ந்திருந்த அசுஹாபிமார்களைப் பார்த்து எனக்கு உடம்பு சுகத்தில்லாதபடியினாலே அபூபக்கர் சித்தீக்கை இமாமத்துச் செய்ய ஏற்படுத்துகிறேன் அவர் பின்னால் நீங்கள் எல்லோரும் நின்று தொழுது கொள்ளுங்களென்று சொன்னார்கள்.

அதைக் கேட்டு அசுஹாபிமார்க ளெல்லாம் கோவென் றழுதார்கள். அப்போதந்த வருத்தத்துடனே நபிசல்லல்லாஹுௗ அலைஹிவசல்லம் இமாமாக நின்று தொழுவித்தானவுடனே தங்கள் அசுஹாபிமார்களுக்கு வசிய்யத்துச் சொல்லத் தொடங்கினார்கள். அஃதென்னெனில், கேளுங்கள். என்னுடைய பிறப்புகளான அசுஹாபிகளே அல்லாஹுௗத்தஆலா எனக்கு அனுப்பிய வகிப்படிக்கு அதிலுள்ள நன்மை தீமைகளை யெல்லாம் நானுங்களுக்குத் தெரியப்படுத்தி விட்டேன். இப்போ தெனக்குக் கடைசி முடிவு வேளை கிட்ட நெருங்கினது. ஆனதால் நீங்கள் மகா யெச்சரிக்கையா யெனக்குப் பின்னால் நடந்து கொண்டு வரவேண்டு மென்று சொன்னார்கள் அதுகேட்டு அசுஹாபிமார்க ளெல்லாந் திடுக்கிட்டு மெய்ம்மறந்து மனங்கலங்கிப் பெருமூச்சிட்டு வாய்விட்டுக் கோவென் றழுதார்கள்.

அந்தச் சமயத்தில் ஹலறத்து அபூபக்கர் சித்தீக்கு எழுந்து கைகட்டி நின்றுக்கொண்டு யாறசூலே யின்றிரவு நானொரு கனவு கண்டேன் அஃதென்னெனில் என் மகளாகிய பீபி ஆயிஷாவினுடைய முக்காடு மேலே பறந்து போகும்படியாகக் கண்டேனென்று சொன்னார்கள். அதை நபிசல்லல்லாஹுௗ அலைஹிவசல்லம் கேட்டு அபூபக்கரைப் பார்த்து உம்முடைய மகள் ஆயிஷா தாலி அறுப்பதற்குள்ள அடையாளமென்று சொன்னார்கள்.

பின்னர், உமரிபுனுகத்தாபு எழுந்து கைகட்டி நின்றுகொண்டு யாறசூலே யின்றைய இரவு நானொரு கனவு கண்டேன், அஃதென்னெனில், என்னுடைய நீதம் என்னைவிட்டு மறையக்கண்டேனென்று

சொன்னார். அதைச் செய்யிதுல் முருசலீன் முஹம்மது சல்லல் லாஹு அலைஹிவசல்லங் கேட்டு, உமறுகத்தாபவர்களைப் பார்த்து, ஆய் உமறே அந்த நீதம் நானாகயிருக்கு மென்று சொன்னார்கள் பின்னர் ஹலறத்து உதுமானார் எழுந்து கைகட்டி நின்று கொண்டு நபி நாயகத்தைப் பார்த்து யாறசூலே இன்றைய இரவு நானொரு கனவு கண்டேன் அஃதென்னெனில், குறு ஆணி விருந்து ஒருவர்ப் பறந்து போகக் கண்டேனென்று சொன்னார். அது கேட்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் இதை உதுமான் றலியல்லாஹு அன்குவைப் பார்த்து, ஆய் உதுமானே அந்த குறுஆணுடைய மலக்கானது என்னுடைய றூகாயிருக்கும் பறந்து போனது என்னுடலை விட்டு முயிர் பிரிந்து போவதென்று சொன்னார்கள். அதன் பின்னர் ஹலறத்து அலியார் எழுந்து கைகட்டி நின்று கொண்டு நபிநாயகத்தைப் பார்த்து யாறசூலே இன்றைய இரவு நானொரு கனவு கண்டேன் அஃதென்னவெனில் என் கையிலிருந்த கேடகம் ஒடிந்துபோகக் கண்டேனென்று சொன்னார்கள். அதுகேட்டு, நபிசல்லல்லாஹு அலைஹிவ சல்லம் அலியாரைப் பார்த்து, ஆய் அலியே அந்தக் கேடகம் நானாயிருக்கும், ஒடிந்து போனது நான் இவ்வுலகத்தை விட்டுப் பிரிவதென்று சொன்னார்கள்.

பின்னர் இமாம் ஹசனென் எழுந்து கைகட்டி நின்றுக்கொண்டு நாயகத்தைப் பார்த்து இன்றைய இரவு நாங்களொரு கனவு கண்டோம் அஃதென்னெனில் ஒரு பெரிய விருட்சம் வேரோடு கீழே சாயும்படி கண்டோமென்று சொன்னார்கள். அதை முஹம்மது நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லங்கேட்டு, இமாம் அசனென் அவர்களைப் பார்த்து அந்தப் பெரிய மரம் நானாயிருக்கும் அது இந்தப் பூலோகத்தைவிட்டுப் பிரிவதென்று சொன்னார்கள். பின்னர் பீபி ஆயிஷா எழுந்து கைகட்டி நின்று கொண்டு நபிநாயகத்தை யாறசூலுல்லா இன்றைய இரவு நானொரு கனவு கண்டேன், அஃதென்னவெனில், என்னுடைய வீட்டில் தூணானது கீழே விழக் கண்டேன் என்று சொன்னார்கள், அதைக் காத்தி முன்னபி சல்லல்லாஹு அலைஹிவசல்லங்கேட்டு பீபி ஆயிஷாவைப் பார்த்துக் கேளும். பீபி ஆயிஷாவே இந்தக் கனவு எந்தப் பெண்பிள்ளை காணுகின்றாளோ அவளுடைய புருஷனிறந்து போவாவென்று சொன்னார்கள் இச்சொல்லைக் கேட்டவுடனே எல்லா பீபிமார்களும், எல்லா அஹ்லபயித்தாரும், எல்லா அசுஹாபிமார்களும் வாய்விட்டுக் கோவென்றழுது துணிகளைக் கிழித்தெரிந்து தலை மேல் மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு கதறினார்கள். அதை ஷபியுல் முதுனபீன் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் பார்த்து

என்னுடைய தோழன்மார்களே உமக்கு மிகுந்த வருத்தமா யிருக்குமே யென்று சொன்னார்கள்.

பின்னர் றபீவுல் அவ்வல் மாதம் இரண்டாம் நாள் திங்கட் கிழமைத்தினம் அல்லாஹுத்தஆலா இசுறாயீல் அலைஹிஸ்ஸலாத்துடனே சொன்னான். அஃதாவது கேளுமிசுறாயீலே நீர் மிகுந்த பயபக்தியாகவும் அதப்பாகவும், உம்முடைய நாலுமுகத்தை யொளித்து ஓர் முகமாகவும் நல்ல அன்புள்ளவராகவும் மனுடர் வடிவெடுத்துக் கொண்டு என் ஹபீபாகிய நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மிடத்திற்குப் போய்க் கைகட்டி மிகுந்த அதபாக அவரைச் சுவர்க்கலோகத்துக் கழையும். இன்னும் நீர் அவருத்திரவில்லாமல் வீட்டினுள்ளும் புகுதவேண்டாம். அவருடைய ராசியில்லாமல் அவருடைய உயிரையும் வாங்க வேண்டாமென்று உத்திரவு செய்தனுப்பினான்.

அந்தப்படி இசுறாயீல் அலைஹிஸ்ஸலாம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களிருக்கிற வீட்டின் வாசற்படியில் வந்து நின்று கைதட்டி மெதுவாகக் கூப்பிட்டார். அந்தச் சத்தத்தால் வீடுகளெல்லாம் அதிர்ந்தன. அப்போது பீபி பாத்திமா உன் தகப்பனுக்கு உடம்பின் வருத்தமா யிருக்கிறது, நீர் இப்போது பார்க்கவும் பேசவுங் கூடாதென்று சொன்னார்கள்.

அதை இசுறாயீல் கேளாதவர்போ லடிக்கடிக் கூப்பிட்டார் அந்தச்சத்தம் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லங் காதில்விழுந்தது அவர்கள் கண்ணை விழித்து பீபி பாத்திமாவைப் பார்த்து என் மகளே பாத்திமாவே அஃதென்னவென்று கேட்டார்கள் அதற்கு பீபி பாத்திமா நாயகி நபிநாயகத்தைப் பார்த்து, என் தகப்பனாரே ஒரு அறபியானவர் கையிலே கத்தி பிடித்துக்கொண்டு வந்துநின்று வீட்டினுள்ளே வரக்கேட்டார். அதற்கு நான் இந்த வேளை வரக் கூடாதென்று சொல்லினேன். அதை அவர் கேளாமல் அடிக்கடி சத்தமிட்டுக் கொண்டிருக்கிறாரென்று சொன்னார்கள். அதை நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லங் கேட்டு பீபி பாத்திமா நாயகியைப் பார்த்துக் கேளும் பாத்திமாவே அவர் அறபியானால் நீ போவென்றதற்குப் போய் விடுவார். அவர் அறபியல்ல, அவர் பெண்டுகளை முண்டைகளாக்குகிறவர், பிள்ளைகளை யெத்தீமாக்குகிறவர். அவரை வீட்டுக்குள் அழையுமென்றார்கள். அது கேட்டு பீபி பாத்திமாநாயகி அவரை வீட்டினுள்ளே அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

இவ்விதமான மலக்கல் மவுத்து வீட்டுக்குள்ளே வந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்திற்கு முன்பு மிகுந்த அன்புடனே நின்றார், நின்றவருடைய முகத்தைப் பார்த்து நபிநாயகங் கேட்

டார்கள் என்னுடைய உடற்பிறப்பானவரே நீர் என்னைக் கண்டு பேசவந்தீரோ அல்லது என்னுயிரை வாங்க வந்தீரோ வென்ன அதற்கு மலக்கல் மவுத்து நபிநாயகமவர்களைப் பார்த்து யாறசூலே தங்கள் உத்திரவின்படி தங்களுயிரை வாங்கவந்தே னென்றார் அப்போது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் மலக்கல்மவுத்தைப் பார்த்து ஆப், மலக்கல் மவுத்தே, நீர் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வருமளவும் தாமதஞ் செய்யுமென்று சொன்னார்கள் இவ்விதம் பேசிக் கொண்டிருக்கும்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமும் வந்தார். அப்போது றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவரைப் பார்த்து யாஜிபுரீலே அல்லாஹுத்தஆலா எனக்கு 90-வயது வைத்திருக்கிறேனென்று சொல்லினனே இப்போது எனக்கு வயது 63 தானே யாகியிருக்கிறதென்று சொன்னார்கள். அதற்குச் ஜிபுரீல் முஹம்மதேயுமக்கு மிகுறாஜில் வயது 27 சென்று போயிற்றென்று சொல்லிப்பின்னும் முஹம்மதே நீர் கேளும் உம்முடைய மனதினிஷ்டபடி எத்தனை காலம் வரைக்கும் நீர் பூலோகத்திலிருக்க மனமிருக்கிறதோ அத்தனை காலம் வரைக்கும் வைக்கிறேனென்று, அல்லாஹுத்தஆலா உமக்குச் சொல்லும்படிக்குத் திருவுளமாயிருக்கிறானென்று சொன்னார். அதற்கு நபியுல்லா ஜிபுரீலைப் பார்த்து அல்லாஹுத்தஆலாவினுடைய இஷ்டம் எப்படி இருக்கிறதென்று கேட்டார்கள். அதற்குச் ஜிபுரீல் சொன்னார் அவனுடைய இஷ்டமும்மைச் சுவர்க்கத்திற்கு அழைக்க நாட்டமாயிருக்கிறது. அஃதெதினலெனில் நரகத்தில் நெருப்பைத் தணியவைத்துச் சுவர்க்கத்தை அலங்கிர்தஞ்செய்து அந்தச் சுவர்க்கத்திலுள்ள கூறுல் கீன்களை யெல்லாம் சிங்காரித்துக் கொள்ளுங்கள் என் அபீபாகிய நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம் வருகிறார். நீங்களெல்லோரும் அவருக்குப் பணிவிடைசெய்ய வேண்டுமென்று கட்டளை யிட்டிருக்கிறான். அதினல் எனக்குத் தெரியுமென்று சொன்னார்.

அதுகேட்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஜிபுரீலைப் பார்த்து யாஜிபுரீலே நான் அல்லாஹுத்தஆலாவின் கட்டளையாகிய உத்திரவுக்குச் சம்மதியாகத்தா னிருக்கிறேனென்று சொல்லிப் பின்னும் ஜிபுரீலோடும் நீரின்னும் இந்தப் பூலோகத்தில் எனக்குப் பின் எத்தனைதரம் வருவீரென்று கேட்டார்கள். அதற்குச் ஜிபுரீல் நான் பத்துதரம் வருவேன், அப்படி வருவதில் முதலிலே சபூரென்னும் பொறுமையையும், 2-வது ஷறமென்னும் வெட்கத்தையும், 3-வது முகப்பத்தென்னும் இஷ்டத்தையும், 4-வது அதலென்னும் நீதத்தையும், 5-வது பறக்கத்தென்னும் வாழ்வையும், 6-வது ஸஹாவத்தென்னும் தருமத்தையும், 7-வது சதாஹத் தென்னும்

கிஜாத்தையும், 8-வது ஹலாலென்னும் நற்றொழிலையும், 9-வது இல்மென்னும் கல்வியையும், 10-வது குருனுடைய எழுத்தையும், ஆக இப்பத்து காரியத்தையும் முடித்துக் கொண்டு போகத்தான் வருவேனென்று சொன்னார்.

அதுகேட்டு நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து என் உம்மத்துகளுடைய ஹலால் எனக்குப் பின்னால் எப்படியாகுமென்று கேட்டார்கள். அதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்தைப் பார்த்து யாறசூலுல்லாவே அல்லாஹுத்தஆலா திருவுளமாயிருக்கிறான். உமக்குத் தெரிவிக்கும்படியாக அஃதியாதெனில் உம்முடைய உம்மத்துகளைப் காப்பாற்றிக் கியாமத்து நாளையில், உமது வசம் ஒப்பிப்பே னென்று சொன்னார். அதுகேட்டு மிகுந்த சுக்கூறுகிச் சந்தோஷமாய்ப் பின்னும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமோடும் எனக்கு மையுத்துக்குக் குசல் கொடுப்பவர் யார், கபனிடப்பட்டவர் யார், ஸனாஸாத்தொழுவிக்கப்பட்டவர் யார், என்னையே இவ்விடத்தில் அடக்கஞ் செய்கிறதென்று கேட்டார்கள் அதற்குச் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் உடனே அல்லாஹுத்தஆலாவிடத்திற் போய்க் கேட்டு வந்து நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமோடு உம்மைக் குளிப்பாட்டவும் தொழுவிக்கவும், அபூபக்கர், சித்தீக்காம், கபனிட ஹலறத்து அலியாம் பீபி ஆயிஷா வீட்டில் அடக்கஞ்செய்ய இடமாம் இவ்விதம் அல்லாஹுத்தஆலா அருளினனென்று சொன்னார், பின்னர், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் தங்களுடைய அசுஹாபி மார்களுடனே வசியத்துச் செய்யத் தொடங்கினர்கள். அஃதாவது, நபிநாயகமவர்கள் அசுஹாபிமார்களைப் பார்த்து எனதன்பர்களே நீங்கள் ஹறும் ஹலால்களை அறிந்து ஹலாலைச் செய்து ஹறுத்தை விலக்கி நடவுங்கள். இன்னும் ஸக்காத்துக் கொடுங்கள் பக்கீர்களுக் கொத்தாசை செய்யுங்கள், பெண்சாதி பிள்ளை அக்கம் பக்க மற்ற பேர்கள் பேரிலும் கிருபைவையுங்கள். அவர்களை வருத்தப்படுத்தாதீர்கள் என்றிவை முதலிய அனேக விதமான வசியத்தெல்லாம் செய்து கொண்டிருக்கையில் அருகிலிருந்த அசுஹாபி மார்களெல்லாம் அந்தத் துயரத்தால் அழுதழுது தன்னை மறந்து விட்டார்கள்.

அதிலே பீபி பாத்திமா மிகுந்த துயரமாக நின்றார்கள். அப்போது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்களைப் பார்த்து அம்மா பாத்திமாவே நான்போன 6-வது மாதம் நீ என்னிடம்

வருவாய் என்று சொல்லித் திடச்சித்தம் செய்து பின்னர் நபிநாயகம் இசுருயீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து உம்முடைய அலுவலை முடித்துக்கொள்ளுமென்று சொன்னார்கள் உடனே அவர் நபி சல்லல்லாஹு அலைஹிவ சல்லத்துடைய மார்பிலே தமது கையை வைத்தார். வைத்தவுடனே பெரிய மலையை யெடுத்து மார்பில் வைத்தால் எவ்வளவு கனமுண்டோ அவ்வளவு கனமாயிருந்தது. அப்போது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் மலக்கல் மவுத்தைப்பார்த்து எனக்கே ஸக்கருத்தினுடைய வருத்தமிப்படியிருந்தால் என்னுமத்துகள் மிகுந்த எளியவர்களாயிற்றே அவர்கள் இந்த வருத்தத்தைப் பொறுக்கமாட்டார்கள். ஆகையால் அவர்களுடைய வருத்தத்தை யெல்லாம் எனக்குக் கொடுத்து அவர்களை ருகத்துச் செய்யுமென்று சொன்னார்கள்.

அப்போது மலக்கல் மவுத்து நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைப் பார்த்து யாறசூலே தங்களுடைய றூகை நான் மிகவும் எளிதாக வாங்குகிறேனென்று சொல்லிப் பின்னருஞ் சொன்னார் யாராவது பறுலுத்தொழுகை தொழுது முடிந்தவுடனே ஆயத்துள் குறுசி ஓதுவார்களேயானால் அவர்களுடைய உயிரை எப்படி வாங்குவேனுனல் தாயானவள் பிள்ளைக்குப் பால் கொடுத்து அந்தப்பிள்ளை பால் குடித்துக்கொண்டே தூங்கும்போது அத் தாயானவள் எப்படி மார்பைப் பிள்ளைக்குத் தெரியாமல் இழுத்துக் கொள்வாளோ அப்படிப்போல அவர்களுயிரை வாங்குவேனென்றார்.

அப்போது நபி சல்லல்லாஹு அலைஹிவ சல்லம் மறுபடியும் அசுஹாபிமார்களுக்கு வசியத்துச் செய்யத்துச் செய்தார்கள். நீங்கள் ஒருவருடைய புரணி பேசாமலிருந்து உங்களுடைய கல்பாகிய கண்ணுடியைப் பரிசுத்தமாக வையுங்கள். அப்போது அசுஹாபிமார்களெல்லாம் நபிநாயகத்தைப் பார்த்து யாறசூலே கியாமத்துநாள் எப்போது வருமென்று கேட்டார். அப்போது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லம் கலிமா விரலைக் காட்டினார்கள் அதுகண்டு அசுஹாபிகளிற் சிலபேர் கியாமத்துநாள் ஒரு வருஷத்தில் வருமென்றும், சிலபேர் நூறு வருஷத்தில் வருமென்று, சிலபேர் ஆயிரம் வருஷத்தில் வருமென்று சிலபேர் அல்லா ஒருவனே அறிவானென்றும் பலபலவிதமாகப் பொருள் வைத்துக்கொண்டார்கள். அவ்வேளையில், நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய றூகு சொர்க்கலோகம் போய்ச் சேர்ந்தன.

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிஊன்.

அப்போது மதீனத்திலுள்ள அசுஹாபிமார்களும் மற்றுமுண்டான ஜனங்களும் நாமினிமேல் என்ன செய்வோம். இருலோகத்திற்கும் பாத்துஷாவாகிய நபி சல்லல்லாஹு வசல்லமவர்கள் நமக்கெல்லாம் நானாவிதமாகிய அறிவுகளைச் சொல்லிக்கொண்டு சகல ஜனங்களும் தலைக்கு நிழல்போலவும், உடலுக்குயிர் போலவும், பூவுக்குதி மணம்போலவும், வெயிலுக்கு நிழல்போலவும், பயிருக்கு வேலிபோலவுமிருந்து பாதுகாத்து வந்தார்களே. இனிமேல் நாம் யார் முகத்தைப் பார்ப்போம். இனி யாரிடத்தில் புத்திமதி கேட்போமென்று அன்னந் தண்ணீர் அருந்தாமற் மதினமுழுதும் அன்றிரவு மிகுந்த துக்கமாகிய சமுத்திரத்தில் மூழ்கினார்கள்.

இன்னும் வானம், பூமி, பறவைகள், நாற்கால் மிருகங்கள், ஊர்வனங்கள், மலை, மர முதலியவைகளெல்லாம் இனி நாமிருந்து என்ன பிரயோசனமென்று சஞ்சலப்பட்டன. இப்படி எல்லாப் படைப்புகளும் விசனத்தோடிருக்கையில் அசுஹாபிமார்களும் ஹதுலபயித்தாரும் மிகுந்த துயரப்பட்டு அழுது சஞ்சலித்தும் பின்னர் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லத்தை நல்ல மணத்துடனே யெடுத்து பீபி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய முபாறக்காகிய வீட்டில் நல்லடக்கஞ் செய்தார்கள். ஆமீன் ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இரத்தினமுஹம்மது
காரணசரித்திரம்
முற்றிற்று.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ...மாலை 5-முனஜாத்து ...து | 0 | 8 |
| ...னகு பக்கிரியென்னும் சார்தர் வேஸ் கதை | 0 | 12 |
| இரத்தினமுகம்மது காரணச் சரித்திரம் | 0 | 8 |
| நசீத்துல் இஸ்லாம் ஹனுபியா | 0 | 6 |
| மேற்படி ஷாப்பியா | 0 | 8 |
| மெஞ்ஞானரத்தின அலங்காரக் கீர்த்தனை | 1 | 0 |
| இறவுசுல்கூல் படைப்போர் வசனம் | 2 | 0 |
| நகுல்மாலை மீறான்மாலை | 0 | 6 |
| சைத்தூப்படைப்போர் | 0 | 6 |
| காசீம்புலவர் திருப்புகழ் | 0 | 6 |
| பயஹாம்பரவதாரப் பல வண்ணச்சிந்து | 0 | 8 |
| நவி அவதார அம்மானை | 0 | 2 |
| பாமாளிகை பதம் 2-பாகமும் | 0 | 8 |
| திருமுடியிறக்கிய ஹதீது | 0 | 2 |
| மரணவிலக்கம் மனதை துலக்கம் | 0 | 4 |
| ராஜமணிமாலை | 1 | 0 |
| பப்பாத்தியாரம்மானை | 0 | 4 |
| அருக்கான்மாலை | 0 | 8 |
| வெள்ளாட்டிமசலா | 1 | 8 |
| புலுக்கியாருடைய கிஸ்ஸா | 0 | 5 |
| கதிசாநாயகி திருமணவாழ்த்து | 0 | 6 |
| முசல்மான்கொண்டகாரணம் | 0 | 2 |
| பீவிமரியமுடைய கிஸ்ஸா | 0 | 6 |
| சொர்க்கநீதி அடைக்கலமாலை | 0 | 2 |
| மஹரிபத்துமாலை | 0 | 10 |
| மலுக்குமுலுக்குராஜன் கதை | 0 | 6 |
| ஷை படைப்போர் | 0 | 6 |
| தமீமன்சாரி கிஸ்ஸா | 0 | 6 |
| ஷை மாலை | 0 | 6 |
| நூறுல்ஜன் அலிறவி அல்லாகு அன்குடைய கிஸ்ஸா | 0 | 12 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| சீறு வசனகாவியம் | 8 | 0 |
| புத்தூகிஸ்ஸா | 4 | 0 |
| இரத்தின விலாசம் | 1 | 0 |
| ஐந்துபடைப்போர் | 1 | 0 |
| சீறாப்புராணம் கவி | 4 | 0 |
| சைத்தூன் கிஸ்ஸா | 0 | 6 |
| பிஸ்மில்குறம் | 0 | 4 |
| ஞானமணிமாலை | 0 | 4 |
| ஷம்ஊன் நவியார் கிஸ்ஸா | 0 | 6 |
| நூறுமசலா | 0 | 6 |
| குறமாது | 0 | 6 |
| பெண்புத்திமாலை | 0 | 2 |
| தொழுகை அடவு | 0 | 2 |
| சலவாத்துப்பாட்டு | 0 | 2 |
| தீதாறுமாலை | 0 | 4 |
| தொழுகை நாமா | 0 | 2 |
| அபூஷகமாமாலை | 0 | 5 |
| சக்கூன்படைப்போர் | 0 | 5 |
| பலுலூன்சுகாபிமாலை | 0 | 5 |
| இசுவத்துநாச்சியாருடைய கிஸ்ஸா | 0 | 8 |
| பீர்ஷாம்மாள் ஹதீது | 0 | 6 |
| நெஞ்சொளிவுமாலை | 0 | 2 |
| அதபுமாலை | 0 | 10 |
| பருலுமாலை | 0 | 2 |
| நசிஹத்துநாமா | 0 | 2 |
| காசீம்படைப்போர் | 0 | 2 |
| தெளகீதுமாலை | 0 | 2 |
| சக்கறுததுநாமா | 0 | 2 |
| மணிமுத்துமாலை | 0 | 4 |
| சத்துருசங்காரம் | 1 | 0 |
| அருமைக்காரணமாலை | 0 | 6 |
| மிகுராஜுமாலை | 0 | 8 |
| ஷை நாமா | 0 | 6 |
| பொன்னரியாமாலை | 0 | 10 |
| ஞானரத்தினக்குறவஞ்சி | 0 | 2 |
| தரிக்குல்ஜன்னா | 2 | 0 |

இன்னும் வேண்டிய புத்தகங்களுக்கு அடியில் கண்ட விலாசத்...ற்கு எழுதி வி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.